கல்கி

KALKI 8-7-1973 45 காசு





பண்டைய நாகரீகத்தின்
மறுமலர்ச்சி
மபத்லால்
க்ரூப் அளிக்கும்
சேர்த்தியான துணிமணிகள்
மெஃப்ரின்
பாலியெஸ்டர் சேலைகள் மற்றும்
உடுப்புத் துணிகள்


கல்கி பொருளடக்கம்

பிரமாதீச, ஆனி 24 □ ஜுலை 8, 1973



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


புது தில்லி திரும்பிய பிரதமர்
குஜராத் குழப்பம், பீகார் பிரச்சினை, ஆந்திரா சிக்கல், மத்தியப் பிரதேச அமளி பற்றியெல்லாம் உங்கள் கருத்து என்ன?
டிட்டோவிடம் பேசினேன், ட்ருடியூவுடன் அளவளாவினேன், மொய்னிஹானைச் சந்தித்தேன், ஷீத்துடன் உரையாடினேன், ஆன்ட்ரியோட்டியிடம் கருத்துப் பரிமாறிக் கொண்டேன்....
நிருபர்கள்
பிரதமர்


முதல்வரின் கோபம்!
மது விலக்கா கேட்டே, மது விலக்கு!
புதுவரிகள்
புது வரிகள்
மக்கள்
கள்ளுக்கடை மூடியதால் மக்கள் நல்லெண்ணம்

கல்கி
மலர் 32
இதழ் 49

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

குஜராத்திலும் கோவிந்தா!

கு. சந்தானம்

பிரதமர் இந்திராகாந்தி பதவியில் அமர்த்திய மற்றொரு மாநில முதல் அமைச்சரும் கவிழ்ந்துவிட்டார்! ஆந்திரப் பிரதேசத்தில் திரு நரசிம்மராவுக்கும், ஒரிஸ்ஸாவில் ஸ்ரீமதி நந்தினி ஸத்பதிக்கும், உத்தரப் பிரதேசத்தில் திரு கமலாபதி திரிபாடிக்கும், பீஹாரில் திரு கேதார் பாண்டேயுக்கும் நேர்ந்த கதி இப்போது குஜராத் முதலமைச்சர் திரு கனஷ்யாம்தாஸ் ஒஜாவுக்கும் நேர்ந்திருக்கிறது.

இவருடைய வீழ்ச்சிக்கும் மற்ற முதலமைச்சர்கள் வீழ்ச்சிக்கும் பொதுவான காரணம் ஒன்றுதான். இந்த முதல்வர்கள் தாங்கள் பிரதமரால் நியமிக்கப்பட்டவர்கள் என்பதால், தங்களுடைய முக்கிய பொறுப்பு மாநில சட்டசபைகளுக்கானதே என்ற ஜனநாயக மரபை மறந்துவிட்டனர்; இவர்கள் சட்டசபை அங்கத்தினர்களின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற முயலாமல், எடுத்ததற்கெல்லாம் பிரதமரின் ஆலோசனையையும் காங்கிரஸ் மேலிடத் தலைவர்களின் கருத்துக்களையும் கேட்டு அதன்படி நடந்து வந்ததன் விளைவே இது. கட்சியின் சட்டசபை அங்கத்தினரிடை பிளவுகள் ஏற்பட்ட போதும், அபிப்பிராய பேதங்கள் உண்டானபோதும் அவற்றைத் தீர்த்து வைக்க முற்படாத முதல் அமைச்சர்களால் தங்களது பதவியை எத்தனை நாட்களுக்குக் காப்பாற்றிக் கொள்ள முடியும்? கட்சிப் பிளவுகளும், பூசல்களும் வளர்ந்துவிட்டால் கலவரமும் அமைதிக் குலைவும் ஏற்படத்தான் செய்யும். அதைத்தான் இந்த மாநிலங்களில் அடுத்தடுத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

சட்டசபையில் ஏற்பட்ட கட்சிப் பிளவுகளைச் சமாளிப்பதில், ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு விதமாக மத்திய அரசும், காங்கிரஸ் மேலிடமும் நடந்துகொண்டன. ஆந்திரா, ஒரிஸ்ஸா, உத்தரப் பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களில், அரசியல் சட்டத்தைப் புறக்கணித்துவிட்டு ராஷ்டிரபதி ஆட்சி திணிக்கப்பட்டது. ராஷ்டிரபதி ஆட்சி மூலம் கட்சிப் பூசல்களைச் சமாளித்துவிடலாம் என்று அரசியல் அறிவு படைத்த எவருமே ஒப்புக் கொள்ள மாட்டார்கள். நேரடியாக மாநிலத்தில் அதிகார பலம் உள்ள அமைச்சர்களாலேயே நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை என்றால், வேறெவரால் தான் சட்டசபையாளரிடம் ஒற்றுமையை வளர்க்க முடியும்? அடுத்த பொதுத் தேர்தல்கள் இம்மாதிரி சூழ்நிலையில் நடைபெற்றால் பிளவு ஏற்பட்ட காங்கிரஸ் கட்சி தோல்வி அடைவது நிச்சயம்.

பீஹார் மாநிலத்தில் ஆரம்பத்தில் ஜனநாயக முறைப்படியே சம்பவங்கள் நிகழ்ந்தன. சட்டசபையின் நம்பிக்கையைப் பெறும்படி முதல்வர் கேதார் பாண்டே கோரப்பட்டார். நம்பிக்கையைப் பெற அவரால் முடியவில்லை. அவர் பதவியிலிருந்து விலகினார். இது ஜனநாயக வழியே ஆகும். ஆனால் ஜனநாயகமுறைப்படி, சட்டசபை காங்கிரஸ் அங்கத்தினர்களைக் கூட்டி அல்லவா புதிய தலைவரைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்? அவ்விதம் செய்யாமல், இவ்விவகாரத்தை மேற்பார்வை செய்த வங்காளக் காங்கிரஸ் முதலமைச்சர், பிளவுபட்ட கட்சியாளரின் சம்மதத்தைப் பெற்று, பிரதமர் இந்திரா காந்தியிடம் புதிய முதலமைச்சரை நியமிக்கும் பொறுப்பை விடுவதென விசித்திர முடிவு செய்தார். ஜனநாயகப் பற்றுள்ள பிரதமராக இருந்தால், இந்த ஆலோசனையை ஸ்ரீமதி இந்திரா காந்தி நிராகரித்திருப்பார்; சட்டசபைக் கட்சியினரே புதுத் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று தாக்கீது விடுத்திருப்பார். ஆனால் நமது பிரதமர் முந்தைய தவறுதல்களால் நல்லறிவு பெற விரும்பவில்லை போலும்! பீஹார் மேல் சட்டசபைத் தலைவர் திரு அப்துல் கஃபூரைப் புதிய முதலமைச்சராக நியமித்திருக்கிறார். கேதார் பாண்டே, மத்திய அமைச்சர் திரு எல். என். மிச்ரா ஆகி

யோரின் பொறிகப்படியே பிரதமர் முடிவெடுத்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. எப்படியிருப்பினும் இப்போது முதல்வராக நியமிக்கப்பட்டிருப்பவர் சட்டசபையில் எந்தத் தரப்பின் ஆதரவையும் பெற முடியாத நிலைமையில் இருப்பவர். அப்படிப்பட்ட ஒருவரால் தமது மந்திரி சபையை எப்படி அமைக்க முடியும்? அமைத்தாலும் அதைக் கொண்டு எத்தனை நாட்களுக்கு ஒழுங்காக நிர்வாகம் நடத்த முடியும்? ஒரு வேளை ஜனாதிபதி ஆட்சி வந்துவிடப் போகிறதே என்ற பயம், கட்சிப் பூசல்களைக் கொஞ்ச காலத்துக்கு அமிழ்த்தி வைக்கலாம். ஆனால் இது ஒரு தத்தளிக்கும் நிலைமையே. இது நீண்ட காலம் நிலைக்காது.


குஜராத் மாநிலத்தில் பெருந்தன்மையுடன் முதல்வர் திரு கனஷ்யாம் ஓஜா பதவியிலிருந்து விலகியுள்ளார். அதே ஜனநாயக மரபுக்கு ஏற்பச் சட்டசபை அங்கத்தினர்கள் ஏகமனதாகப் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பார்களா, அல்லது தலைமைப் பதவி நியமனம் ஸ்ரீமதி இந்திராகாந்தியின் முடிவுக்கே மறுபடியும் விடப்படுமா என்பது இந்த இதழ் வெளியாகும்போது தெரிந்துவிடும்.


''மேலிடத்''திலிருந்து நியமிக்கப்பட்ட மாநில முதலமைச்சர்களால், ஒரே சமயத்தில் பிரதமர், சட்டசபையாளர் ஆகிய இரண்டு எஜமானர்களுக்குச் சேவகர்களாக இருக்க முடியாது என்ற உண்மைதான் இந்தச் சம்பவங்களிலிருந்து வெட்ட வெளிச்சமாகிறது. மாநில மந்திரி சபைகள் காங்கிரஸ் தலைவர் அல்லது பிரதமரின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியத்தான் வேண்டும் என்று எதிர்பார்ப்பது தகாது. காங்கிரஸ் செயற்குழு அல்லது காங்கிரஸ் தலைவரின் கட்டளைப்படிதான் பிரதமர் இந்திரா காந்தி செயல்பட வேண்டும் என்றால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியாதோ அப்படித்தான், மாநில முதலமைச்சர்களையும் பிரதமரின் உத்தரவுகளை ஏற்று நடக்குமாறு கட்டுப்படுத்தக் கூடாது. சட்டம் இயற்றும் பிரிவு, நீதி வழங்கும் பிரிவு என்று நிர்வாகத்தில் பாகுபாடு இருப்பதுபோல் அரசியல் கட்சி அமைப்புக்கும் கட்சியின் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் செயல்முறையில் சந்தேகமின்றிப் பாகுபாடு இருத்தல் அவசியம்.

ஓர் அரசியல் கட்சி அமைப்பின் நோக்கம், தேர்தல்களில் தனது வேட்பாளர்களுக்கு வாக்காளர்களின் ஆதரவைத் தேடித்தருவதேயாகும். ஆனால் சட்டசபையாளரின் நோக்கமோ சட்டமியற்றுதல், பட்ஜெட் விவகாரம், நிர்வாகம் போன்றவையாகும். இந்தப் பணிகள் கட்சி அமைப்பின் தலையீடில்லாமல் நடைபெற வேண்டும். இந்த உண்மையை நடைமுறையில் கடைப்பிடிக்காத வரையில், புது காங்கிரஸ் தனது கட்சிப் பலத்தைப் பெருக்கிக் கொள்ள முடியாது. தனது பலத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமானால் மாநில சட்டசபைக் கட்சி அங்கத்தினர்களுக்குத் தலைவர் நியமனம் போன்ற விஷயங்களில் முழு சுதந்திரம் அளிக்க வேண்டும். இந்த முறையினால்தான் தலைமைப் பொறுப்பு அந்தந்த மட்டங்களில் வளரும். பிரதமரிடத்திலோ, காங்கிரஸ் காரியக் கமிட்டியிடத்திலோ, எல்லா அதிகாரத்தையும் குவித்து வைத்துக் கொள்ளுவது கட்சிப் பூசல்களைத் தவிர்க்கக் குறுக்கு வழிபோல் தோன்றினாலும் ஜனநாயக முறைக்கும் சுதந்திரத் தேர்தல் மரபுக்கும் முற்றிலும் மாறுபட்டதே ஆகும். அரசியல் ஏதேச்சாதிகாரத்தில்தான் இது கொண்டு போய் விடும். அரசியல் கட்சியமைப்பின் ஜீவனைக் கொன்று அதைச் சவமாக ஆக்கிவிடும்.

பூவிருந்தவல்லியில் ஒரு புள்ளிருக்கு வேளூர்!

சென்னையிலிருந்து பதின்மூன்றும் மைலில் உள்ள பூவிருந்தவல்லி, புலியூர்க் கோட்டத்தைச் சேர்ந்த பழம் பெரும் தலமாகும். சோழர் காலக் கல்வெட்டுக்களிலேயே ''உலகுய்யக் கொண்ட சோழபுரம்'' என்றும் இவ்வூர் குறிக்கப்படுகிறது. சோழவள நாட்டின் சிறப்பு மிக்கத் தலங்களில் ஒன்றான வைத்தீசுவரன் கோவில் எனும் புள்ளிருக்கு வேளூருக்குத் தொண்டை நாட்டிலுள்ள மறுபாதியாகும் இப்பூவிருந்தவல்லி. வைத்தீசுவரன் கோவில் போலவே இங்கு தையல்நாயகி சமேத வைத்தியநாதப் பெருமானுக்குப் புராதன ஆலயம் உள்ளது. புள்ளிருக்கு வேளூர் ஆலயத்தைப் பராமரிக்கும் ஸ்ரீலஸ்ரீ தருமபுரம் மகாசந்நிதானம் அவர்களின் ஆசியுடன் பூவிருந்தவல்லி வைத்தியநாதர் ஆலயத்துக்கு ஜூலை 6-ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 7—30 மணி அளவில் மகா கும்பாபிஷேகம் நடக்கிறது. அன்பர்கள் பங்கு கொண்டு திருவருள் பெறவேணும். ''திருப்பணி கும்பாபிஷேகக் கமிட்டியார், ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம், பூவிருந்தவல்லி, சென்னை—56'' என்ற முகவரிக்குப் பொருட் காணிக்கை அனுப்பலாம்.


ஃப்ளா ஓவர்!
ஆட்சி
லாட்டரி,
மது, அதிக வரிகள்,
விலைவாசி உயர்வு,
லஞ்ச-ஊழல், மின்வெட்டு,
அரசின் ஊதாரிச் செலவுகள்
ஆகிய மக்களின் துயரச் சுமை
இந்திரா விகாஸ்
மகளிர் சுயசக்தி கோலம்
பிறந்த நாள் போஸ்டர்கள்


அணு ஆயுத குறைப்பு
நிக்சன்-பிரஷ்னேவ்
கூட்டறிக்கை
அணு ஆயுத சோதனை
பிரான்ஸ்
அணு ஆயுத சோதனை
சீனா

தமிழ் நாட்டிலே... தீரன்

நினைத்தபடியே நடந்துவிட்டது

அரைகுறை மதுவிலக்கினால் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்ய மக்களின் மீது ஏதாவது புதிய வரிச் சுமைகளைத் திணிப்ப தற்குத் தமிழ்நாட்டை ஆளும் தி.மு.க. அரசு தயங்காது என்று பொதுமக்களும் வியாபாரி களும் சந்தேகப்பட்டுப் பயந்தது போலவே நடந்துவிட்டது. பெட்ரோல், டீசல், சினிமா டிக்கெட்டுக்கள் ஆகியவற்றின் மேலான வரியையும், ஸ்டாம்பு கட்டண விகிதத்தையும் உயர்த்தி அடுத்தடுத்து கவர் னர் மூலம் இரண்டு அவசரச் சட்டங்களைப் பிறப்பித்துவிட்டது தமிழ்நாடு அரசாங்கம். நிர்வாக இயந்திரங்களைச் சீராக்கிப் பல்வேறு துறைகளில் ஏற்பட்டிருக் கும் ஊதாரித்தனமான செலவுகளை ஒழுங்கு செய்து சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் மதுவிலக்கு அமுலினால் வரும் நஷ்டத் தைப் பெருமளவு சமாளித்துவிட முடியும். மதுவிலக்கு ரத்துக்குமுன் இருந்த நிலையில் எந்த எந்த வரிச் சுமைகள் இல்லையோ அதைப் புதிதாக விதிப்பது நியாயம் என்று பட வில்லை. மதுவிலக்கை ரத்துச் செய்தபோது வருந்திய பொதுமக்களை இப்போது வேறு விதமாக வருந்த வழி செய்து தரப்பட்டிருக் கிறதே ஒழிய விமோசனமே தெரியவில்லை. பெட்ரோல் டீசல் மீது மூன்று காசு வரியை அதிகரித்திருப்பதும், சினிமா டிக்கட்டுக்களின் மீதான வரியைப் பத்து காசு முதல் முப்பது காசு வரை உயர்த்தியிருப்பதும், ஸ்டாம்பு கட்டணத்தைக் கூட்டியிருப்பதும் பொதுமக் களைப் பாதிக்கும். ஒன்றில் போனதை மற் றொன்றில் பெறலாம் என்பது தந்திரமான வியாபார மனப்பான்மை. ஒரு நாட்டு மக்களை நலமாக ஆள்வதற்கு உயர்ந்த லட்சி யங்கள்தான் பயன்படுமே ஒழிய வெறும் வியா பார மனப்பான்மை மட்டுமே பயன்படாது.

பொதுமக்களுக்குச் சிரமம்

சென்ற 25-6-73 அன்று நடுப் பகலில் திடீரென்று சென்னை நகர — ஆட்டோ — டாக்ஸி டிரைவர்கள் வேலைநிறுத்தம் செய்த தோடு மட்டுமின்றி, மவுண்ட்ரோடு, சென்ட்ரல் ஸ்டேஷன் போன்ற முக்கியமான இடங்களில் சாலைகளின் குறுக்கே தங்கள் வாகனங்களைச் சுவர் எடுத்ததுபோல் நிறுத்தி வேறுவிதமான போக்குவரத்துச் சாதனங்களை யும், தனிப்பட்டவர்களின் வாகனங்களையும் இயங்கவே முடியாமல் தடுத்தனர். போலீ ஸாரும் இதைப் பார்த்துக் கொண்டு சும்மா நிற்கவே பொதுமக்களுக்கு ஏற்பட்ட சிர மங்கள் அளவுகடந்தவை.

பகல் இரண்டு மணிக்கு மேல் இது நடந் தது. மவுண்ட்ரோடு அண்ணா சிலை அருகே நட்ட நடுத் தெருவில் ஓர் அம்பாஸிடர் டாக்ஸியிலிருந்து ரயிலுக்குப் போய்க் கொண்டிருந்த நாலைந்து பெண்கள் மூட்டை முடிச்சுப் பெட்டி படுக்கைகளோடு இறக்கி விடப்பட்டனர். இன்னொரு பகுதியில் பிரசவ ஆஸ்பத்திரிக்குப் போய்க் கொண்டிருந்த பெண் ஒருத்தியை நடு வழியில் இறக்கிவிட்டு விட்டு டாக்ஸி போய்விட்டதனால் அந்தக் கர்ப்பிணியை ரிக்ஷாவில் ஆஸ்பத்திரிக்கு அனுப்ப நேர்ந்திருக்கிறது. இரயிலுக்கும், விமான நிலையத்துக்கும் வெளியூர் பஸ்களுக் கும் விரைந்து கொண்டிருந்த பிரயாணிகள் பலர் ரோடுகள் மறிக்கப்பட்டதன் காரண மாக அங்கங்கே முடங்க நேர்ந்திருக்கிறது. டாக்ஸி டிரைவர்களின் குறை எதுவாகத் தான் இருக்கட்டும், இந்த வேலைநிறுத்தத் துக்குக் காரணமான எந்தத் தவற்றையும் பொதுமக்கள் செய்யாதபோது அவர்களைச் சிரமப்படுத்த முனைந்ததன் மூலம் டாக்ஸி — ஆட்டோ டிரைவர்கள் பொதுஜன ஆதரவை வெகுவாக இழக்க நேர்ந்திருக்கிறது.

பழுதுபட்ட மீட்டர்கள், குறைந்த தொலை வுக்கு வர மறுப்பது, மீட்டரில் ஆன தொகைக்கு மேல் அதிகமாகக் கேட்டு வற்புறுத்துவது, கூப்பிட்டால் கேட்காதது போல் விரைந்துவிடுவது, 'இன்ன இடத்துக் குத்தான் இந்த வாகனம் வர முடியும்' என்று நிர்ப்பந்தப்படுத்துவது போன்ற காரணங்களினால் டாக்ஸி போன்ற சாதனங் களிடம் நகரப் பொதுமக்களுக்கு உள்ள அதிருப்தி மேலும் பெருகுவிறதுபோல் இனியேனும் அவர்கள் நடந்து கொள்ளாமல் இருக்க வேண்டும்.

பாராட்டுக்குரிய டாக்ஸி டிரைவர்

பொதுமக்களுக்கு அசௌகரியம் புரிந்த டாக்ஸி — ஆட்டோ ஓட்டிகளைக் கண்டிக்க நேர்ந்திருக்கும் இதே சமயத்தில் ஒரு டாக்ஸி டிரைவரின் நாணயத்தையும், நேர்மையை யும் பாராட்ட வேண்டிய சம்பவம் ஒன்றும் தினசரிகளில் பிரசுரமாகியிருக்கிறது. ரூபாய் ஐயாயிரம் பெறுமானம் உள்ள நகைகள், துணிமணிகள், பொருட்கள் எல்லாமுள்ள அலுமினியம் சூட்கேஸ் ஒன்றை ஒரு பிரயாணி மறந்து வைத்துவிட்டுப் போய்விட்டார். அந்தப் பெட்டியை எடுத்துக் கொண்டு போய் உரியவரைத் தேடிச் சென்று ஒப்படைத்த அஜீஸ் என்னும் டாக்ஸி டிரைவரைப் பாராட்டி இருநூறு ரூபாய் சன்மானமாக அளித்த போலீஸ் கமிஷனர் ஷெனாய், "இதைப் போல் இன்னும் பல நேர்மையான காரியங்களைச் செய்து பல வெகுமதிகளையும், பரிசுகளையும் பெற்று அந்தத் தொகையைக் கொண்டே நீ சொந்தமாக ஒரு டாக்ஸி வாங்கிவிடலாம்" என்று அந்த டாக்ஸி டிரை வரை வாழ்த்தியிருக்கிறார். இதே போல் ரூபாய் நூறுக்கும் அதிகமான மதிப்புள்ள பொருள்களை உரியவரிடம் கொண்டு போய் அளித்த ஓர் ஆட்டோ ரிக்ஷா டிரைவரும் வெகுமதி அளித்துப் பாராட்டப்பட்டிருக் கிறார்.

கம்பம் கலகம்


ஜூன்மாத இறுதியில் மதுரை மாவட்டத்தில் உள்ள கம்பம் நகரில் நடந்த சம்பவங்களாவது தமிழ்நாடு அரசாங்கத்தின் கண்களைத் திறக்க வேண்டும். அரிசி விலை ஏற்றமும், அரிசிப் பஞ்சமும் தமிழகத்துக்கும், கேரளத்துக்கும் எல்லைப் பகுதி நகரங்களாகிய நாகர்கோயில், கம்பம் போன்ற ஊர்களிலேயே ஏற்படுவதைக் கவனிக்க வேண்டும். இதற்குக் காரணம் என்ன என்பதைக் கவனித்து அந்தந்தப் பகுதிகளில் அரிசி விலை ஏறாமலும், பற்றாக்குறை ஏற்படாமலும் அரசு பரிகாரம் காண முற்பட வேண்டும்.

மிகவும் கடுமையான அரிசிப் பஞ்சத்தாலும் அரிசி விலை உயர்வினாலும் பாதிக்கப்பட்ட கம்பம் பள்ளத்தாக்கைச் சேர்ந்த பொது மக்கள் 367 அரிசி மூட்டைகள் அடங்கிய நாலு லாரிகளை ஐயாயிரம் பேர்கள் கூடி மறித்துத் தடுத்து நிறுத்தி அரிசி மூட்டைகளை இறக்கி நகரசபைத் தலைவரின் அலுவலகத்தில் அடைத்துச் சீல் வைத்துவிட்டு இரவு முழுவதும் அங்கே காவல் இருந்திருக்கிறார்கள். அரிசியைப் பிரித்துத் தங்களுக்குப் பங்கிட்டு விநியோகிக்க வேண்டும் என்றும் மக்கள் கோரியிருக்கிறார்கள். லாரிகளையும், அரிசி மூட்டைகளையும் மீட்பதற்காக நான்கு ஆயுத ரிசர்வ் போலீஸ் படைகள் மதுரையிலிருந்து போயும், தடியடி, கண்ணீர்ப்புகை, துப்பாக்கிச் சூடு எல்லாம் நடத்தியும் அரும்பாடுபட நேர்ந்திருக்கிறது. ஒரு நிலைமைக்கு மேல் ஒரு படி ரூ. 1–80 விதம் அரிசியைத் தாங்களே எடுத்து விற்கப் போவதாகக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கியவர்கள் அறிவிக்கத் தொடங்கிவிட்டார்கள். அந்த அரிசி மூட்டைகள் உண்மையில் ரேஷன் கடைகளுக்குக் கொண்டு செல்லப்படுவதாகவும், மாவட்டக் கலெக்டர் வந்து விவரங்களைத் தெளிவு செய்யும் வரை பொறுமையாக இருக்க வேண்டும் என்றும் அங்கிருந்த போலீஸார் எவ்வளவோ சொல்லியும் கூடியிருந்த மக்கள் கேட்க மறுத்துவிட்டார்கள். முறையான லைசென்ஸ் ஏதும் பெறாமலே அரிசி தமிழ்நாட்டுக்கு வெளியே கொண்டு செல்லப்படுவதாக மக்கள் நினைத்ததுதான் இந்த வழிமறிப்புக்குக் காரணம் என்று தெரிகிறது.

கூடிய மக்கள் கூட்டத்தைக் கலைப்பதற்குப் பல முறை எச்சரித்தபின் போலீஸார் நான்கு ரவுண்டு சுடும்படி ஆகிவிட்டது. தொடர்ந்து இப்படிச் சம்பவங்கள் நடக்காமல் இருக்க அரசு கவனம் செலுத்த வேண்டும். அரிசிப் பற்றாக்குறை, அரிசி விலை ஏற்றம் இரண்டும் தொடருமானால் எந்தெந்த ஊர்களில் மக்கள் கோபம் எப்படி எப்படித் திரும்பும் என்று சொல்ல முடியாது. கோதுமை வியாபாரத்தை அரசு எடுத்தது தொடர்பாக

இறைவனடி சேர்ந்த இசையரசு

“தமிழோடு இசை பாடல் மறந்தறியாத” திரு தண்டபாணி தேசிகர் அவர்கள் நம்மை விட்டு நீங்கிவிட்டார் என்பது கலையன்பர் அனைவருக்கும் ஆறாத் துயர நிகழ்ச்சி



யாகும். உள்ளத்தைத் தொடும் கனிவோடும் கம்பீரத்தோடும் தேவாரம் முதலிய இன்தமிழ்ப் பாடல்களைப் பாடுவதில் ஈடும் எடுப்பும் இன்றி விளங்கியவர் திரு தேசிகரவர்கள். ‘இசையரசு’ என்ற விருதுபெற்ற அவரது அரியணை இன்று வெற்றிடம் தட்டிவிட்டது!

சிறு பிராயத்திலிருந்தே தந்தையாரிடம் தேவார இசையைத் தொன்று தொட்ட மரபுப்படிப் பயின்ற தேசிகர் அதிலேயே ஊறித் தோய்ந்தவர். பிற்பாடு கும்பகோணம் திரு ராஜமாணிக்கம் பிள்ளை அவர்களிடம் சாஸ்திரியமாகக் கர்நாடக சங்கீதத்தைக் கற்றுத் தேர்ந்தார். வளமும் நயமும் பொருந்திய சாரீரத்தாலும், உணர்ச்சி உருக்கத்தாலும் வெகு விரைவில் மக்களைக் கவர்ந்தார். நந்தனார், பட்டினத்தார் முதலிய திரைப்படங்களில் அவர் இசைத்த பாடல்கள் இன்றும் நம் செவிகளில் ரீங்காரமிடுகின்றன. திரை உலகம், இசை மேடை இவற்றில் மட்டுமின்றி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பதினைந்தாண்டுகளுக்கு மேல் இசைத் துறைத் தலைவராக இருந்து கலைவாணிக்குத் தொண்டு புரிந்தார். தமிழிசை இயக்கத்தின் ஓர் ஆதார ஸ்தம்பமாக விளங்கினார். சைவ மடாலயங்களில் ஆஸ்தான வித்வானாக அணி செய்தார். பண் ஆராய்ச்சியில் பயனுள்ள பணி செய்தார். தெய்வத் தமிழிசைத் துறையில் தண்டபாணி தேசிகரின் பிரிவு, நூற்றுக்கு நூறு மெய்யாகவே, ஈடுசெய்ய இயலாத இழப்பாகும்.

ராஜாஜி சிந்தனை

ஆண்டவன் சந்நிதானத்தில் படிப்பும் மேதையும் எம்மாத்திரம்? அங்கே ஊமையும் பேசும்; கபோதிகளுக்கும் கண் தெரியும். சாஸ்திரங்கள் எல்லாம் படித்தவனும் படிப்பே இல்லாதவனும் ஆண்டவனுக்குமுன் ஒன்றே.

★

உயர்ந்த நூல்களைப் படித்தாலும் மனம் காமப் பொருள்களிலேயே உலவித் திரியும். படிப்பு வேறு. ஆசைப்படும் விஷயம் வேறு. ஆசைகளினாலும் பற்றுகளினாலும் நாம் நூல்களிலிருந்து ஞானம் அடைவது தடைப்படுகிறது.

★

படிப்பதனால் மட்டும் பயன் பெற முடியாது. மொழிப் பயிற்சியைப் பெறுவோம். நல்ல சுலோகங்களை ஒப்புவிக்கலாம். மந்திரங்களைத் தவறின்றி உச்சரிக்கலாம். அவ்வளவுதான். எந்த விஷயங்களில் ஆசை செலுத்துகிறோமோ, அவைதாம் நம்மை உயர்த்துகின்றன; அல்லது தாழ்த்துகின்றன.

★

பெண்கள் துணையின்றித் தெருவிலும் மற்ற இடங்களிலும் பயமில்லாமல் செல்லும் நிலைமை ஏற்பட்டு வந்தால்தான் அந்தச் சமூகம் பண்பட்ட ஜாதியாக மதிக்கப்படும். உயர்நிலை நாகரிகத்துக்கு இதுவே அடையாளம்.

★

அவன் அருள் இருந்தால்தான் மீள்வோம் என்பது உண்மையாயினும், நாமும் எத்தனமின்றிச் சும்மா இருக்கக் கூடாது. அருள் என்பது கடற் காற்றைப் போன்றது. காற்று வீசிக்கொண்டே யிருக்கிறது. ஆயினும் அந்தக் காற்றைப் பயன்படுத்துவதற்காகப் படகுக்காரர்கள் பாய் விரித்தாலன்றிப் படகு செல்லாது. நம்முடைய உள்ளங்களாகிய பாய்களைச் சரியாக விரித்து, வீசுகின்ற அவன் அருளைப் பயன்படுத்திக் கொள்வோமாக.

வடக்கே நடக்கும் குழப்பங்களைப் போன்ற அசம்பாவிதங்கள் இங்கும் நடக்கும்படி விட்டுவிடக் கூடாது. முன் எச்சரிக்கையும் கவனமும் தேவை.


ஊக்க போனஸ்!

அன்றாட வசூலின் அடிப்படையில் டிரைவர், கண்டக்டர்களுக்கு 'ஊக்க-போனஸ் தொகை' உண்டு என்று அறிவித்தாலும் அறிவித்தார்கள், சென்னை நகர பஸ் பிரயாணிகள் எந்தக் காலத்திலும் கண்ணால்கூடப் பார்த்திராத சில புதுமையான அநுபவங்களை இப்போதெல்லாம் அடைகிறார்கள்.

பஸ்களை ஸ்டாப்பில் நிறுத்தாமலே டபிள் விஸில் கொடுப்பது இல்லை. பிரயாணிகள் பாதி ஏறிக் கொண்டிருக்கும்போதே பஸ்ஸைச் சர்ரென்று கிளப்பிக் கொண்டு விரையும் பழக்கம் திடீரென்று எல்லா டிரைவர்களுக்கும் மறந்தே போய்விட்டது போல் தோன்றுகிறது. நிறுத்த வேண்டிய இடத்துக்குச் சிறிது தொலைவில் வந்து கொண்டிருக்கும் ஒரு பிரயாணிக்காகக்கூடக் காத்திருந்து ஏற்றிப் போகும் விநோதத்தை இப்போது மக்கள் வியப்போடு கண்களை அகல விழித்துப் பார்க்கிறார்கள். பஸ்ஸில் ஆட்களை ஏற்றுவதிலும், ஒவ்வொரு நிறுத்தத்திலும் காத்திருக்கும் பிரயாணிகளைத் தேடிப் பிடித்தாவது தன் பஸ்ஸில் ஏற்றிக் கொள்வதிலும் போட்டிகூட வந்துவிட்டது. இதையெல்லாம் படித்துச் சந்தோஷம் அடையும் மக்களுக்கு, ''இந்த அரசாங்கம் மக்களை இப்படியெல்லாம் தொடர்ந்து சந்தோஷப்பட விட்டுவிடாதே! விரைவில் பெட்ரோல், டீசல் விலை உயர்வை முன்விட்டுக் கட்டணங்களை உயர்த்திவிடுமே'' என்று சந்தேகமும் பயமும் கூடவே தோன்றத்தான் செய்கிறது.

ராஜாஜியின் அடிச்சுவட்டில்

அண்ணல் ராஜாஜி இதயமார விரும்பிய கொள்கைகளில், மதுவிலக்கைப் போலவே கைத்தறியை ஆதரிப்பதும் முக்கியமானது. கரை போட்ட வேஷ்டி, புடவைகள் ஆகிய இரண்டையும் விசைத் தறியின் போட்டியின்றிக் கைத்தறிக்கே பிரத்தியேகமாக விட வேண்டும் என்று அவர் பல்லாண்டுகளாக வற்புறுத்தி வந்தார். அவர் வற்புறுத்தியதைச் சட்ட உருவிலேயே திட்ட வட்டமாக நிறைவேற்றத் தமிழக அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. இது லட்சோப லட்சம் கைத்தறி நெசவாளருக்கு நெஞ்சம் குளிரும் செய்தியாகும். வேஷ்டி, புடவைகளைக் கைத்தறிக்கெனவே ஒதுக்க வேண்டும் என்று கோரிப் பாரதப் பிரதமருக்குத் தமிழக முதல்வர் முன்பே எழுதியிருந்தாராம். ஆனால் அதற்குப் பதில் ஏதும் கிடைக்கவில்லை. எனவே, அகில இந்திய ரீதி நடவடிக்கைக்காக இனியும் காத்திராமல், நம் மாநில மட்டத்தில் இந்த நல்ல ஏற்பாட்டினை அமலாக்கிவிட வேண்டும் எனக் கருதித் தமிழக அரசு நம் சட்டசபையில் தீர்மானம் கொண்டுவர முடிவு செய்திருக்கிறது. பாராட்டுக்குரிய நல்ல காரியம்.



ஈடிணையற்ற சிறப்பு!

உட்புற வெளிப்புறச்
சுவர்களுக்கு
உபயோகப்படுத்தக் கூடிய
ஒரே ஒரு பெயிண்ட் —

டெக்கோப்ளாஸ்ட்

- பிளாஸ்டிக் போன்ற ஃபினிஷ் எனினும் விலையோ சிக்கனம்.
- பழைய சுவர்களுக்கு புதிய மெருகேற்றுகிறது.
- புதிய சுவர்களுக்கு இன்னும் பொலிவூட்டுகிறது. ப்ரைமரின் தேவையேயில்லை.



வாழ்க்கையில் வண்ணங்கள் வந்தடையவே **ஏஷியன் பெயிண்ட்ஸ்**

AIYARS-A.259 TM



பதின்மூன்றும் பருவத்திலேயே துறவி வேந்தராகப் பரிணமித்த ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் இந்த ஜூலை 15ந் தேதி நிகழும் பூர்ணிமையன்று அறுபத்தி ஏழாவது வியாஸ பூஜையைச் செய்து சாதுர்மாஸ்ய சங்கற்பம் செய்து கொள்கிறார்கள். இப்புண்ணிய சமயத்தில் பெரியவர்களுக்கு நம் இருதயபூர்வ அஞ்சலிகளை அளிக்கிறோம்.

★ ★ ★ ★ ★

சாதுர்மாஸ்யம்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

பிரம்மசாரிக்கு என்று சில விசேஷ தர்மங்கள் இருக்கின்றன. கிருஹஸ்தனுக்கு என்றே சில தனித் தர்மங்கள் இருக்கின்றன. இவ்விதமே சந்நியாசிக்கு மட்டும் சில விசேஷ தர்மங்களை வைத்திருக்கிறார்கள். அவற்றில் ஒன்று, சந்நியாசி ஒரே இடத்தில் நீண்ட காலம் வசிக்கக் கூடாது என்பது. சாதாரணமாக ஒரு சந்நியாசி ஒரே ஊரில் மூன்று நாட்களுக்குமேல் தங்கக் கூடாது என்பார்கள். ஆனால் எங்களைப் போல் ஒரு மடத்தைச் சேர்ந்தவர்களாக, தர்மத்தைப் பிரசாரம் செய்யும் ஆசாரியர்களாக இருக்கிறவர்களின் விஷயத்தில் இவ்வளவு கண்டிப்பு இல்லை. ஆனாலும் ஒரே இடத்தில் இல்லாமல், ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டே இருக்க வேண்டும் என்பது எல்லா சந்நியாசிகளுக்கும் விதித்த தர்மமாகும். இப்படிச் சுற்றிக் கொண்டே இருப்பவர்களுக்குப் பரிவ்ராஜக சந்நியாசிகள் என்று பெயர். சஞ்சாரம் செய்து கொண்டே இருக்க வேண்டும் என்று வைத்ததற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒருத்தர் ஒரே இடத்தில் நீண்ட காலம் வசித்தால் அங்கே பல பற்றுக்களை உண்டாக்கிக் கொண்டுவிடக் கூடும். உள்ளூர்ச் சர்ச்சைகளில் மாட்டிக் கொண்டு விடக்கூடும். சந்நியாசிக்கு இவ்விதப் பற்றுக்கள் உண்டாகக் கூடாது. அதுவும் இல்லாமல் பழகப் பழகப் பாலும் புளிக்கும்—Familiarity breeds contempt என்றெல்லாம் சொல்கிற மாதிரி ஒரு சந்நியாசி ஒரே இடத்தில் தங்கினால் அவருக்கு சுசுருஷை செய்வதில் சிஷ்யர்களுக்கு உற்சாகம் குன்றிவிடலாம். இது அந்த சந்நியாசியைப் பொறுத்த காரணம். இன்னொரு காரணம் அவரது பணியைக் குறித்தது. நேருக்கு நேராக ஒருத்தர் நம்மிடையில் வந்து உபதேசம் செய்தால் அதற்கு ஒரு தனி சக்தி இருக்கத்தான் செய்கிறது. இதற்காகவே சந்நியாசிகள் ஊர் ஊராகச் சஞ்சாரம் செய்து, வெகுஜனத் தொடர்பு (mass contact) என்றெல்லாம் சொல்கிறார்களே, அது மாதிரி பல சீமை ஜனங்களிடமும் நெருங்கிப் போய்த் தங்கள் மதங்களைப் பிரசாரம் செய்ய வேண்டும் என்பதற்காகப் பரிவ்ராஜக விதி ஏற்பட்டுள்ளது.

சரி, இப்படியே ஒரு சந்நியாசி ஊர் ஊராகப் போய்க் கொண்டேயிருந்தால் அவர் ஆத்மாநுபவத்தில் திளைத்துக் கிடப்பதற்கு இடைஞ்சலாகத்தானே இருக்கும்? ஊர் ஊராகப் போய் அவர் செய்கிற காரியங்களுக்கெல்லாம் சக்தி தருவது அவருடைய தபஸும், தியானமும்தான். இதற்கு ஓயாத சஞ்சாரம் பிரதிகூலமாக இருக்கும் அல்லவா? இதைக் கருதித்தான் பரிவ்ராஜகர்களான துறவிகளும் பிரதி வருஷமும் நான்கு மாதங்கள் மட்டும் ஒரே இடத்தில் வசிக்க வேண்டும் என்று சாஸ்திரத்தில் விதித்திருக்கிறது. இதற்கே **சாதுர்மாஸ்ய விரதம்** என்று பெயர். இச்சமயத்தில் அவர் உள்ளூர் விவகாரங்களில் அகப்பட்டுக் கொள்ளாமல் தியானம், தபஸ், பூஜை, சாஸ்திரங்களைப் படிப்பது, போதிப்பது இவற்றிலேயே முழுக்க முழுக்க ஈடுபட்டிருக்க வேண்டும்.

சாதுர் மாஸ்ய விரதத்தை எப்போது செய்ய வேண்டும் என்பதையும் தகுந்த காரணத்தோடு சாஸ்திரம் நிர்ணயித்துத் தந்திருக்கிறது. ஆனி மாதப் பௌர்ணமியிலிருந்து தொடங்கி நான்கு மாதங்கள் இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் மழைக்காலமாகும். இந்த நாலு மாதங்களில் சந்நியாசி ஒரே இடத்திலிருந்து கொண்டு சாதுர்மாஸ்யம் அனுஷ்டிக்க வேண்டும் என்பது சாஸ்திரம்.

மழைக்காலத்தில் சஞ்சாரம் செய்வது கஷ்டம் என்பது மட்டும் இதற்குக் காரணமல்ல. அஹிம்ஸா விரதத்தை உத்தேசித்தும் மழைக்காலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. சந்நியாசிகளுக்கென உள்ள விசேஷ தர்மங்களில் அஹிம்சையும் ஒன்று. உலக விவ

காரங்களில் ஈடுபட்டிருக்கிற கிருஹஸ்தர்கள், பரிபூரணமாக அஹிம்ஸையை அநுஷ்டிப்பது முடியாத காரியம். சந்நியாசிகளுக்கே பூரண அஹிம்ஸையைக் கட்டாயமாக வைத்திருக்கிறது. அவர்கள் ஒரு பூச்சி பொட்டுக்குக்கூட, புல் பூண்டுக்குக்கூட ஹிம்ஸை விளைவிக்கக் கூடாது. அவர்கள் இலையைக் கூடப் பறிக்கக் கூடாது என்பது விதி. அவர்கள் பிட்சை (அதாவது பிச்சை) எடுத்துச் சாப்பிட வேண்டும் என்பதற்கும் அஹிம்ஸைதான் காரணம். தீமூட்டிச் சமைக்கும்போது பல பூச்சிகள் சாகக் கூடும். அதனால்தான் சந்நியாசி சமையல் செய்யக் கூடாது என்று வைத்திருக்கிறது. துறவிகளுக்கு யாகம் செய்ய அதிகாரமில்லாமலிருப்பதற்குக் காரணமும் அதில் அக்னி வளர்க்கவேண்டி யிருப்பதுதான். அவர்களுக்கு அக்னி காரியமே இல்லை. கடைசியில் அவர்கள் தேக வியோகம் ஆன பிற்பாடும் தகனம் செய்யாமல் புதைத்தே விடுகிறோம். சந்நியாசிகளின் சம்பந்தமாக ஜீவ ஹிம்ஸை ஏற்படக் கூடாது என்பதே காரணம். மழை பெய்தவுடன் ஏராளமான ஜீவ ஜந்துக்கள் உண்டாகி விடுகின்றன. ஒரு துறவி ஊர் ஊராகச் செல்லும்போது இந்தப் பூச்சிகளை மிதித்துக் கொன்றுவிடக் கூடும் அல்லவா? இதைத் தவிர்க்கவே மழைக்காலமான சாதுர்மாஸ்யத்தில் ஒரே இடத்தில் இருக்கும்படியாக ஏற்பாடு செய்திருக்கிறது.



சந்நியாசிகள் வாகனங்களில் ஏறாமல் பாதசாரியாகப் போவதே அஹிம்ஸைக்காகத்தான். நம் பாதங்களின் அமைப்பைப் பார்த்தாலே அவற்றின் வளைவு நெளிவுகள் தெரியும். பூரான், மண்ணுளிப் பாம்பு போன்ற ஜந்துக்களின் மேல் நம் காலை வைத்து நடந்தாலும் கூட, அவை நம் பாதங்களில் உள்ள வளைவு நெளிவுகளுக்குள் உடம்பை நெளித்துக் கொண்டு, எந்த ஹானிக்கும் ஆளாகாமல் தப்பி ஓடி விடுகின்றன. ஆனால் மாடு அல்லது குதிரை வண்டியின் சக்கரமோ, கார் சக்கரமோ இப்படிப்பட்ட ஜீவராசிகளின் மீது ஓடினால் அவை நசுங்கிச் செத்தே போகின்றன. நான் போகிற சாலைகளில் பெரிய பாம்புகள் உள்படப் பல ஜீவராசிகள் சக்கரத்தில் நசுங்கிப் போயிருப்பதைப் பார்த்திருக்கிறேன். வாகனப் பிரயாணத்தில், அதுவும் வேகமாகப் போகிற வண்டிகளில், இந்த ஹிம்ஸையைத் தவிர்க்கவே முடிவதில்லை. பாதசாரியாக நடக்கும்போது ஓர் எறும்பை மிதிக்க இருக்கும்போதுகூடக் காலை விலக்கிக் கொண்டால் அந்தப் பிராணியைக் காப்பாற்ற முடியும். பாத யாத்திரையில் அஹிம்ஸை நன்றாகச் செயலாகிறது. ஆனால் மழைக் காலத்தில் சின்னச் சின்னதாக ஏகப்பட்ட பூச்சிகள் கிளம்புவதால் பாத சஞ்சாரத்திலும் கூட ஜீவ ஹிம்ஸையைத் தவிர்க்க முடியாது.

சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தில் இதைத்தான் ஒரு சந்நியாசி கூறுகிறார்:

ப்ராயேண ப்ராவ்ருஷி
ப்ராணி ஸங்குலம்
வர்த்ம த்ருச்யதே ।
அதஸ்தேஷாம் அஹிம்
ஸார்த்தம் பக்ஷானவை
ச்ருதி சோதிதான் ।
ஸ்தா ஸ்யாம: சதுரோ
மாஸான் அத்ரை
வாஸதி பாதகே ॥

‘‘‘ப்ராவ்ருட்’ எனப்படும் மழைக் காலம் வந்ததனால் எங்கும் ஜீவராசிகள் பெருகியிருக்கின்றன; அவற்றுக்கு நான் ஹிம்ஸை இழைக்காமலிருக்கும் பொருட்டு இவ்விடத்திலேயே நான்கு மாதங்கள் இருப்பதற்கு அநுமதி தாருங்கள்’’ என்று இந்த ச்லோகத்தில் துறவி ஊர் மக்களைக் கேட்கிறார். அதற்கு மகாஜனங்கள் பின்வருமாறு விடை தருகிறார்கள்:

நிவர்த்து ஸம்ஜேநாத்ர மஹிஷ்யமே:
க்ருதார்த்தநாம்!
மஹாசக்தி ச ஸர்வேஷாம் மஹிஷ்யாமோ
வயம் முதா!!

''தாங்கள் இங்கேயே சுகமாக வசியுங்கள். நாங்கள் எங்கள் சக்திக்கு முடிந்தமட்டும் சந்தோஷத்துடன் தங்களுக்குப் பணிவிடை செய்கிறோம்'' என்று விடை சொல்கிறார்கள்.

இந்த சாதுர்மாஸ்ய விரதம் அநாதிகாலமாக நம் தேசத்தில் இருந்து வந்திருக்கிறது. ஸ்ரீமத் பாகவதத்தில் நாரதர் நமக்கு ஞானம் ஏற்பட்டதற்குக் காரணத்தைச் சொல்லும்போது, ''பால்யத்தில் நான் என் தாயாரோடு வசித்த இடத்தில் பல சந்நியாசிகள் சாதுர்மாஸ்ய விரதத்துக்கு வந்து தங்கினார்கள். அவர்கள் உண்டு மிகுந்த உச்சிஷ்டத்தைப் புசித்ததாலேயே எனக்கு ஞானோதயம் ஏற்பட்டது'' என்கிறார்.

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முற்பட்ட அசோகரின் பிரகடனங்களில் சந்நியாசிகளின் சாதுர்மாஸ்யம் பற்றிக் குறிப்பு உள்ளது.

ஹிந்துக்கள் மட்டுமின்றி இந்தியாவில் தோன்றிய பௌத்த, ஜைன மதத் துறவிகளும் சாதுர்மாஸ்யம் அநுஷ்டிக்கிறார்கள்.

இப்போது சாதுர்மாஸ்ய விரதம் எடுத்துக்கொள்பவர்கள் நான்கு மாதங்களுக்குப் பதில் இரண்டு மாதங்கள்தான் ஓரிடத்தில் தங்குகிறார்கள். இந்த வழக்கம் எப்போதிலிருந்து ஏற்பட்டது என்று தெரியவில்லை. 'பக்ஷோ வை மாஸ:' என்று ஒரு வழக்கு உண்டு. அதாவது ஒரு பக்ஷத்தை — பதினைந்து நாட்களை — ஒரு மாதத்துக்குப் பதிலாக வைத்துக்கொள்ளலாம் என்று அர்த்தம். இதன்படிதான் இப்போது சாதுர்மாஸ்ய விரதத்தை இரண்டே மாதங்களில் பூர்த்தி செய்கிறோம்.

வியாஸ பூஜை செய்துவிட்டு, சாதுர்மாஸ்ய சங்கல்பத்தை எடுத்துக் கொள்கிறோம். இனி வியாஸ பூஜை பற்றிச் சொல்கிறேன்.

(அடுத்த இதழில்: வியாஸ பூஜை)



சிறப்புப் பணியில் சிங்கங்கள்!

தென் சென்னை லயன்ஸ் கிளப்பினர் கண் சிகிச்சை வைத்திய நிலையம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். இதனைச் சும்மா திறந்து வைத்துவிடவில்லை; ஆயிரம் ரூபாய் நன்கொடை கொடுத்தும் பாரத ராஷ்டிரபதி வி. வி. கிரி தொடங்கி வைத்தார்!

தனவந்தர் கன்யாலால் ஈசுவரலால் மேத்தா அவர்களின் வாரிசுகள் தாராள உள்ளத்துடன் அளித்த 51,000 ரூபாய் நன்கொடையைப் பிரதானமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த லயன்ஸ் கண் ஆஸ்பத்திரிக்கு அந்தப் பெருமகனின் பெயரே சூட்டப்பட்டிருக்கிறது.

கண் வைத்தியர்களான 'லயன்' டாக்டர் சீனிவாசனும், 'லயன்' டாக்டர் டி. எம். குமாரசாமியும் இந்தக் கண் சிகிச்சை நிலையத்தில் இலவசமாகச் சேவை செய்ய முன்வந்திருக்கிறார்கள். கன்யாலால் ஈசுவரலால் மேத்தாவின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசிய தமிழக ஆளுநரும் தம் பங்குக்கு ஐந்நூறு ரூபாய் வழங்கினார். லயன்ஸ் கிளப் அங்கத்தினர்கள் தாராளமாக நன்கொடைகளை அளித்தும் வசூலித்தும் இந்த மருத்துவ மனை உருவாக உதவியிருக்கிறார்கள். இளம் சிங்கங்களின் நற்பணிகள் தொடரட்டும்.


மாணவர்கள் அஞ்சலி!

இராஜாஜி அவர்களுக்கு அஞ்சலி செலுத்தவும், சுதந்திர வெள்ளி விழா ஆண்டில் விடுதலைப் போராட்டத்தை நினைவுகூரவும், மாணவர்கள் சமீபத்தில் வேதாரண்ய பாத யாத்திரை செய்தனர். மாணவர்களிடையே காந்திய நெறியைப் பரப்பப் பாடுபடும் தமிழ்நாடு காந்தி சமாஜத்தின் காரியதரிசி திரு ராதாகிருஷ்ணன் அவர்களின் தலைமையில் தமிழகத்தின் பல்வேறு கல்லூரிகளிலிருந்து நாற்பதுக்கு மேற்பட்ட மாணவர்கள் திருச்சியில் கூடி இராஜாஜி சென்ற அதே வழியில் சென்று வேதாரண்யத்தை அடைந்தனர். வேதாரண்யத்தில் ராஜாஜி உப்பு எடுத்த இடத்தில் அவருக்கு ஒரு நினைவு ஸ்தூபி உள்ளது. அங்கு மாணவர்கள் எல்லோரும் அவருக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர். அன்று இராஜாஜிக்கு வேதாரண்யத்திலிருந்து உப்பளத்துக்குச் செல்ல வழிகாட்டிய மாரிமுத்துத் தேவர் என்ற பெரியவரே இன்றும் மாணவர்களுக்கு வழி காட்டினார்!



ஹிந்தாலியம்

சமையலறை மற்றும் மேஜைப் பாத்திரங்கள் இல்லத்தரசிக்கு இனிய வரப்பிரசாதம்



ஹிந்தாலியம் உங்கள் விருந்தினர்களுக்கு பளிச்சென்று, சுடர்விடும் வரவேற்பளிக்கிறது; அந்நியோன்னியமான குடும்பத்திற்குகந்த இனிய சூழ்நிலையை உருவாக்குகிறது. அதை விசேஷ சந்தர்ப்பங்களிலும் உபயோகிக்கலாம், தினசரி உபயோகத்திற்கும் வைத்துக் கொள்ளலாம்; அது எப்பொழுதும் சிறப்பாகத் தோற்றமளிக்கிறது. கேடரிங் டெக்னாலஜியில் நிபுணரான குமாரி திவ்யா படேல் எச்.எம்.சி.டி. அதிகப்படியான இந்த 5 உன்னதமான காரணங்களுக்காக ஹிந்தாலியம் பாத்திரங்களைச் சிபாரிசு செய்கிறார்.

தரம்	வலுவானவை, நீடித்துழைப்பவை, அதுங்காத் தன்மையுடையவை.
விலை	ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களின் விலையில் மூன்றில் ஒரு பங்கு தான்.
தோற்றம்	மழுமழவென, வெள்ளியைப்போல தோற்றமளிக்கின்றன. நவீன டிஸைன்களில் தயாரிக்கப்படுகின்றன.
சிக்கனம்	சூட்டை நன்றாகப் பரப்புகின்றன; எண்ணெ அல்லது எரி பொருள் குறைந்த அளவில்தான் தேவைப்படுகிறது.
உபயோகம்	கையாள வசதியானவை, சோப் மற்றும் கம்பளித் துணியினால் சீக்கிரமாகவும் சுலபமாகவும் சுத்தம் செய்து விடலாம்.




HINDALIUM®

இவர்கள் தயாரிக்கும் விசேஷ அலுமினிய கலப்பு உலோகத்தின் ரெஜிஸ்டர்ட் டிரேட் மார்க் ஆகும்.

ஹிந்துஸ்தான் அலுமினியம் கார்ப்பொரேஷன் லிட்.,
தபால் ஆபீஸ் ரேனுகூட்,
ஜில்லா. மிர்ஸாபூர் (உ.பி.)

ஹிந்தாலியம் பாத்திரங்கள் நியாயமான விலைக்கு விற்கப்படுகின்றன. அதிக விலை கொடுக்காதீர்கள். அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகளிடம் உள்ள ஹிந்தாலியம் பாத்திரத் தயாரிப்பாளர்களின் விலைப் பட்டியலைப் பார்த்து வாங்குங்கள்.

Sobhagya HAC-606 TAM



யாருக்கு யோகம்?

வ. சா. நாகராஜன்

சாமிக்கு ஓர் ஆசை. (யாருக்குத்தான் இல்லை?) ஒரு தடவை பரிசுச் சீட்டில் லட்ச ரூபாய் விழ வேண்டும்! ஆமாம், ஒருமிக்க லட்ச ரூபாயைக் கண்ணால் பார்த்துவிட வேண்டும்! அடுத்த கணம் உயிர் போய்விட்டாலும் சரிதான். லட்ச ரூபாய்!

முதன் முதலாகத் தமிழ்நாட்டில் பரிசுச் சீட்டு விற்பனை ஆரம்பித்த அந்த நாட்களில் சாமி வரிசைக்கு இரண்டு மூன்று என்று சீட்டுக்கள் வாங்கினான். பரிசு விழவில்லை. 'நியூமராலஜி' என்னும் எண் சாஸ்திரத்தைப் பற்றி அறிந்து கொண்டு, அதன்படி தன் பெயருக்கு ராசியான எண்களுள்ள சீட்டுக்களை ஊர் ஊராகப் போய்த் தேடி வாங்கினான். அப்படியும் விழவில்லை. மனைவி பெயர், மாமனார் பெயர், மாமியார், மைத்துனி, குழந்தைகள் என்று வரிசைக் கிரமமாக வாங்கிப் பார்த்தான்.

எந்த ஊர்களில் முதல் இரண்டாம் பரிசுகள் விழுந்தனவோ, அந்த ஊர்களுக்குப் போய் அங்கேயும் வாங்கிப் பார்த்தான்.

ஒவ்வொரு தடவை சீட்டை வாங்கிச் சட்டைப் பையில் பத்திரமாக வைத்துக்கொண்டு வீட்டை நோக்கி நடக்கும்போதும் அவன் கற்பனைகள் நீளும்.

'லட்ச ரூபாய் விழுந்தால் என்ன செய்யலாம்?'

'முதலில் இந்த 'டஞ்சன்' வீட்டைக் காலி செய்ய வேண்டும். 'நாற்பது' அல்லது 'ஐம்பது' ரூபாய்க்குள் ஒரு வீட்டை வாங்கிக் கொள்ள வேண்டும். வீட்டைச் சுற்றிக் காம்பவுண்டுச் சுவர் இருக்க வேண்டும். முன்னால் சின்னதான தோட்டம். இரண்டு தென்னை மரங்கள். அவற்றின் பக்கத்தில் வானுயர வளரும் இரண்டு நெட்டிலிங்க மரங்கள்....

'லட்ச ரூபாய் விழவில்லை; — ஐம்பதாயிரம் தான் விழுகிறது! தொலையட்டும். போதுமே! இப்போதைக்குச் சொந்த வீடு வாங்காவிட்டால் போகட்டும். நல்ல 'ஷை'ரான இடத்தில் நூறு, நூற்றைம்பது ரூபாய் வாடகை போனாலும் நல்ல வீடாக எடுத்துக்கொள்கிறது. முதலில் மனைவிக்கு இரண்டு ஜோடி பட்டுப் புடவைகள் எடுக்க வேண்டும். குழந்தைகளுக்கும்தான்....

'நம் தரித்திரம் ஐம்பதாயிரம் விழவில்லை, ஆயிரம்தான் விழுகிறது. அதாவது விழட்டுமே! முதலில் இந்த மளிகைக் கடைக்காரன், பால்காரனின் கணக்கை ஐசா, பைசாவாகத் தீர்த்துவிட வேண்டும்....'



''சார்...ராஜஸ்தான் நாலே நறுக்கல். முதல் பரிசு மூணு லட்சம் சார்...''

தமிழ்நாட்டில்தான் பி சி நா கீ லட்ச ரூபாய். ராஜஸ்தானத்தில் முதல் பரிசு மூன்று லட்ச ரூபாய். என்ன இருந்தாலும் மகாராஜாக்கள் வாழ்ந்த இடமல்லவா?

சாமி ஒரு ரூபாயைக் கொடுத்து மூன்று லட்ச ரூபாய் நம்பிக்கையைச் சட்டைப் பையிலுள் பத்திரப்படுத்தினான். மறுபடியும் ஆவலுடன் சீட்டை எடுத்து ஒருமுறை பார்த்து அதன் எண்ணிக்கையை வலமிருந்து இடமாகக் கூட்டிப் பார்த்தான். பதினெட்டு வருகிறது. ஒன்றும் எட்டும்... ஒன்பது...அட அதிர்ஷ்ட நம்பர்தான். நவக்கிரகங்கள்... நவ தானியங்கள் ... நவ மணிகள் ... நவ ரசங்கள் ... நவராத்திரி... நவசித்திகள்...!

'மூன்று லட்சம் மாத்திரம் விழுந்துவிட்டால்......? முதலில் இந்தக் தரித்திரம் பிடித்த வேலைக்கு முழுக்கு. பிறகு, வீடு..... உம், உடனே பணத்தை வீட்டில் போட வேண்டாம். மூன்று லட்சத்தை ஐந்து லட்சமாக ஆக்க வழி என்னவென்று பார்க்க வேண்டும். அது ஒன்றும் கஷ்டமில்லை. முதலில் ஒரு லட்சம் ரூபாய்க்கு டாடாவில் ஷேர் வாங்க வேண்டும். டிவிடெண்ட் என்ன தெரியுமா ? இருபது, இருபத்தைந்து பர்செண்டாக்கும். மீதி இரண்டு லட்சம் ரூபாயை ஏதாவது நல்ல பிஸினஸில் போட வேண்டும். பிஸினஸ் என்றால் தொழிற்சாலை, அது இது என்று ஆரம்பித்து வைக்கக்கூடாது. அப்புறம் தொழிலாளர் பிரச்னைகள், வேலை நிறுத்தம், போராட்டம் என்று வந்து நிம்மதியெல்லாம் போய்விடும். தொழிலாளிகளே தேவைப்படாத தொழில், லாட்ஜ் ஒன்றை வாங்கி வாடகைக்கு விடுவதுதான். தேவையெல்லாம் ஆபீஸ் அறை ஒன்று, ஒரு குமாஸ்தா, நாலைந்து அறைப் பையன்கள், — போதும். லாட்ஜில் முதல் மாடியில் இருபது அறைகள், இரண்டாம் மாடியில் இருபது. மொத்தம் நாற்பது அறைகள். ஓர் அறைக்கு ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் வாடகை பத்து ரூபாய் என்றால்கூட, நாற்பது அறைக்குப் பத்து ரூபாய்மேனிக்கு, முப்பது நாளுக்கு.... நானூறு இண்டு முப்பது... பன்னிரண்டாயிரம்....! ஏ.... அப்பா....! பன்னிரண்டாயிரமா !.....! சில நாட்கள் அறை காலியாக இருந்தால்கூடப் பத்தாயிரம் நிச்சயம் வரும்......!

தேதி முப்பது. மாதத்தின் கடைசி நாள்.

சாமி அலுவலகத்தைவிட்டு வெளியே வந்தான். பையில் சரியாக ஒரு ரூபாய் இருந்தது. பஸ் ஸ்டாண்டுக்கு வந்தான். வீட்டுக்குப் போக பஸ் சார்ஜ் இருபது பைசா. ரூபாய் நோட்டைப் பார்த்தால் கண்டக்டர் எரிந்து விழுவார். சில்லறை தரமாட்டார். நடந்து போனால் என்ன? இருபது பைசா மிச்சம். மிச்சம் என்ன பெரிய மிச்சம்? ராயல் லாட்ஜில் ஒரு காப்பி சாப்பிடுகிறது.....

ராயல் லாட்ஜ் காப்பி அருமையாக இருக்கும். சாமி ராயலை நோக்கி நடந்தான்.

சாலையைக் கடக்கும்போது பாதியில் ஒரு பையன் பின்னால் ஓடி வந்தான்.

'' சிக்கிம் லாட்டரி.... கடைசி நாள் சார்...... ஐந்து லட்சம்... ஒரே ஒரு டிக்கட் பாக்கி இருக்கு சார்..... லக்கி டிக்கட் சார்!''

சாமிக்கு லட்சங்களில் இருந்த 'த்ரில்' சில நாட்களாகக் குறைந்து கொண்டு வந்தது. பரிசுச் சீட்டில் இது வரையில் விட்ட பணம் பத்தாயிரமாவது இருக்குமா என்று ஒரு நாள் கணக்குப் போட்டுப் பார்த்து எரிச்சல் அடைந்திருந்தான். அதனால் இப்போதெல்லாம் லட்சங்களில் அவன் அவ்வளவாக ஈடுபடுவதில்லை.

ஆனால் பையன் சாமியை விடவில்லை. சட்டையைப் பிடித்து இழுத்தான். ''கடைசி டிக்கட் சார்.... நாளைக்குக் குலுக்கல் சார்... உங்களுக்குத்தான் முதல் பிரைஸ்....!''

சாமியின் கையில் சீட்டை மடித்து வைத்துவிட்டான் பையன். பழக்கத்தினால் சாமி டிக்கட் நம்பரைப் பார்த்தான். என். என். 006600.

என்ன இது, முதலிலும் பூஜ்யம், பின்னாலும் பூஜ்யம்! இந்த எண்ணுக்கா பரிசு விழும்? குலுக்கலில் எண்களைச் சுழற்றும் போது அந்த இயந்திரம் நாலு தடவையா அந்தப் பூஜ்யத்திலேயே வந்து நிற்கும்?

கையில் வந்து திணிக்கப்பட்ட ஐந்து லட்ச ரூபாயை உதறி எறியச் சாமிக்கு மனமில்லை. வாங்கிப் பார்த்தால் போகிறது. சீட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டான். பையின் அடியில் கிடந்த ஒரு ரூபாய்த் தாளைத் தேடித் துழாவினான். பையினுள் ஏதேதோ காகிதங்கள். மளிகைக் கடை பில்கள். லாண்டிரி பில்.... இரண்டு மூன்று பஸ் டிக்கட்டுகள். அவற்றுக்கு அடியில் ஒரு ரூபாய் நோட்டு மடங்கிக் கிடந்தது.

சாமி பையினுள் ஐந்து விரல்களையும் விட்டுப் போராடிக் கொண்டிருந்தபோது.....

''தமிழ் நாடு, இன்றே கடைசி நாள்.... முதல் பரிசு, ரூபாய் லட்சம்.....'' என்று ஓடி வந்த பையன் சாமியைப் பார்த்துவிட்டு, ''இங்கியா சார், இருக்கீங்க? உங்களைத்தான் சார் தேடறேன்'' என்று அருகில் வந்தான்.

இவன் வேறு பையன். சாமிக்குப் பரிசுச் சீட்டுப் பரிவர்த்தனையில் பரிச்சயமானவன். சீட்டுக்களுக்கு ஏகப்பட்ட கிராக்கி இருந்த அந்த ஆரம்ப நாட்களில் சாமியை ரகசியமாகச் சந்தித்து நாலைந்து டிக்கட்டுகளைக் கள்ள மார்க்கெட்டில் தள்ளிப் பழக்கப்பட்டவன். பெயர் சின்னையன்.

''வாங்கிட்டேம்பா'' என்று அவனிடம் சொல்லிக் கொண்டே, கண்ணில் தென்பட்டுக் கைவிரலுக்கு டிமிக்கி கொடுக்கும் ஒரு ரூபாய் நோட்டைப் பையிலிருந்து வெளியேற்றும் பிரயத்தனத்தில் ஈடுபட்டான் சாமி.

சின்னையன் விடவில்லை. ''என்ன சார்! இவங்கிட்டியா வாங்கினீங்க? சிக்கிமா? என்ன சார் இது? எல்லாம் தெரிஞ்ச நீங்களே இப்படி வாங்கறீங்க? சிக்கிம் எங்கே சார், இருக்கு? பரிசு விழுந்தாலும் பணம் கைக்கு வருமா சார் சிக்கிமிலிருந்து? தமிழ் நாட்டை ஆதரிங்க சார். ஆஸ்பத்திரி, அநாதை விடுதி, பிச்சைக்காரர் புனர் வாழ்வு.... இப்போ என்ன தெரியுமா, சார்? திருவள்ளுவருக்குக் கோயில் கட்டப்போறாங்க சார். இப்படி நல்ல செலவுக்குக் கொடுப்பீங்களா, சிக்கிமுக்கா கொடுப்பீங்க?''

சாமியின் கையில் சிக்கிம் சிக்கவில்லை. ஒரு ரூபாய் சிக்கிவிட்டது. அதை ஒரு வழியாகக் கையில் எடுத்துச் சிக்கிம் பையனிடம் கொடுக்க முயன்றபோது தமிழ் நாட்டுப் பையன் அந்தக் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டான்.

''என்ன சார் இது, நான் சொல்லிக்கிட்டேயிருக்கேன்.... ரூபாயைக் கொண்டாங்க சார் இப்படி.....விட்டெறிங்க சார் அந்தச் சிக்கிம் டிக்கெட்டை!''

''அடுத்த மாசம் உங்கிட்டே வாங்கிக்கிறேம்பா. இப்போ இவன்கிட்டே வாங்கிக்கிட்டேன். வழியை விடு'' என்று கையைத் தூக்கி ரூபாய் நோட்டைச் சிக்கிம் பையனிடம் கொடுக்க நீட்டினான் சாமி.

திடீரென்று தமிழ் நாட்டுப் பையன் முகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. சோகம் கண்களை அப்பியது. ''சார்...சார்...! காலையிலேருந்து ஒரு டீக்கூடக் குடிக்கல்லே சார்...ஒரு டிக்கட் வாங்கிக்கிங்க சார். உங்க பேரைச் சொல்லி ஒரு டீயாவது குடிப்பேன் சார்!'' என்றான். சட்டையைத் தூக்கி வயிற்றை எக்கிக் காண்பித்தான். அடி வயிறு பள்ளமாகக் காட்சி அளித்தது.

அந்தப் போராட்டத்தில் தமிழ்நாட்டுப் பையன் வென்றுவிட்டான். சிக்கிம் சீட்டை வாங்கிய பையனிடம் அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டுத் தமிழ்நாட்டுச் சீட்டைச் சின்னையனிடமிருந்து வாங்கிக் கொண்டு ஒரு ரூபாயை அவனிடம் கொடுத்தான் சாமி. சிக்கிம் பையன் சும்மா போகவில்லை. தமிழ் நாட்டுப் பையனைத் திட்டித் தீர்த்தான். அந்தப் பேச்சை ரசிக்க முடியாமல் சாமி நகர்ந்தான்.

காப்பியும் சாப்பிடாமல், பஸ்ஸிலும் ஏறாமல் நடந்து, களைப்பும் சோர்வும் அலுப்பும் பையில் லட்ச ரூபாய் நம்பிக்கையுமாக வீட்டை அடைந்தான்.

ஐந்தாறு நாட்களுக்குப் பிறகு ஒரு நாள். சாமி பத்திரிகையில் தமிழ்நாட்டுப் பரிசுச் சீட்டுக் குலுக்கல் முடிவு வந்திருப்பதைப் பார்த்து, மேஜையடியில் போட்டிருந்த டிக்கெட்டைத் தேடி எடுத்து வந்து நம்பரைப் பத்திரிகையில் தேடினான். லட்சத்தில் இல்லை..... ஐம்பதாயிரத்தில் இல்லை. பத்தாயிரத்தில், ஊஹும்.... ஆயிரத்தில்....? அது ஏன் வருகிறது?

கடைசியாக நூறு ரூபாயில்..... ''கீழ்க்கண்ட எண்களைக் கடைசி நாலு எண்களாகக் கொண்ட எல்லா வரிசை டிக்கட்டுகளுக்கும்... ......2482.....'' அட! கடைசியில் நூறு ரூபாய்! கையில் உள்ள தன் சீட்டையும் பத்திரிகையையும் மாறி மாறிப் பார்த்தான்! இரண்டிலும் 2482தான்!

கடைசியில் நூறு ரூபாய் அவனுக்கு விழுந்திருக்கிறது! இதுவரை எத்தனை ரூபாய் விட்டிருப்போம்? இந்த நல்ல வேளையில் அந்தக் கணக்கு எதற்கு?

இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் ஸ்டேட் பாங்குக்குப் போய்ச் சீட்டைச்


பேராசிரியர்
கல்கி
படைத்த
பேரிலக்கியம்
சிவகாமியின்
சபதம்
கல்கி
ஆகஸ்ட் 5உ இதழில்
ஆரம்பம்

விண்கலம் தரும் சாட்சியம்!

அமெரிக்காவில் வெர்மாண்ட் என்ற இடத்தில் நடைபெறும் ஒரு நீதி விசாரணையில், உலகின் நீதி விசாரணை வரலாற்றிலேயே முதன் முறையாக ஒரு புதிய சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தச் சாட்சியத்தை அளித்தது எர்ட்ஸ்-1 என்ற விண்கலமாகும். பூமிக்கடியில் புதைந்து கிடக்கும் தாதுப் பொருள் வளங்களைக் கண்டறிவதற்காக விண்ணில் ஏவப்பட்ட செயற்கைத் துணைக் கோளாகும் இது. இந்தச் செயற்கைத் துணைக்கோள் விண்ணில் பூமியைச் சுற்றி வலம் வரும்போது, பூமியிலுள்ள தாதுப் பொருட் செல்வங்களை இனம் கண்டு கூறும் பல புகைப்படங்களை எடுத்துப் பூமிக்கு அனுப்பியது. அதே சமயம்,ஒரு காகிதத் தொழிற்சாலை தனது தொழிற்சாலையின் நச்சுத்தன்மை கொண்ட கழிவுப் பொருள்களைப் பூமிக்கு அடியில் செல்லும் ஒரு குழாயின் மூலம் சாம்ப்லேன் ஏரிக்குள் கொண்டு தள்ளி வந்ததையும், இந்தச் செயற்கைத் துணைக் கோள் படம் பிடித்துக் காட்டிவிட்டது. இந்தப் படத்தைச் சாட்சியமாகக் கொண்டே, இந்தத் தொழிற்சாலையின் அதிபர்கள் மீது ஏரி நீரை அசுத்தப் படுத்திய குற்றத்துக்காக வழக்கு நடந்து வருகிறது.

-நியூ டைம்ஸ்

சமர்ப்பித்து. அவர்கள் சொன்ன இடங்களிலெல்லாம் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து, நூறு ரூபாயைப் பெற்றுக் கொண்டு வெளியே வந்தான். அப்போது அந்த எண்ணம் பளிச்சிட்டது. அன்றைக்குக் காப்பி சாப்பிடுவதற்காக ஹோட்டலுக்கு நுழைய இருந்தவனையல்லவா பிடித்திழுத்து டிக்கட் வாங்கும்படி செய்தான் சின்னையன்? இன்றைக்கு அதே ஹோட்டலில் புகுந்து விருப்பப்படி சாப்பிட வேண்டியது.

ஹோட்டலை நெருங்கியபோது சாமிக்குச் சின்னையனின் நினைவு வந்தது. ஒரு பொறை பன்னுக்கும் டீக்கும் வயிற்றை எக்கிக் காட்டிய அவனையும் சேர்த்து உள்ளே அழைத்துக் கொண்டு போய் வயிறார வாங்கிக் கொடுக்க வேண்டும்.....

வழக்கமாகச் சின்னையன் நிற்கும் பஸ் ஸ்டாண்டிலும் ஹோட்டல் வாசலிலும் அவனைத் தேடினான். காணவில்லை. அவன் எங்கே போயிருப்பான்...?

''என்ன சார் டிக்கட்டா வேணும்? மாடிக்குப் போங்க. சின்னையன் இருப்பான்.''

சாமி மாடிப் படி ஏறினான். படி முடிந்ததும் நீண்ட வராந்தா. இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடி வரையில் வரிசையாக அறைகள் தெரிந்தன. ஒரு டிக்கட்டை வாங்கிப் பைக்குள் போட்டுக் கொண்டு, முதல் பரிசு கிடைத்தால் இந்த லாட்ஜையே வாங்கிவிடலாம் என்று எத்தனை எத்தனை முறை கனவு கண்டிருப்பான்?

சாமி ஒவ்வோர் அறையாகப் பார்த்துக் கொண்டே போனான். எல்லா அறைகளிலுமே யாராவது இருந்தார்கள். கடைசி அறை.... அதன் கதவுக்கு மேலே தமிழ்நாடு, கேரளம், மைசூர் இன்னும் இந்தியாவின் மற்ற மாநிலங்களின் பெயர்களும் எழுதி, மொத்த ஏஜண்ட் என்று இருந்தது.

சாமி திறந்திருந்த கதவு வழியாக உள்ளே பார்த்தான். சின்ன மேஜை ஒன்றின்முன் சின்னையன் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு எதிரே இரண்டு பெரிய மேஜைகளில் பல பைல்களுடன் இரண்டு குமாஸ்தாக்கள் இருந்தனர்.

சாமியின் தலையைக் கண்டவுடன் அடையாளம் புரிந்து கொண்ட சின்னையன் வெளியே வந்து, ''வாங்க சார்...'' என்று வரவேற்றான்.

சின்னையனைப் பார்க்கப் பார்க்கச் சாமிக்குத் திகைப்பாக இருந்தது. மூன்று மாதங்களுக்கு முன்னால் முகம் வாடி, வதங்கி, கண்கள் உள்ளே போய், வயிற்றை எக்கிக் காட்டிய அவனா இவன்? மேலே டெரிலின் சட்டை. காலரினுள் மடித்து வைத்திருந்த சங்கு மார்க் கைக்குட்டை. இடையில் உயர்ந்த விலையுள்ள மில் வேஷ்டி....

''சார்...! ரெண்டு மாசமா உங்க நினைப்புத்தான் சார்..... உங்களைப் பார்க்கணும்னு இங்கே பஸ் ஸ்டாண்டு, ஹோட்டல் எல்லா இடங்களிலேயும் தேடினேன் சார். உங்க ஆபீசும் தெரியாது. வீட்டு விலாசமும் கேட்டுத் தெரிஞ்சுகிட்டதில்லே. தெரிஞ்சிருந்தா முதல்லே நேரே உங்ககிட்டேதான் சார் வந்திருப்பேன்........''

சாமி விழித்தான்.


''நினைப்பிருக்கா சார், அன்னைக்குப் பசின்னு பொய் சொல்லி உங்ககிட்டே தமிழ்நாடு டிக்கட் ஒண்ணை வித்தேன். நீங்க முதல்லியே வாங்கி வைச்சிருந்த சிக்கிம் டிக்கட்டைத் திருப்பிக் கொடுக்கச் சொல்லி என் டிக்கட்டை உங்ககிட்டே கொடுத்தேன். அப்போ எனக்குப் பசி இல்லே சார். எப்படியாவது டிக்கட் விக்கணுங்கிறதுக்காக எல்லார்கிட்டேயும் கையாண்ட வழி சார் அது. அந்தச் சிக்கிம் விற்பனைப் பையன் தன் கிராக்கியைப் பிடுங்கிக்கிட்டதுக்காக என்னைக் கண்டபடி திட்டினான் சார். கடைசியிலே பல வந்தமா என் சட்டைப் பையிலேயிருந்து நீங்க கொடுத்த ஒரு ரூபாயைப் பிடுங்கிக்கிட்டு அந்தச் சிக்கிம் டிக்கட்டை என் மூஞ்சியிலே எறிஞ்சுட்டுப் போயிட்டான் சார். என்ன ஆச்சு தெரியுமா சார்? அதே டிக்கட்டுக்குத்தான் சார் முதல் பரிசு வந்தது. அஞ்சு லட்சம் சார்! முதல்லே எனக்குத் தெரியாது. ஏதோ நினைப்பிலே ஒரு நாள் நம்பரைப் பார்த்த போதுதான் கவனிச்சேன். எனக்கு ஒண்ணுமே புரியல்லே சார். ஒரு வழியா பணம் கையிலே வந்தப்புறம் பார்த்தேன். கையிலே பணமா இருந்தா செலவாயிடும்னு இந்த லாட்ஜை வாங்கிப் போட்டேன் சார். மூணு லட்சத்துக்கு மேலே ஒடிடிச்சு சார்.... உட்காருங்க சார்.....ஏன் சார் எழுந்திருக்கிறீங்க.....?

சாமிக்குத் தலை சுழன்றது. மண்டைக்குள் நூறு ரயில்கள் ஓடின. தன் சட்டையைப் பிடித்து இழுத்துச் சிக்கிம் டிக்கட் விற்ற பையன் தன் கையினுள் அந்த டிக்கட்டைத் திணித்தான். 'அதை வாங்கிச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டேன் — ரூபாய் நோட்டைத் தேடி எடுக்கும்வரையில் ....அதே டிக்கட்.....! அஞ்சு லட்சம்.....! மாருதி லாட்ஜ்....! நாற்பது இண்டு பத்து இண்டு மூப்பது...... அஞ்சு லட்சம்.....!'

''லட்சம், லட்சம்'' என்று கத்திக் கொண்டே ஓடினான் சாமி. யாரைப் பார்த்தாலும் இப்போது அவன், ''ஐந்து லட்சம், பத்து லட்சம்'' என்று சதா கூறிக் கொண்டிருக்கிறான்.

மூன்று முடிச்சுக்கள்

கே. பாலசந்தர்





8

பொழுது விடிந்து எழுந்துகொள்கிறபோது ஏதோ ஒரு சுற்று உடல் பருத்திருப்பது போல் பிரமை தட்டியது கமலத்துக்கு! இரவு முழுவதும் கனவில் மோகனசுந்தரத்துடன் எங்கோ எழில் கொஞ்சும் பிரதேசங்களில் சுற்றிச் சஞ்சரிப்பது போன்ற காட்சிகள்தாம்! எத்தனை நாட்களாக அவள் எதிர்பார்த்தாள்! எத்தனை நாட்களாக இந்தக் கருத்தைத் தானே வெளியிடலாமா அல்லது அவர் வாய் மூலமாகவே பிடுங்குவதா என்று துடிதுடித்தாள்! நேற்று மாலை எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு தென்பட்டு விட்டது. இனி அவள் மிஸஸ் மோகன சுந்தரம்!

இரவே தமக்கையிடம் நடந்ததைக் கூறிவிட்டாள். பைரவி கண்ட மகிழ்ச்சிக்கும் எல்லை இல்லை என்றுதான் கூற வேண்டும். எப்படியோ கமலம் அவருடைய இதயத்தில் மலர்ந்து விட்டாள். இனி நிம்மதியாகச் சாகலாம் என்று நிறைவு கண்டு விட்டாள். சொல்லப் போனால் டாக்டர் எச்சரிக்கைப்படி அவளுக்கு மரணம் தலைவாசலில் நின்று கொண்டு கதவைத் தட்ட நாள் பார்த்துக்கொண்டிருந்தது.

இன்ஸ்டிடியூட்டுக்குப் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள் கமலம். அந்த நேரம் பார்த்துத்தானா பைரவிக்கு இருமல் காண வேண்டும்? 'லொக்கு லொக்கு' என்று அளவுக்கு மீறியே இருமினாள். எல்லையற்ற மகிழ்ச்சியின் காரணமாக நுரையீரல் சற்றே உப்பிப் புடைத்ததும் ஒரு காரணம் என்றுதான் சொல்ல வேண்டும். தங்கை அலுவலகத்துக்குப் புறப்படுகிறபோது இப்படி இருமல் வந்து தொல்லை தருகிறதே என்று அடக்கப் பார்த்தாள் பைரவி. இப்படிப் பல முறைகள் அவள் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் அடக்க முயன்றதுண்டு. தான் படுகிற அவதியைத் தங்கை காணாமல் இருக்க வேண்டுமே என்று எண்ணுவாள். ஆனால் அக்காள் மரணவாசலில் நின்று உயிரை யாசித்துக் கொண்டிருக்கிறாள் என்கிற உண்மைதான் கமலத்துக்கு என்றோ புரிந்து விட்டதே!

எவ்வளவு கட்டுப்படுத்தி அடக்கிப் பார்த்தும் பைரவியின் இருமல் நிற்கவில்லை. சேவுகிற அளவுக்கு இருமல் தலைக்கேறியது. அப்படி இருமிக் கொண்டே உட்கார்ந்தபோது கொஞ்சம் ரத்தமும் வாயில் கசிந்தது. தங்கை கமலம் பார்த்து விடக் கூடாதே என்று முந்தானைத் தலைப்பால் துடைக்க முயன்றாள். கமலத்தின் கண்களில் பட்டுவிட்டது. ஓடோடி வந்து,

''அக்கா! வாயில் ரத்தம்....'' என்று பதறினாள்.

''ஒண்ணுமில்லேடி! நீ ஆபீஸுக்குப் புறப்படு!'' என்றாள் பைரவி.

கமலத்தால் அந்த நிலைமையில் அப்படி விட்டுச் செல்ல முடியுமா?

''சரி, சரி! புறப்படு. டாக்டர் வீட்டுக்குக் கொண்டு போய் விட்டுட்டு அப்படியே ஆபீசுக்குப் புறப்படறேன்'' என்றாள் கமலம்.

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். இது ஒண்ணும் எனக்குப் புதுசு இல்லே! இதை விட ரத்தம் கொட்டி நான் பார்த்தாகி விட்டது!''

''அக்கா...!''

கமலம் பிரமிப்புடன் மலைத்து நின்று விட்டாள். தமக்கைக்கு உயிருடன் போராடும் நோய் கண்டிருக்கிறது என்று உணர்ந்து இருந்தாளே ஒழிய, இப்படி ரத்தம் கொட்டிப் பார்த்ததே இல்லை. தனக்குத் தெரிந்து விடக்கூடாது

என்று மறைத்து வருகிற அக்காளின் மனநிலை அவளை விம்மச் செய்து விட்டது. அடுத்து ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாய் வெளியே ஓடினாள் கமலம்.

சற்றைக்கெல்லாம் டாக்ஸியுடன் வந்து சேர்ந்தாள்.


பைரவி வர மறுத்து எவ்வளவோ பிடிவாதம் பிடித்தாள். கமலம் கேட்கவில்லை. கைத்தாங்கலாகப் பிடித்து டாக்ஸியில் ஏற்றிவிட்டு, வீட்டைப் பூட்டிக்கொண்டு புறப்பட்டாள்.

டாக்டரிடம் ஊசி போட்டுக்கொண்டு மருந்து, மாத்திரைகளுடன் வீட்டை அடைகிறபோது மணி பத்துக்கு மேலாகி விட்டது. அதே டாக்ஸியில் அலுவலகம் நோக்கிப் புறப்பட்டாள். மோகனசுந்தரம் கேட்டால் ஏதோ சாக்குப் போக்குகளைச் சொல்ல வேண்டியதுதான். ஆனால் சில மாணவர்கள் அவளுக்காகவே காத்துக்கொண்டிருப்பார்களே!

இரண்டு வளர்பிறைகள் வானுக்கு ஒளி தந்து பூமிக்குக் காலத்தை அரிவித்துவிட்டு மறைந்தன. சிங்காரத்துக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு விட்டது என்கிற செய்தியும் பத்திரிகைகளில் வெளியானது. சீதாவுக்கு அந்த மட்டில் ஒரு பெரிய நிம்மதி. ஆனால் லட்சுமியை அவளால் மறக்க முடியவில்லை. எப்போதெல்லாம் நினைப்பாளோ, அப்போதெல்லாம் குழந்தை மாதிரி கேவிக் கேவி அழுவாள். ஓரளவு அவளுக்கு மோகனசுந்தரத்தின் பராமரிப்பு மிகவும் பிடித்திருந்தது. அந்த வீட்டையும், அங்குள்ளவர்களையும் அவளால் பார்த்து மகிழ முடியவில்லையேயொழிய, மனத்தால் புரிந்துகொள்ள முடிந்தது. பூரித்துப் போனாள்.

கமலம் மட்டும் நாளுக்கு நாள் ஒரு புறம் மகிழ்ச்சியும், மறுபுறம் துன்பமுமாக நடமாடினாள். திருமணத்துக்கு நாளும் குறிப்பிட்டாகி விட்டது. இடையில் தொக்கி நின்றது ஒரே ஒரு வளர்பிறைதான். அது வந்ததும் கமலத்தின் கழுத்தில் மோகனசுந்தரம் மூன்று முடிச்சுக்களைப் போட்டு விடுவான். ஆனால் அக்காள் பைரவியின் நிலைமையைக் காண்கிறபோதுதான் கமலத்துக்கு மனம் பெரிதாகத் துன்பப்பட்டது. அவள் படுத்த படுக்கையாகி விட்டாள். இன்றைக்கோ? நாளைக்கோ?

ஒருவிதத்தில் திருமணத்துக்கு முன்பு அக்காள் இறந்து விட்டாலும் பரவாயில்லை என்கிற எண்ணம் ஏற்பட்டது. பைரவியே இதைத்தான் மனப்பூர்வமாக விரும்பினாள். திருமணமானதும் இப்படி ஒரு நோயாளியை யார் கவனிப்பார்கள் என்பது ஒருபுறமிருக்க, கமலத்தின் தமக்கை என்பவள் பைரவிதான் என்பது தெரிய வருகிறபோது, மோகனசுந்தரத்தின் மனம் எப்படியெல்லாம் மாறுபட்டுக் காணப்படுமோ? முன்கூட்டியே இறந்து விட்டால் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் அவளைத் தூக்கிப்போட்டு விடலாம் அல்லவா?



இக்கருத்தைப் பைரவி சொல்கிறபோது முதலில் கண்ணீர் விட்டுத்தான் கமலம் கதறி அழுதாள். போகப் போக இக்கருத்தில் புதைந்து கிடந்த பயங்கர உண்மையைப் புரிந்துகொண்டு கமலம் இந்த முடிவையே ஆதரிப்பவள் போல் எதிர்பார்க்கவும் செய்தாள். யார் எதிர்பார்த்து என்ன நிகழ்ந்துவிடப் போகிறது? மரணம் சம்பவிப்பதென்பது காலதேவனுடைய 'டைரி'யைப் பொறுத்ததுதானே?

''கமலம்! எனக்கு ஏதாவது பால் கஞ்சி செய்து கொடுத்துவிட்டு நீ வேளையோடு ஆபீசுக்குப் புறப்படு. நீ ஹோட்டல்லேதான் கொஞ்ச நாளைக்குச் சாப்பிடேன். சிறிது காலத்தில் நீ குடும்பத் தலைவியாயிருந்து சமையற்காரன் சமைத்துப் போடச் சாப்பிடப் போறே! எதுக்கு இந்தக் கஷ்டம்?''

லொக்கு லொக்கென்று இருமிக் கொண்டே பைரவி சொன்னாள். அவளுடைய கண்கள் கலங்கிக் காணப்பட்டன. கமலத்தால் இதைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. அக்காள் பைரவி எலும்பும் தோலுமாய்க் கட்டிலில் படுத்துக் கொண்டு இருமுகிறாள். திருமணம் நெருங்கிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் வேளா வேளைக்கு அலுவலகத்துக்குச் செல்லாமல் இருப்பது நல்லதுமல்ல. அவர் வேறுமாதிரி ஏதாவது நினைத்து வீடு தேடி வந்து விடக் கூடாதல்லவா?

அக்காள் கூறியபடியே பால் கஞ்சியைக் காய்ச்சிப் பக்கத்தில் வைத்து விட்டுப் புறப்படத் தயாரானாள். இந்த இரண்டு மாத காலமாக ஒரு வேலைக்காரியை ஏற்பாடு செய்திருந்தாள். சமைத்துப் போடுவதற்கல்ல. அப்படிச் சமைத்துப் போட வேலைக்காரிகளை அமர்த்தினாலும் கட்டுப்படியாகாது என்பதும் அவளுக்குத் தெரியும். அக்காளைக் கவனித்துக் கொள்ளுகிற அளவுக்கு ஒரு வயதான பாட்டியம்மாளாகப் பார்த்து அமர்த்தியிருந்தாள். மாதம் இருபது ரூபாய் சம்பளம். தினம் தேநீர் அருந்தவும், வெற்றிலை புகையிலைக்குமாக முப்பது காசுகளைக் கொடுத்துவிட்டுச் செல்வாள்.

தமக்கையிடம் சொல்லிக்கொண்டு அலுவலகத்துக்குப் புறப்பட்டாள். அன்றைக்குத் திருமண அழைப்பிதழை அச்சடிக்கக் கொடுத்தாக வேண்டும் என்று மோகனசுந்தரம் சொல்லியிருந்தான்.

பஸ்ஸைப் பிடித்து நேரத்தோடு இன்ஸ்டிடியூட்டை அடைந்தாள் கமலம். அவளுடைய வருகைக்காகவே காத்திருப்பவன் போல் வாசலில் நின்று கொண்டிருந்தான் மோகன சுந்தரம். உடன் இன்ஸ்பெக்டர் வராகசாமியும் இருந்தான். அருமை நண்பனாயிற்றே! அவன் இதுவரையில் கமலத்தைக் கண்டதில்லை. நண்பனுக்கு வரப் போகிற மனை



மின்ரஜ்

- இந்தத் தலைப்பில் சிறுகதைகளை வரவேற்கிறோம். ஆகஸ்டு முதல் வாரம் தொடங்கிப் பன்னிரண்டு மின்ரஜ் கதைகள் கல்கியில் பிரசுரமாகும்.

- வழக்கமான சன்மானம் தவிர இவற்றில் சிறந்தது எனநாங்கள் கருதும் சிறுகதைக்கு விசேஷப் பரிசும் அறிமுக எழுத்தாளருக்கு மற்றொரு சிறப்புப் பரிசும் உண்டு.

- மின்ரஜ் கதைகள் இன்றைய இளம் தலைமுறையினரின் பிரச்னைகளையும் சுக துக்கங்களையும் அலசும் யதார்த்தக் கதைகளாகவோ, மர்மக் கதைகளாகவோ, நகைச் சுவைக் கதைகளாகவோ, லட்சியக் கதைகளாகவோ அல்லது வேறுவிதமாகவோ அமைந்திருக்கலாம்.

- அறிமுக எழுத்தாளராயின் மறவாமல் அதைக் குறிப்பிடவும். பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய தபால் தலைகளை வைத்து அனுப்ப வேண்டும்.

ஆசிரியர், கல்கி,

சென்னை – 600031

வியைப் பார்க்க வேண்டும் என்கிற விருப்பத்துடன் காத்திருந்தான்.

கமலம் உள்ளே நுழைந்தாள்.

''குட் மார்னிங் கமல்!'' என்றான் மோகனசுந்தரம்.

''வெரி குட்மார்னிங்!'' என்று புன்முறுவல் பூத்தாள் கமலம்.

''கமல்! இவரை யாருன்னு உனக்குத் தெரியுமா?''

அண்ணாந்து கவனித்த கமலம் 'தெரியாது' என்பது போலத் தலையை அசைத்தாள்.

''வராகசாமின்னு அடிக்கடி பேரைக் கேள்விப்பட்டிருப்பியே!''

''எஸ்! உங்க ஃப்ரெண்டு! இன்ஸ்பெக்டர்!''

''தெட் ஸேம் ஃபூல்தான் இவன்!''

மோகனசுந்தரம் கலகலவென்று சிரித்தான். கமலம் கைகூப்பி வணங்கினாள். வராகசாமியோ கைகூப்பிய வண்ணம், ''கேட்டியா சிஸ்டர்! உன்னோட வருங்காலக் கணவனோட அறிமுகத்தை! இவன் ஒருத்தன்தான் புத்திசாலின்னு உன்கிட்டே 'எஸ்டாபிளிஷ்' பண்ணிக்கிறான்!'' என்று கூறிவிட்டுச் சிரித்தான்.

கமலம் கமலப் புன்னகையுடன், ''உள்ளே ஸ்டூடண்ட்ஸுங்க காத்துக்கிட்டிருப்பாங்க!'' என்று கூறிக்கொண்டே உள்ளே நுழைந்தாள்.

வராகசாமி அவள் போவதையே கவனித்த வண்ணம், ''மோகன்! யு ஆர் எ ரியலி லக்கி ஃபெலோ! பியூட்டிஃபுல் ஒய்ஃப் அண்ட் டியூட்டிஃபுல் கேரக்டர்!'' என்று பாராட்டிக் கை குலுக்கிய வண்ணம் விடைபெற்றுக் கொண்டு சென்றான்.

பன்னிரண்டு மணிக்கெல்லாம் இன்ஸ்டிட்யூட் முடிந்தது. மோகனசுந்தரம் கையில் ஒரு தாளுடன் கமலத்தின் அருகே வந்தான்.

''கமல்! இது நம்ம மேரேஜ் இன்விடேஷன். சரியாயிருக்கான்னு பாரு!''

கமலம் அதனைப் பெற்றுப் பார்த்தாள். ஆங்கிலத்தில் 'டைப்' செய்யப் பெற்றிருந்தது.

''எப்படி?''

''வெரி நைஸ்!''

''அது சரி! உன்னோட இன்ஷியல் என்ன?''

கொஞ்ச நேரம்வரை மோகனசுந்தரத்தை அண்ணாந்து கவனித்த கமலம், ''இன்ஷியலே இனிமேல்தான் போட்டுக்கணும்!'' என்று கூறினாள். கண்ணில் நீர் திரையிட்டது.

''வாட் ஹேப்பண்ட்? நான் இன்ஷியலைத்தானே கேட்டேன்?''

இனிமையான எதிர்காலத்தை நிர்லான் துணையுடன் பெறுவது யார்?



எட்டுப் பொருத்தத்துடன் இணைபவை...
கல்கத்தா ஸில்க் மானு. கம். லிட்., மற்றும்
நிர்லான். விதவிதமான கலவைகளுக்கு வித்திடும்
விந்தை : புடவைகள், ஷர்ட்டிங்குகள், சூட்
துணிகள் மற்றும் எதிர்கால நாகரிகத்தை இன்றே
வழங்கும் பல்வேறு இதர துணிகள்!
பிரியாத உறவில் பிறந்த பேரெழில்

சிறந்த மில்கள் உபயோகிப்பது **நிர்லான்** நூல்

நிர்லான் சிந்தெடிக் ஃபைபர்ஸ் அண்ட் கெமிகல்ஸ் லிட்.

Interpub/NIR/21A Tam

''நானும் அதைத்தானே சொன்னேன்? என்னோட இன்ஷியல் 'எம்'!''

''தெட் மீன்ஸ்?''

''எக்ஸ்கியூஸ் மீ! மோகனசுந்தரம்!''

''ஓ....!'' உதடுகளை அழுத்திக் கூர்மையாகக் கவனித்துத் தோளில் தட்டினான் மோகனசுந்தரம்.

அதுவரையிலும் கேட்காத ஒலி ஒன்று அப்போது பார்த்துக் கமலத்தின் காதுகளில் ஒலி நுழைந்தது.

''டக்டக்...டகடக டக்...''

சுற்று முற்றும் கவனித்தாள். மாணவர்களைக் காணோம். யார் டைப் அடிப்பது?

அண்ணாந்து கவனித்தாள்.

மாடியிலிருந்து 'டைப்' அடிக்கும் சத்தம்....!

கமலத்துக்குத் தான் கேள்விப்பட்ட பழைய நினைவுகள் வந்தன. அதே மாடியில் அக்காள் டைப் அடிப்பதாகச் சொல்லிக்கொண்டு...

''யார் மேலே டைப்....'' சொற்கள் குழறின. ஏன் இப்படிப் பிரமை பிடித்தவன்போலக் கமலம் மாடியை நோக்க வேண்டும்?

மோகன சுந்தரம் சொன்னான் : ''வேறு யாருமல்ல. சீதாதான் டைப் அடித்துக் கொண்டிருக்கிறாள்!''

''என்ன சீதாவா?''

''ஆமாம். பயிற்சி பெறுகிறாள்!''

''மாடியில் ஏன் அவள் டைப் அடிக்க வேண்டும்?''

''அந்த அறைக்கு இப்போது வெளிச்சம் வந்திருக்கு!''

''சீதாவுக்குக் கண்..''

''விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். அவளுக்குப் படிக்கத் தெரியா விட்டாலும் எழுத்துக்களை விரல்கள் மூலம் படித்துக் கொண்டிருக்கிறாள். இருபத்தாறு வயசான பெண்ணால் புரிஞ்சுக்க முடியாதா?''

அயர்ந்து போனான் கமலம்.

''மாடிக்கு ஏறி இறங்கச் சிரமமாக இருக்குமென்னுதான்!'' என்று இழுத்தாள் கமலம்.

'' உனக்கும் எனக்கும் இரண்டு கண்கள் கமல்! உள்ளவர்களுக்கு நெற்றியில் இரண்டு கண்கள். இல்லாதவர்களுக்கு நெஞ்சில் ஆயிரம் கண்கள்!''

''ஓகோ!''


''உனக்கும் எனக்கும் கண்கள் இருக்கு இல்லையா?''

''ஆமாம்!''

''ஒரு சின்னக் கேள்வி!''

''என்ன?''

''இந்த மாடிக்குச் செல்கிற படிக்கட்டுகள் எத்தனையென்று உனக்கோ எனக்கோ தெரியுமா?''



கமலம் விழித்தாள்.

''சீதாவுக்குத் தெரியும்!''

கமலம் தலைகுனிந்து கொண்டாள்.

''இதற்குள் தலை குனிந்துகொண்டால்? கல்யாணத்துக்கு இன்னும் ஒரு வாரம்தான் இருக்கு. அப்போ குனியலாம். ஏன் தெரியுமா? பெண்களுக்கே பெரிய பாரம் அவங்க கழுத்திலே இருக்கிற மூன்று முடிச்சுக்கள்தான்! அதனாலே தான் தலை தன்னாலே குனிஞ்சுடுது!''

கமலம் சுநாதமாகச் சிரித்தாள். நேரமாகிவிடவே விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டாள்.

எதையோ நினைத்துக் கொண்ட மோகனசுந்தரம், ''கமல்! நம் இன்ஸ்டிட்யூட் மாணவன் லோகிதாசன் வீட்டு ஃபங்ஷனுக்கு உனக்கு அழைப்பிதழ் கொடுத்தானா?'' என்று கேட்டான்.

கமலமும், ''எனக்குக் கொடுக்காமல் இருப்பாரா?'' என்றாள் சிரித்துக் கொண்டே.

''அதானே கேட்டேன் யு ஆர் தி மதர் ஆஃப் திஸ் இன்ஸ்டிட்யூட்! நாளைக்குத்தானே அவனோட மனைவிக்கு சீமந்தம்?''

''ஆமாம்!''

''பிரசன்டேஷன் என்ன கொடுக்கிறதுன்னுதான் புரியலே.''

''நான் ஒரு பொம்மை வாங்கிப் பிரசன்ட் பண்ணலாம்னு இருக்கேன்!''

''குட் ஐடியா! நல்லது. நீ புறப்படலாம் கமல்!''

கமலம் புறப்பட்டுச் சென்றாள். மோகனசுந்தரமும் தெரு வாசல் கதவைத் தாழிட்டுக் கொண்டு மாடிப் படி ஏறிச் சீதாவைக் காணச் சென்றான்.

அப்போது—

அவனுடைய கண்களில் எதிர் அறையிலிருந்த அந்தப் பழைய 'டிரங்க்' பெட்டி பட்டு விட்டது. இதுவரையில் அதன் மீது செல்லாத கவனம் இப்போது சென்றது அவனுக்கே ஆச்சரியத்தை உண்டு பண்ணியது. ஆமாம்! எல்லாமே சரியாகவும் சுமுகமாகவும் முடிந்து விட்டன. இந்தத் தரித்திரம் பிடித்த பெட்டி இங்கு ஏன் இருக்க வேண்டும்? தூக்கி எறிந்துவிடலாம் என்கிற நினைவுடன் வேலைக்காரனைச் சத்தமிட்டு அழைத்தான்.

வேலைக்காரன் ஓடோடி வந்தான்.

தூக்கி எறியுமுன் பெட்டியை உடைத்து அதனுள் இருப்பது என்ன என்பதைத்தான் பார்த்து விடலாமே என்றும் மனம் திசை திரும்பியது. வேலைக்காரனை விட்டுப் பெட்டியை உடைக்குமாறு கட்டளையிட்டான்.

துரு ஏறியிருந்த அந்தப் பெட்டிப் பூட்டை உடைப்பது சற்றுச் சிரமமாகத் தானிருந்தது. ஒங்கிச் சுத்தியால் தட்டிய பிறகுதான் பூட்டு உடைபட்டது. பெட்டியைத் திறந்தான் வேலைக்காரன்.

அங்கே—

ஒரு குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது! (அடுத்த இதழில் முடியும்)

வட்ட மேஜை

திரு ஹண்டே அவர்கள் சுதந்திரக் கட்சியை விட்டு விலகியதால் தமிழ் நாட்டில் சுதந்திரக்கட்சி அழிந்தது என்று 20-6-73ம் நாளைய தினத்தந்தி (கோவைப் பதிப்பு) எழுதியிருக்கிறது. இது உண்மைக்குப் புறம்பாகும். ஒரு தனி மனிதரை நம்பிச் சுதந்திரக் கட்சி இருக்கவில்லை. சுதந்திரக் கட்சி முற்றிலும் தன் கொள்கைகளையே நம்பி இருக்கிறது. ஒருவர் விலகியதால் அதன் கொள்கைகள் அழிவதில்லை. தத்துவங்கள் மறைவதில்லை.

ஒரு தனிமனிதனின் உரிமைகளைப் பாதுகாக்க, நமது புராதன பொக்கிஷங்களைப் போற்றி அதே சமயம் புதுமைக்கும் மதிப்புக் கொடுத்து, மக்களை வறுமையிலிருந்தும், சுரண்டலிலிருந்தும் பாதுகாக்கும் மகத்தான இலட்சியங்களை உடையது சுதந்திரக் கட்சி.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி, திறமைக்கு மதிப்புக் கொடுத்து, வரிகளைக் குறைத்து, மக்களை வளமான, சுகமான, சுதந்திர வாழ்க்கை வாழ வைக்கச் சுதந்திரக்கட்சி ஒன்றினால்தான் முடியும். அத்தகைய திட்டங்கள் அதனிடத்தில்தான் இருக்கின்றன. எனவே இவர் விலகிவிட்டதனாலேயே சுதந்திரக்கட்சி அழிந்துவிடாது.

இந்த நாட்டில் உண்மையை உணர்ந்து, மெய்ப்பொருள் காண்கிற கடைசி மனிதன் இருக்கும்வரை சுதந்திரக்கட்சி வாழ்ந்து, வளர்ந்து வெற்றிநடை போடும் என்பதைக் காலத்தின் ஏடுகள் தெளிவாகச் சொல்லும்.

கரூர் — 2
20—6—73 எஸ். ஜெயராமன்

கல்கி 17—6—73 வட்டமேஜையில் வெளியான திருக்காட்டுப்பள்ளி பொன். செல்லத்துரை என்பவரின் கூற்று தவறானதாகும். நான் தஞ்சாவூர் ராசா மிராசுதார் மருத்துவமனையில், வாகனங்களுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் நபர்தான். அன்பர் கூறுவது போல் ஏழைகளின் வாகனமான சைக்கிளுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிப்பது இல்லை. மற்றும் ஏழைகளின் வாகனம் மாட்டு வண்டி, குதிரை வண்டி, கை ரிக்ஷா போன்ற வகைக்கும் நுழைவுக் கட்டணம் கிடையாது. மோட்டார், மோட்டார் சைக்கிள், ஆட்டோ போன்றவற்றுக்குத்தான் கட்டணம் ஐந்து காசுகள் வசூலிக்கிறோம்.

நாகப்பட்டினம்
18—6—73 டி.வி.என். உமாராஜன்



உசிகாகி என்ற ஜப்பானியப் பெயருடன் நாராயணன் என்ற இந்து மதப் பெயரையும் இணைத்துக் கொண்டவர் தம் தாய்நாட்டில் நிறுவிய கழகம் வேதாந்தக் கழக மாய்த்தானே இருக்கும்!

நிப்பன் வேதாந்தக் கழகம்

“சர்வ மங்கள மாங்கல்யே சிவே சர்வார்த்த சாதகே......” என்ற துர்க்கா ஸ்துதியை, பல கடல்களுக்கு அப்பால் உள்ள ஒசாகா என்ற நகர்வாழ் ஜப்பானியர்கள் சிலர் பாடக் கேட்டால் நமக்கு மயிர்க்கூச்சம் உண்டாகும் அல்லவா? இவ்விதமான வியப்பு கலந்த மகிழ்ச்சி எங்களுக்கு 'நிப்பன் வேதாந்தக் கழக'த்தில், நுழைந்தவுடன் ஏற்பட்டது. இந்தோ நிப்பன் பண்பாட்டுறவுக் கழகத்தினரின் கொள்கைகளில் ஒன்று, வருடா வருடம் இந்தியாவிலிருந்து பத்துப் பதினைந்து பேர்கள் அடங்கிய குழு ஒன்றை, ஒசாகா கழகத்துக்கு அனுப்பி, இந்திய கலாசாரம், பழக்கவழக்கங்கள் முதலியவற்றை அவர்களுக்குப் புகட்டியும், ஜப்பானிய அன்றாட வாழ்க்கையை அறிந்து கொண்டு வருவதும் ஆகும். இவ்வாண்டு மே, ஜூன் மாதங்களில், ஒசாகா சென்று வந்த பதினாறு பேர்கள் அடங்கிய குழுவுக்கு, கழகத்தின் காரியதரிசி என்ற முறையில் தலைமை தாங்கிச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நிப்பன் வேதாந்தக் கழகத்தில் ஒரு வாரம் தங்கி இருந்து, அதன் நடவடிக்கைகளைக் கண்டு அறியும் வாய்ப்புக் கிடைத்ததில் பெரு மகிழ்ச்சி அடைந்தேன்.

நிப்பன் வேதாந்தக் கழகம், ஒசாகாவில் பதினெட்டு ஆண்டுகளுக்குமுன் திருநாராயண உசிகாகி என்பவரால் தொடங்கப்பட்டது. பௌத்த மடம் ஒன்றில் சுமார் பதினைந்து வருடங்கள் நன்கு பயின்ற இவர், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் வாழ்க்கை வரலாற்றைப் படித்து, இந்து மதத்தில் இச்சை கொண்டார். மேலும் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றிய நூல்களைக் கற்று அறிந்த இவர், “நான் இந்தக் கொள்கைகளையும் இந்து மத சாரத்தையும் ஜப்பானியர்களுக்கு — முக்கியமாகச் சிறுவர்களுக்கு எடுத்து உணர்த்துவதில் என் வாழ்நாட்களைக் கழிப்பேன்” என்று சபதம் பூண்டார்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக இந்தக் கழகம், ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கை வரலாற்றையும், அவருடைய போதனைகளையும் ஜப்பானிய மொழியில் பெயர்த்துப் புத்தகங்களாக வெளியிடுகின்றது. ஜப்பானில் டோக்கியோ, க்யோடோ, கோபே போன்ற பல நகரங்களில் கிளைகள் ஏற்படுத்தி, இந்து மதத்தின் சிறந்த பல கொள்கைகளைப் பரப்புவதிலும், இந்தியர்களுக்கும் ஜப்பானியர்களுக்கும் இடையே நல்லுணர்வு, சிநேக மனப்பான்மை வளர்ப்பதிலும் ஈடுபட்டுள்ளது.

ஒசாகாவில் நடைபெற்ற 'எக்ஸ்போ-70'க்குச் சென்றிருந்த என்னூற்றுக்கு மேற்பட்ட



படம்: இந்திய - நிப்பன் பண்பாட்டுக் கழக அங்கத்தினர்களுடன் திரு நாராயண உசிகாகி. வலது கோடியில் கட்டுரை ஆசிரியர்.

இந்தியர்களுக்கு இந்தக் கழகம் தங்க இடம் கொடுத்து, விருந்தினராக உபசரித்தது. அச் சமயம் உருவாகியதே இந்தோ நிப்பன் பண்பாட்டுறவுக் கழகம்.

பங்களா தேசத்தில் கொடூரக் கொலை நடந்து, பல்லாயிரக்கணக்கான மக்கள் அவதியுற்றபோது, அவர்களின் உதவிக்குப் பதறி எழுந்த பல்வேறு கழகங்களில், ஓசாகா—நிப்பன் வேதாந்தக் கழகமும் ஒன்றாகும். டாக்கா நகரில் பெரிய அளவில் ஓர் அநாதை இல்லத்தையும், மருத்துவமனையையும் உருவாக்கி வரும் இக்கழகம் அங்கு பணி புரிவதற்கு என ஒரு சில ஜப்பானிய இளைஞர்களையும் அனுப்பி யிருக்கிறது. சென்னையின் இந்தோ நிப்பன் பண்பாட்டுக் கழகத்தினரின் உதவிக்காக, ஜப்பானியர்களை அவ்வப்போது அனுப்பி ஜப்பானிய மொழியையும், மற்றக் கலைகளையும் கற்றுக் கொடுக்க உதவும், இக் கழகம் தமிழகத்தில் வேதாரண்யத்தில் உள்ள சர்தார் வேதரத்தினம் ஞாபகார்த்தப் பள்ளியில் காந்தியக் கொள்கைகளைப் பரப்ப உதவுவதற்கென ஜப்பானியர் ஒருவரை அனுப்பியதுடன், பொருளுதவியையும் செய்திருக்கிறது. இக்கழகத்தின் நற்பணியைக் கண்டு மகிழ்வுற்ற இந்தியர் ஒருவர், ஆஜ்மீரில் இல்லம் ஒன்றை நிறுவத் தம் சொத்து முழுமையையும் நன்கொடையாக அளித்துள்ளார்.

நவநாகரிகத்திலும், விஞ்ஞானத்திலும், பொருளாதாரத்திலும் முன்னே நிற்கும் ஜப்பானியர், இந்து மதக் கொள்கைகளிலும் ஸ்ரீராமகிருஷ்ணரின் தத்துவங்களிலும் நல்ல முறையில் நம்பிக்கை கொண்டு, மேன்மேலும் இந்தக் கழகத்தின் அங்கத்தினர்களாக ஆகி வருகின்றனர். புராதன ஷிண்டோ கடவுளரை மட்டுமின்றிப் புத்தரையும் அவரவர் விருப்பப்படி வழிபட்டு வரும் ஜப்பானியர் தற்போது இந்து மதத்துக்கும் இடமளித்து வரவேற்கின்றனர். - மா. சா. இராமமூர்த்தி

ஜஞ்ஜீர்

சங்கிலி என்று பொருள் தரும் படம் ஜஞ்ஜீர். சின்னஞ் சிறு பாலகன் விஜயன் கண் முன்னே ஒரு கோரக் காட்சி. அவன் தாய்—தந்தையர் துப்பாக்கியினால் சுடப்பட்டு மரிக்கின்றனர். சுட்டவனின் உருவம் பாலகனின் மனத்தில் நன்கு பதிந்துவிடுகிறது. கதைச் சங்கிலியின் முதல் — இறுதி இணைப்பு இதுவே.

விஜயனை ஒரு போலீஸ் அதிகாரி வளர்த்து ஆளாக்கி விடுகிறார். போலீஸ் துறையிலேயே அவனுக்கு உத்தியோகம் கிடைக்கிறது.

தீமை கண்ட இடத்தில் அதைத் தானே களைய முற்பட்டுவிடுகிறான் விஜயன். நியாயம் கோரிக் கோர்ட்டு வரை போகும் பொறுமை அவனுக்கு இல்லை. இப்பொறுமையின்மைக்குக் காரணம், திரைப்படங்களுக்கே அத்தியாவசியத் தேவையாகிவிட்ட சண்டைக் காட்சிகளுக்கு வழி வகை செய்யத்தான்! அவனுக்கு மேலதிகாரியாக வரும் இஃப்டிகார் இதைத் தடுக்கிறார், 'நியாயம் வழங்கும் பொறுப்பை நீ ஏற்காதே!' என்று. அவர் உபதேசத்தைப் பொருட்படுத்தாமல், ஷேர்கான் என்னும் சூதாடியுடன் பொருதுகிறான். தவறான வழியில் சம்பாதித்தாலும் அதிலும் ஒரு நேர்மையைக் கடைப்பிடிப்பவன் ஷேர்கான். தனது கூட்டாளிகளைத் தனியே தள்ளி நிறுத்தி வைத்துத் தான் மட்டுமே அவனோடு துவந்தப் போர் புரிகிறான். விஜயனைத் தனக்குச் சமதையான பலம் கொண்டவனாகக் கண்டு, நேசக் கரம் நீட்டுகிறான்; தனது இழிதொழிலை விடுகிறான். இது கதைச் சங்கிலிக்கு ஒரு நட்புக் கண்ணி.

கள்ளச் சாராயம் காய்ச்சிப் பலர் சாவுக்குக் காரணமாக இருப்பவன் தேஜா. அவன் வாழ்க்கையில் குறுக்கிட்டுப் பகைமையை விலைக்கு வாங்கிக் கொள்ளுகிறான் விஜயன். லஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறைக்கம்பியை எண்ணுகிறான். இது பகைமைக் கண்ணி.

சாணை பிடிக்கும் பெண் ஒருத்தி — மாலா என்று பெயர். சில சிறுவர்கள்மீது ஏறிச் சென்ற லாரியின் டிரைவரை அடையாளம் கண்டு கொள்வதற்காக அவளது நெருக்கத்தைப் பெறுகிறான். இது கதைக்கு ஓர் அன்புக் கண்ணி. அந்தக் கண்ணி அவளது ஆடை அணிகளை மாற்றி நாகரிக மங்கையாக்கித் திருமணம் செய்து கொள்ளும்வரை நீளுகிறது.

மாலாவாக வருபவர் ஜயாபாதுரி. ஆடை-அணிகள் மாறுகின்றனவே தவிர நடிப்பில் அவருக்குப் பழக்கப்பட்ட பழைய முத்திரைகளேதான் மேலோங்கி நிற்கின்றன.

அடி — உதைக் காட்சிகளில் 'பறக்கும் உதை' கொடுத்து மல்லாந்து கீழே விழுந்து மெத்தனமாக எழுந்து வரும் அமிதாப் பச்சன், (விஜயன்) உணர்ச்சி வேகத்தை மட்டுமின்றி, பாத்திரத்தின் வேகத்தையும் மட்டுப்படுத்தி ஏர்... ஆனால் தமது அநாயாச நடிப்பால் பிராணன் உயிர் கொடுக்கிறார்.

கள்ளச் சாராயம் காய்ச்சும் தேஜாவாக வரும் அஜித்துக்கு இது போன்ற பாத்திரங்கள் தண்ணீர் பட்ட பாடு! கதைக் கண்ணிகளை அறுகாமல் இணைத்துச் சென்றிருக்கும் முறை பல குறைகளை மறக்கச் செய்கிறது! — ரா. வீ.



கும்ப-சிம்ம ராசிப் பொருத்தம் அதிர்ஷ்டத்தின் உதயம்
லால்பாய் தரும் நீலம்—பொன் வண்ணம் கவரும் இதயம்

லால்பாய்—அதிர்ஷ்டப்
பொருத்தம் அளிப்போர்

மக்களைப் போலவே
வண்ணங்களுக்கும்
ஒற்றுமை, வேற்றுமை,
பொருத்தம் எல்லாம்
உண்டு.
அந்த நவீன வண்ணப்
பொருத்தங்களை தங்கள்
அற்புதமான துணிகளிலே
வழங்குகிறார்கள்
லால்பாய்! செய்நயம்,
வண்ண மயம்.
டிசைனின் தரம் மற்றும்
நூதன ரகம் கொண்ட
அத் துணிகளில்,
உங்கள் ராசிக்கு ஏற்ற
அதிர்ஷ்டமான
வண்ணங்களைத்
தேர்ந்தெடுத்து
அணியுங்கள்.
தேர்ந்தெடுக்க
7 மடங்கு வகைகள்
வேறு எங்குதான்
கிடைக்கும்!

உங்கள் அதிர்ஷ்டச்
சின்னத்தை அணியுங்கள்.



லால்பாய் தரும் துணிகள்

ஆனந்த்
அசோக்
ராஜ்பூர்
சாஸ்பூர்
அருண்
நூதன்
நியூ காட்டன்

ஏழு மில்களின் ஏற்றமிகு துணிகள்

CMLB-14-172 TM

M/s. வெங்கடேஷ், 243, 244, என்.எஸ்.ஸி. போஸ் ரோடு, சென்னை-1
M/s. ஆனந்த் டெக்ஸ்டைல்ஸ், பெரிய கடை வீதி, திருச்சி-8
M/s. ஈஸ்வரீஸ், 26-பி, மேற்கு டவர் தெரு, மதுரை-1

ஸ்கூல் மாஸ்டர்

முழுக்க முழுக்க 'வாத்தியார்' படமாயிருந்தும் அடிதடி சண்டைக் காட்சிகள் இல்லாதது புதுமையில்லையா !

திரைக் கதை மிக மிகப் பழையது: பல ஆண்டுகளுக்குமுன்பு கன்னடத்தில் படமாக வந்து வெற்றி முரசு கொட்டியது ; தமிழிலும் 'டப்' செய்யப்பட்டுப் பீடுநடை போட்டது. இப்பொழுது மீண்டும் அதே கதை தமிழில் படமாக்கப்பட்டு வெளிவந்திருக்கிறது. உணவு வகைகளில்கூடப் பழையதுக்குத்தான் சத்து அதிகம்; திரைக் கதையிலும் பழையதில் இருக்கும் சத்தும், சாரமும் இப்பொழுது வரும் புதிய கதைகளில் இல்லையே !

பத்மினி பிக்சர்ஸாரின் ''ஸ்கூல் மாஸ்டர்'' ஓர் ஏழைப் பள்ளி உபாத்தியாயரின் கதை: நீதிக்கும் நேர்மைக்கும் உறைவிடமாக விளங்கிய அவர் வாழ்வில்தான் எத்தனை சிக்கல்கள்! எத்தனை துன்பங்கள்! இந்தக் கதையிலும் குறைகளே இல்லையென்று சொல்ல முடியாது. ஆயினும் சிறந்த பாத்திரப் படைப்பு அந்தக் குறைகளையெல்லாம் இட்டு நிரப்பி விடுகிறது.

நேர்மையில் பிறழாத பள்ளி உபாத்தியாயராக ஜெமினி கணேசன் வருகிறார். முதலில் அவரது வேஷப் பொருத்தத்துக்கு ஒரு 'சபாஷ்' போட்டுவிட வேண்டும். அப்புறம் அவர் பேச்சுக்கு ஒரு 'சபாஷ்'. பிறகு அவர் ஏற்ற பாத்திரத்துக்கு ஏற்றம் அளிக்கும் நடிப்புக்கு ஒரு 'சபாஷ்'. கனிவு, கசிவு, குழைவு, இவை யாவும் ததும்பும் குரலில் மிக மிக இயல்பாக 'ஜானு' என்று அழைக்கும் அழகு ஒன்றே போதும். அவருக்கு இந்தப் படத்தில் காதலிக்க நேரமில்லை; வாய்ப்பும் இல்லை; அவரைக் காதலிப்பாரும் யாரும் இல்லை. உபாத்தியாயர் வேலையிலிருந்து ஓய்வு பெற்ற அன்று அவர் வீட்டில் நடந்து கொண்டது ; மனைவியைவிட்டுப் பிரிந்து மகனுடன் சென்றபோது அவளிடம் பிரியாவிடை பெற்றுக் கண்களில் நீர் மல்கச் சென்றது; மனைவியினிடமிருந்து வந்த கடிதத்தை ஆவலோடு பிரித்துப் படிக்கப் போன தருணத்தில் மூக்குக் கண்ணாடி உடைந்து போய்த் தவித்த தவிப்பு; மனைவியைப் பிரிந்து மகன் வீட்டில் இருந்த காலத்தில் இருமல் நோயால் அவதிப்பட்டு இருமி இருமி நொந்தது — ஆகிய கட்டங்களில் எல்லாம் ஜெமினி கணேசன் தம் நடிப்பாற்றலுக்குப் பல 'சபாஷ்'களைப் பெற்று விடுகிறார்.

ஜாடிக்கு மூடி வாய்த்ததுபோல், உபாத்தியாயர் ஞானசம்பந்தத்துக்கு மனைவியாக ஜானகி வாய்த்திருக்கிறாள்; 'என்ன பொருத்தம்! என்ன பொருத்தம்!' சௌகார் ஜானகியைத் தவிர வேறு யார் அந்தப் பாத்திரத்தை ஏற்றிருந்தாலும் பொருத்தமா யிருந்திராது. படத்தில் இளந் தம்பதியரைக் கண்டுதான் யாரும் ரசிப்பார்கள். ஆனால் இந்தப் படத்தில், இந்த வயோதிகத் தம்பதியர்தான் எல்லோருடைய பாராட்டுக்களையும் பெறுகிறார்கள். ஓர் ஆணும் பெண்ணும் காதலிக்காமலேயே சுவையாக நடிக்க முடியும் என்பது இதன் மூலம் நிரூபிக்கப்படுகிறது! எழுத்து வாசனை இல்லாத, நவநாகரிகம் என்பது என்னவென்றே தெரியாத, ஒரு பழைய காலத்துப் பெண்மணியாக வரும் சௌகார் ஜானகி தம் பாத்திரத்துக்கு உயிர் கொடுத்துவிட்டார்; டெலிபோனில் பேசத் தெரியாமல் தவிக்கும்போதும், கணவனுக்குக் கடிதம் எழுத உட்கார்ந்து எழுதத் தெரியாமல் காகிதங்களைக் கசக்கி எறியும்போதும் அவர் நடிப்பு சிகரத்தை எட்டிவிடுகிறது.

'சோ' ஓர் உபாத்தியாயராக வருகிறார். பள்ளிக்கூடங்களில் நடக்கும் ஊழல்களுக்கும் அசம்பாவிதங்களுக்கும் தம் நடிப்பினாலும், பொருத்தமான பேச்சினாலும் நன்கு வெளிச்சம் போடுகிறார்.

குமாரி பத்மினி, ரமாப்பிரபா, ராஜஸ்ரீ, சசிகுமார், ஸ்ரீகாந்த் ஆகியவர்கள் நன்றாகவே நடித்திருக்கின்றனர். பாவாடை, தாவணியுடன் பருவப் பெண்ணாக வரும் ராஜஸ்ரீ தம் 'கொழு கொழு' உடம்பின் வளர்ச்சியை உடனே கட்டுப்படுத்த முயற்சி எடுக்க வேண்டும் !

முத்துராமனுக்கு மிகவும் கௌரவமான பாத்திரம் — உபாத்தியாயர் மெச்சிய மாணவன் ! அவரும் படத்தில் கௌரவ நடிகராகத்தான் நடிக்கிறார். திரு ஜகதீசன் மிகவும் சுவையாக வசனம் தீட்டியிருக்கிறார்.

திரு பி.ஆர். பந்துலு பழம் பெரும் டைரக்டர்; அநுபவம் மிக்க நடிகர்; பிரபல படத் தயாரிப்பாளர். அநுபவ அறிவு அவருக்குக் கைகொடுத்து உதவியிருக்கிறது.

வில்லன் கடைசிவரை வில்லனாகவே இருந்து தொலைப்பதும், மனைவிமார்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு தாய் தந்தையர்களை அலட்சியப்படுத்தும் பிள்ளைகள் வரும் காட்சிகளும் படத்தின் 'அறுவை' பாகங்கள் !

ஆறு பாடல்களில், ''தன்னந் தனிமையிலே'' என்ற கண்ணதாசனின் பாடல் இனிமையாக ஒலிக்கிறது.

முற்றிலும் புதுப்பிக்கப்பட்ட புராதனமான கட்டடம் ''ஸ்கூல் மாஸ்டர்.'' — காந்தன்





ராஜாஜியின் ஜெயில் டைரி

1922 பிப்ரவரி, 11உ.

சனிக்கிழமை: நேற்று இரவு ஒரே புழுக்கம். கொசுக்கள் வந்து நிறைந்து விட்டன. வெளியே மரங்களில் இலைகள் அசைந்தாலும் உள்ளே ஒரு துளிக் காற்றுக்கூட வரவில்லை. அறையில் ஒரே ஒரு ஜன்னல்தான். அதுவும் சிறியது. அதிக உயரத்தில் உள்ளது. அறையின் வாசலுக்கு இரு பக்கங்களிலும் பெரிய தூண்கள். காற்று வர இடம் ஏது? இங்கே உள்ள கொசுக்கள் மிகக் கடுமையானவை. முரட்டுக் கதர் போர்த்தியிருந்தாலும் அவற்றுக்கு லட்சியமில்லை. அதையும் துளைத்துக் கொண்டு கடித்து விடுகின்றன. மூச்சு விடுவதற்காகத் திறந்துள்ள இடுக்கு வழியாகவும் உள்ளே நுழைந்து விடுகின்றன. இந்த மாதிரி ஜன்னல் என்று பெயருக்கு மட்டும் ஒரு சிறு துவாரம் வைப்பதுதான் அரசியல் கைதிகளுக்கு ஏற்படுத்தியுள்ள 'விசேஷ மரியாதை' போலும்! ஒருவேளை நான் கூறுவது கடுமையாகத் தோன்றலாம். ஆனால் இரவு முழுதும் உறங்காதிருந்து பார்த்தால் தெரியும். அப்பொழுது யாராலும் வேறு விதமாக எழுத முடியாது.

இன்று வீட்டிலிருந்து கடிதம் வந்தது. காந்தியடிகளிடமிருந்தும் ஒரு கடிதம் வந்தது. பர்தோலியிலிருந்து பிப்ரவரி 3ந் தேதி எழுதியிருக்கிறார். அதில் அரசியல் வாசனை அணுவளவும் கிடையாது. கடிதம் வருமாறு:

''தங்கள் கடிதம் கிடைத்தது. சந்தோஷம். தினசரிப் பத்திரிகைகள் கொடுக்கப்படாததால் தங்களுக்கு எவ்வித நஷ்டமும் உண்டாகி விடாது. தங்களிடம் ராட்டினமும் ராமாயணமும் இருப்பது குறித்து எனக்குப் பொறாமை உண்டாகிறது. வால்மீகி ராமாயணத்தை ஆபாசமாக மொழிபெயர்த்திருக்கிறார்களே, அது இருக்காது உங்களிடம். கம்பராமாயணம்தான் வைத்திருப்பீர்கள். அதில் சில பாகங்களை நான் போப் தயாரித்துள்ள தமிழ் வாசக நூலில் படித்திருக்கிறேன்.

தாங்கள் நிறை குறைந்து விடலாகாது. நம்முடைய கூட்டத்தில் நான்தான் அதிக நிறை குறைந்தவன் என்று எண்ணியிருந்தேன். ஆனால் தாங்கள் என்னைவிடப் பத்து ராத்தல் குறைவாக இருக்கிறீர்களே. தங்களுக்கு ஏராளமாகப் பால் கொடுக்கிறார்கள் என்று நம்புகிறேன். பாலும் சாறுள்ள பழங்களும் ஏராளமாகக் கிடைக்குமானால், உங்களுடைய ஆஸ்துமா போய்விடும், நிறையும் கூடும்.

தேவதாஸ் அலகாபாத்தில் இருக்கிறான். கிறிஸ்தோ தாஸும் ராம தாஸும் எனக்கு சிசுருஷை செய்து வருகிறார்கள். தாங்கள் மட்டும்தான் தனிமையை அனுபவிப்பதாக எண்ண வேண்டாம். சுந்தரம் இப்பொழுது ஆசிரமத்தில் மௌன விரதம் பூண்டிருக்கிறார். அவர் அதிகமாகப் படித்திருக்கிறார். ஆனால் சிந்திப்பது சிறிதே. அதனால் இந்த மௌன விரதம் அவருக்கு நன்மை பயக்கும் என்று நம்புகிறேன். — மோ. க. காந்தி.''

வீட்டிலிருந்து வந்த கடிதம் அவ்வளவு உற்சாகம் அளிப்பதாக இல்லை. லட்சுமியும் நரசிம்பனும் எதுவும் எழுதவில்லை. ஆனால் பாப்பா எழுதியதற்குக் கீழே லட்சுமி குட்டிக் கையெழுத்திட்டிருக்கிறான். நரசிம்மனும் ராமுவும் சேலத்திலிருந்து எதுவுமே எழுதவில்லை.

வார்டர் கேசவ பிள்ளை அஜாக்கிரதையாக இருந்ததாகக் கூறி அவருக்கு வேறு வேலை கொடுத்திருக்கிறார்கள். ஒரு நாள் இரவு அவர் காம்பவுண்டுக் கதவைப் பூட்டவில்லையாம். அதை மறுநாள் காலை பிரதம வார்டர் கண்டுவிட்டாராம். அதன் மேல் அவரைக் கூப்பிட்டு வேறு வேலைக்கு அனுப்பி விட்டார்களாம். அவர் இன்று வந்து தமது பட்டணத்துப் பிள்ளையார் பாடல் புத்தகத்தை என்னிடமிருந்து வாங்கிக் கொண்டு போய்விட்டார்.



ஆண்டுதோறும் இதன் புகழ் பெருகுகிறது

லிப்டன் ரூபி டஸ்ட்



லிப்டன் ரூபி டஸ்ட் வெகு விரைவில் இவ்வளவு புகழ் பெறக் காரணம்தான் என்ன? ஒவ்வொரு பாக்கெட்டுக்கும் அதிகக் கோப்பைகள் விரும்பும் உங்களைப் போன்ற ரசிகர்கள்— உண்மையிலேயே திருப்தி தரும் நிறைந்த மணமும், சுவையும் கொண்ட டிகாக்ஷன்.

பாக்கிங் செய்த தேயிலை மட்டுமே புதிதாகவும் மணத்துடனும் திகழ்கிறது

பாக்கிங் செய்த தேயிலை மட்டுமே புதிதாகவும் மணத்துடனும் திகழ்கிறது

LRDC-8A/73 TAM

ஒவ்வொரு பாக்கெட்டுக்கும் அதிகக்கோப்பைகள் தருவதாலேயே மக்களின் உள்ளங்கனிந்த பாராட்டுகளைப் பெறுகிறது

இசைச் சிகிச்சை


இசைக்கு வயப்படாத உயிரினங்களே இல்லை. கொடிய நச்சரவம் மகுடிக்குக் கட்டுப் படுகிறது. இசை கேட்ட பசு கூடுதலான பாலைச் சுரப்பதாக அவ்வப்போது செய்திகள் வெளியாகின்றன. கடந்த சில ஆண்டுகளாக, மேலைநாட்டு மருத்துவ நிபுணர்கள் இசையின் உதவியால் பிணி தீர்க்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். மேலை நாட்டு மருத்துவ முறையின் தந்தை என மதிக்கப் பெறும் ஹிப்போக்கிரேட்ஸ் என்ற கிரேக்க மருத்துவரே ஆதி நாளில் பிணியின் கொடுமையைத் தணிக்க இசையைப் பொரிக செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. மகளிரின் பிரசவ வேதனையைக் குறைக்கப் பண்டைய எகிப்திய மருத்துவர்கள் இசையைப் பயன் படுத்தியதாகவும் தெரிய வருகிறது.

'இசைச் சிகிச்சை இன்று எந்த அளவுக்கு வளர்ந்துள்ளது?' இவ்வினாவுக்கு மூளை அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். கல்யாணராமன் கூறுவதாவது :

''கடந்த இரண்டாவது உலகப்போரின் பிற்பகுதியில்தான் இச்சிகிச்சையின் தேவை மிகவும் அதிகமாக இருந்தது. போரில் காயமடைந்தவர்கள், அதிர்ச்சிக்கு உள்ளானவர்கள் ஆகியோருக்குச் சிகிச்சை அளிக்க இசை கையாளப்பட்டது. அமெரிக்காவிலுள்ள வால்டர் ரீட் ராணுவ மருத்துவ மனையைச் சார்ந்த மேஜர் ஜெனரல் மேரியட்டா என்பவர் அம்மருத்துவ மனையில் இசைச் சிகிச்சை முறையைக் கையாள அங்கீகாரம் வழங்கினார். அதன் பின் பல நாடுகளில் மருத்துவத் துறையின் பல்வேறு பகுதிகளிலும் இந்த இசைச் சிகிச்சை முறையைப் பரவலாகக் கையாளத் தொடங்கினார்கள்.

''மூளையில் காயம்பட்டு, நினைவிழந்த நோயாளி சுய உணர்வினைத் திரும்பப் பெற இசை பயன்படும். மூளை அறுவைச் சிகிச்சைக்குப் பிறகும் இசை உதவியால் நினைவு திரும்பக் கூடும். தொடர்ந்து பல நாட்கள் சுய நினைவு இழந்திருந்த நோயாளி திடீரென்று தனக்குப் பரிச்சயமான அல்லது மிகவும் பிடித்தமான ஒரு பாடலைக் கேட்கும்போது, பழைய நினைவுகள் தோன்றக் கூடும்.

''மேலை நாடுகளில் மனநோய்ச் சிகிச்சை நிபுணர்கள் பிணியின் கடுமையைக் குறைக்கவும், உபாதையைத் தணிக்கவும் இசையைப் பயன்படுத்துகின்றனர். தூக்கமருந்துகள் கொடுத்து நோயாளியை ஆசுவாசப்படுத்துவதற்குப் பதில் இசையினைப் பயன் படுத்துவது சிறந்த முறை. சோர்வுற்றுத் தளர்ந்த நிலையிலுள்ள நோயாளிகளுக்கும் இசை ஓர் உத்வேகத்தை அளிக்கும். உதாரணமாக, ஒரு பஜனைக் கோஷ்டியில் பலர் சேர்ந்து பாடும்போது உடனிருந்து செவிமடுக்கும் ஒருவர், தம்மை மறந்து அந்தக் கோஷ்டியோடு சேர்ந்து பாடத் தொடங்குவது சகஜம். சிறிது சிறிதாக அவரது உற்சாகம் வளர்ந்து மேலிட்டு அவரது மனத்தளர்ச்சி நீங்கக் கூடும்.



''யாராவது சங்கீத வித்வான் வீட்டில் ஒரு போர்ஷன் காலியா யிருந்தால் சொல்லேன். நான் குடிபோய்விடறேன்!''

''இது என்ன நீ சொல்வது தலைகீழ்ப் பாடமா இருக்கே?''

''காரணமாத்தான். ரத்த அழுத்தத்துக்கு டாக்டர் என்னை இசைச் சிகிச்சை மேற்கொள்ளுமாறு சொல்லியிருக்கார். காசு செலவில்லாமல் சிகிச்சை நடக்குமில்லியா?''



''புத்தி பூர்வமாகச் சற்றுப் பின் தங்கிய நிலையிலுள்ள சிறார்களின் மன வளர்ச்சிக்கும் இசை பெரிதும் பயன் படும். சாதாரணமாகப் பலர் உரையாடும்பொழுது அந்த உரையாடலைப் புரிந்துகொள்ளும் சக்தியற்ற நிலையிலுள்ள சிறுவர் சிறுமியர் கூட இசையினால் கவரப்படுவது இயல்பே. அவர்களுக்கு இயல்பாகப் பேசக் கற்றுக் கொடுப்பதை விட இசை பயிலுவித்தல் எளிது. இசைப் பயிற்சியின் மூலம் அவர்களது அறிவு வளர்ச்சிக்குப் படிப் படியாக வழிவகுக்க முடியும்.

''இரத்த அழுத்தம், ஆஸ்துமா, தூக்கமின்மை முதலிய நோய்களுக்கு இசைச் சிகிச்சை நல்ல பலனளிக்கக் கூடும். பல் வைத்தியத்துக்கும், அறுவைச் சிகிச்சைக்கும் சிகிச்சைக்கு முன்பு மயக்க மருந்து கொடுக்கும் தருணத்திலும் இசை பெரிதும் உதவும். அமெரிக்காவிலும் ருஷ்யாவிலும் இச்சிகிச்சை ஒரு பிரத்தியேகச் சிகிச்சை முறையாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது. பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளிலும் இது பரவலாக அமலுக்கு வந்துள்ளது.

''சென்னையிலும் பரீட்சார்த்தமாக முயன்று பார்த்து வருகிறோம். சர்வதேசிய இசைச் சிகிச்சை நிறுவனத்தின் சென்னைக் கிளைக்குப் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி உப தலைவர். அவர் இது குறித்து மிக்க ஆர்வம் கொண்டுள்ளார். இசைச் சிகிச்சை வருங்காலத்தில் பரவலாகக் கையாளப்பட்டு நல்ல பலன் அளிக்கக்கூடும் என்ற நம்பிக்கைக்கு இடமிருக்கிறது'' என்கிறார் டாக்டர் கல்யாணராமன்.

பேட்டி: 'பாணன்'

உன் துணை என்றைக்குமா?



எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

பள்ளிக்கூடம் திறந்து விட்டது. பச்சை நிறமும் வெள்ளை நிறமும் இணைந்த உடுப்புக் களில் குழந்தைகள் வரத் தொடங்கிவிட் டார்கள். விவரம் புரியாமல் அழுது கொண்டே ரிக்ஷாவில் வந்து இறங்கும் 'கிண்டர் கார்டன்' குழந்தைகள். ஒரு நிமிடம் கேலியும் சிரிப்பும் இன்னொரு நிமிடம் சண்டையும் கோபமுமாக அலையும் அடுத்த வயதுக் குழந்தைகள். கலகலவென்ற பேச்சும் எதிலும் போட்டியுமாக நிற்கும் சற்று வயது உயர்ந்த பெண்கள்.

அவர்களையெல்லாம் பார்க்கும் போது, மீண்டும் அந்தந்த வயதுகளில் தானே வாழ் வதுபோல் ஒரு பிரமை தோன்றும் சுலோசனு வுக்கு. 'சுலோ டீச்சர்' என்று பின்னுலே வளைய வரும் குழந்தைகள், பவழமல்லி மரம் மண் தரை மறையக் கொட்டுவதைப்போல், அன்பை அவளிடம் தடை இல்லாமல் பொழி யும். சில சமயம் அவளுக்கே தோன்றும், இப்படி ஓர் அன்பில் கலந்துகொள்ளத் தனக்கு அருகதை உண்டா என்று.

அவ்வளவு முகங்களுக்கும் நடுவே இனமும் அவள் பார்வை மீனுவைத்தான் தேடிக் கொண்டிருந்தது; கடிதத்தின் வரிகளில் முக் கியமான செய்தி ஒன்றைத் தேடுவதைப் போல. அந்த முகம் காணவில்லை. கையை உதட்டில் வைத்தபடி நின்று, கண்களில் ஒரு புன்சிரிப்பு தெறிக்கப் பார்த்துவிட்டு, கிட்டே வந்து தொட்டுவிட்டுப் பிறகு சோழிகள் குலுங்குவதுபோல் சிரித்தபடி ஓடும் அந்த முகம்.

பள்ளிக்கூடம் திறந்து நான்கு நாட்கள் ஆகிவிட்டன. இன்னும் மீனுவைக் காணும். வேறு பள்ளிக்கூடத்தில் சேர்ந்துவிட்டாளா ? இருக்கலாம். போன வருடம் இதே சமயம் இரண்டாவது வகுப்பில் அவள் சேர வந்தது ஞாபகம் இருக்கிறது. அந்தக் கண்ணும் பார்வையும், உப்பிய கன்னங்களில் சிரிக்கும் போது விழும் குழியும், கொஞ்சம் கோபித் துக் கொண்டாலும் முகம் ஒளி மங்கிக் கண் கலங்கும் விதமும் அந்த முகத்தைத்தான் நினைவு படுத்தின அவளுக்கு. குழந்தையாக ஜானு இப்படித்தான் இருந்திருப்பாளா?

ஜானகி இப்போது எங்கே இருக்கிறள் ? இந்த வயதில் அவளுக்கு ஒரு குழந்தை இருக்க லாம். இந்த 'எஸ்' கட்டுப் பின்னலை வாரி முடித்து, இந்தச் சட்டையை அணிவித்துப் பின் பொத்தான் போடுகிற விரல்கள் அவ ளுடையவைதானு? 'போய்விட்டு வருகிறேன்' என்று மீனு தினமும் தோளில் பையை மாட் டிக் கொண்டு படி இறங்குகிற நேரம், சொல் லிக் கொண்டு வருகிற முகம் ஜானுவி னுடையதுதானு ?

என்ன அர்த்தமில்லாத நினைவு? ஜானு எங்கேயோ தில்லியில் இருக்கிறள். சென்னையை, அதன் தொடர்புள்ள ஞாபகங் களை மறந்தால்தான் அவளுக்கு நிம்மதி. அவள் எப்படி அங்கே வருவாள்? ஆனாலும் மீனு அவளைத் தொடும்போதே ஜானகி அணைத்துக் கொள்ளும் பாவம்தான் தெரி கிறது. கனியும் அந்தப் பேச்சின் உணர்ச்சிகள் என்னவென்று புரிவதில்லை; ஆனால் அதில் லாகிரி இருக்கிறது. படித்து முடித்த சுவாரசியமான பழைய நாவலை மீண்டும் எடுத்துப் படிக்கத் தோன்றுவதைப் போல், எண்ணி எண்ணிப் பழகிய அந்த நிகழ்ச்சிகளை மறுபடியும் நினைக்கத் தோன்றுகிறது....

மீனுவைச் சேர்ப்பதற்குக் கொடுத்த மனுவை எடுத்துப் பார்த்தாள். அவளுடைய சந்தேகத்தை உறுதிப்படுத்துவதுபோல் இருந் தது அது. தந்தையின் பெயர் — சத்யா ! இப்படி ஒரு பொருத்தமா? உலகத்தில் ஜானகியை மணந்துகொண்ட சத்யா அவன் ஒருவன்தானு? கால் அசைக்காமலே காற்றில் நலுங்கும் ஊஞ்சலைப்போல் மனம் இலேசாக ஆடிற்று. அப்படியும் இருக்குமா ? குழந்தை யைக் கேட்டிருக்கலாம், ''உன் அம்மாவின் பெயர் என்ன?'' என்று. கேட்க மனம் துணியவில்லை. அவள் எதிர்பார்த்துப் பயப் படும் பதிலையே மீனு சொல்லிவிட்டால்? அவளால் தாங்கிக் கொள்ள முடியாது.

பள்ளிக்கூடத்தில் 'பெற்றோர்கள் தினம்' கொண்டாடினார்கள். அன்றும் தனியாக வந்த குழந்தைகள் வெகு சிலபேர்கள். அவர் களில் மீனுவும் ஒரு குழந்தை. கண்கள் சற்று இலேசாகக் கலங்ினதுபோலக்கூடத் தோன் றின. விளையாட்டாகக் கேட்பது போலக் கேட்டாள். ''என்ன மீனு? 'உம்' என்று இருக்கிறயே ? உன் அப்பா வரவில்லை என்று கோபமா ?'' காற்றில் அலையும் பூனைப்

போல் அவள் முகம் பக்கத்துக்குப் பக்கம் வேகமாக ஆடிற்று.

''இல்லே. இல்லே. எனக்குத் தெரியும். எங்க அப்பா வரமாட்டார் இங்கெல்லாம்!''

ஏனோ ? கலோ மறுபடியும் கேட்கவில்லே. அந்தச் சொல் நெஞ்சு வரையில் நிரம்பி அப்படியே அடங்கிவிட்டது. மனம் இம்சை அடைந்து. அந்த வேதனேயில் சிறிது நெளிந்து வேறு மாறுதலேத் தேடிக் கொண்ட பிறகு தான் நேரம் போவதே தெரிந்தது.

மீனுவிடம் தனியான ஆசை அவளுக்கு. படிக்கும் குழந்தைகளிடம் வேற்றுமை காட்டுவது சரியில்லே. அதனால் வேறு யாரும் இல்லாத நேரமாகப் பார்த்து அவளே மடியின் மீது இருத்திக் கொள்வாள். கையை இழுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டு விரல்களேப் பிரித்து அழகு பார்ப்பாள். மெத்து மெத்தென்று பஞ்சு போன்ற விரல்கள் ஒவ்வொன்றையும் தனியாகத் தொட்டு, வெண்டைக்காயைப் பிஞ்சு பார்ப்பதுபோல் இலேசாக அழுத்திப் பிறகு கையை எடுத்துத் தன் கன்னத்தில் பதித்துக் கொள்வாள்.

இனிமேல் முடியாதா அது ? மீனுவை இந்த ஆண்டு ஏனே காணேம் ?

வகுப்பில் உட்கார்ந்திருந்தவளிடம் பள்ளிக்கூடத்துக் காவல்காரன் வந்து சொன்னுன்: ''அம்மா ! உங்களுக்கு 'போன்' வந்திருக்கிறது.''

யாரிடமிருந்து? அந்த நேரத்தில் அவளோடு பேசுவது யார் ? எத்தனேயோ சந்தர்ப்பங்களே, தொடர்பு சேர்க்கக்கூடிய முகங்களே, மனம் இணேத்துக் கோத்துக் கலேத்துக் கொண்டே இருந்தது: உள்ளே போய், 'போனே'க் கையில் எடுக்கும் வரையில்.

''டீச்சர் கலோசனுவிடம் பேசுகிறேனு ?''

அந்தக் குரலேக் கேட்டதுமே, நெஞ்சில் 'திடுக்'கென்று ஒரு தீபம் ஏற்றிக் கொண்டது போல இருந்தது. வெறும் மனப் பிரமையா ? அல்லது பேசுவது சத்யாவேதானு?

''ஆமாம். நான்தான் பேசுகிறேன்.''

மனத்தில் அவளே அறியாது ஓர் உவகை நிரம்புகிறது. உள்ளே யாரோ கோலமிடுகிறார்கள். யாரோ பந்தாடுவதுபோல் அவள் நெஞ்சு துள்ளுகிறது.

''என்னேப் புரிகிறதா? நான்தான் சத்யா பேசுகிறேன். மீனுவின் அப்பா.'' 'போனே'ப் பிடிக்க முடியாமல் கை நடுங்குகிறது. அவளால் பேச முடியவில்லே. உதடுகள் நடுங்குகின்றன. ஓரங்களில் உறுத்திக் கொண்டு விழிகள் நிறைகின்றன.

''தெரிகிறது — ''

''மீனுவுக்கு ஒரு வாரமாக ஜுரம். இன்று இரத்தத்தைச் சோதனேக்கு அனுப்பி இருக்கிறேன். பெரியதாக எதுவும் இல்லாமல்





உபன்யாசகர்: பொடிதான் உங்கள் முதல் விரோதின்னு அதைத் தூர எறியச் சொன்னேனே !

மற்றவர்: விரோதிகளிடமும் அன்பாக இரு என்றும் சொன்னீங்களே!

இருக்க வேண்டும். பள்ளிக்கூடம் திறந்த பிறகு அவன் வரவே முடியவில்லை என்று அவனுக்கு ரொம்பக் குறை. உங்களிடம் நான் 'போன்' செய்து சொல்ல வேண்டும் என்று காலையிலிருந்து அவன் சொல்லிக் கொண்டேயிருக்கிறான்...''

முக வேற்றுமை தெரியும் குழந்தையைப் போல், மனம் அஞ்சிப் பின்வாங்கிற்று. எவ்வளவோ நாட்களாக இப்படி ஒரு சந்திப்பை அவன் எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தான். ஆனாலும் இப்போது இது நேர்ந்துள்ள விதம் ?

''ஹலோ, ஹலோ!'' அவனிடமிருந்து பதிலே இல்லாமல் நின்றுவிட்டதால், மறுமுனையிலிருந்து சந்தேகத்துடன் ஒலித்தது சத்யாவின் குரல்.

'' கேட்டுக் கொண்டிருக்கிறேன்.''

''குழந்தைக்கு ஓர் ஆசை, உங்களை நேரில் பார்க்க வேண்டும் என்று. முடியுமானால் நீங்கள் இன்றைக்கோ நாளைக்கோ இங்கே வந்து போக முடியுமா? நான் கேட்பது தவறானால் மன்னித்துக் கொள்ளுங்கள்...''

சத்யா! நீங்களா இப்படிப் பேசுவது ? நீங்கள் கூப்பிட்டு நான் வர முடியாது என்று சொல்வேனா ? அப்படிச் சொல்லும் மன வலிமை உண்டா எனக்கு? எத்தனை நாட்களாக இப்படி ஓர் அழைப்புக்காக என் நெஞ்சு ஏங்கிக் கொண்டிருக்கிறது? ஆனாலும் ததும்பும் இந்த உணர்ச்சிகளை ஏன் சொல்லில் கொட்ட முடியவில்லை ? பேசக்கூட ஏன் ஒரு தயக்கம் ? ஏன் இப்படித் தப்பி ஓடி ஒளிவதைப் போல் ஒரு கோழைத்தனம் ?

''வருகிறேனே ?''

''தாங்க்யூ கலோசனா ! எங்கே நீ மறுத்து விடுவாயோ என்று பயந்தேன். சாயங்காலம் காரைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புகிறேன். நம்பர் குறித்துக்கொள். எம்.எஸ்.ஆர்....''

சட்டென்று அவன் அப்படி ஒருமையில் நழுவியதும்கூட இதமாகத்தான் தோன்றியது. விரல்கள் எண்ணை எழுதிக் கொண்டிருந்தன. மனத்தில் இப்போதுகூட, நுரை பணிந்த அலைகள் கரையில் மோதிப் பின் வாங்குவதைப்போல், இவ்வளவு தூரம் பேசிய பிறகும், அப்படியே ஒதுங்கி விடலாமா என்று ஒரு கூச்சம் ஏற்பட்டது. ஆனால் அவன் ''சாயங்காலம் பார்க்கிறேன்'' என்று சொல்லி விட்டுக் கீழே வைத்து விட்டான்.

ஜானகியின் நிழலாக அந்த வீட்டில் வளர்ந்தவள் கலோசனா. அப்படி ஒரு நிலையில் இருப்பதற்காக வளர்க்கப்பட்டவள் என்பது தான் உண்மை. குழந்தைப் பருவத்திலிருந்தே அவளுக்குக் கிடைத்தது அப்படி ஒரு பின்னணிதான்.

எது வேண்டுமானாலும் கையில் எடுத்துக் கொடுத்தே வளர்த்து வழக்கமாகி விட்டது. சிறு வயதில் தாயை இழந்த பிறகு அப்பாவின் ஆசைக் கனத்தைத் தாங்கியே வளர்ந்த பெண். செல்வத்தின் செழிப்பும் பார்த்துப் பார்த்துச் சேர்த்த சௌக்கியங்களும் தெரியும் மேனி மினுமினுப்பு. அந்த இளமையையும் வாலிபத்தையும் அலட்சியமாக ஏந்தி நடக்கும் சுபாவம். ஆனாலும் மனத்தளவில் குழந்தைதான் ஜானகி.

அவள் முக மலர்ச்சி மாறாமல் கவனித்துக் கொள்வாள் கலோசனா. தூரத்து உறவு. தோழியாக இருந்து பழகிய நெருக்கம். அவளை எஜமானியாக நினைத்ததில்லை. ஆனாலும் தங்கை என்ற அளவுக்கு இழைய மனம் துணிந்ததில்லை. ''என் புடவையாக இருந்தால் என்ன? நீதான் உடுத்திக் கொள்ளேன்'' என்பாள் ஜானு. உருவமும் தோற்றமும் ஒரே போல. பின்னாலிருந்து பார்த்தால் ஜானகியே அங்கே நிற்பதுபோல் இருக்கும். பள்ளிக்கூடப் படிப்பு வரையில் கூடவே படித்தாள். கல்லூரியில்தான் தொடரவில்லை. ஆனாலும் வீட்டில் ஜானகியின் புத்தகங்களை ஆர்வத்துடன் புரட்டுவாள். பிடித்தவற்றை மனம் அழுந்திப் படிப்பதும்கூட உண்டு. கல்லூரியில் விஞ்ஞானப் பாடங்களுக்காக ஜானகிக்குப் படங்கள் வரைந்து கொடுப்பாள். ''உன் மாதிரி வரைவதற்கு எனக்குக் கையழகு இல்லை, கலோ!'' என்று கண்ணைச் சிமிட்டுவாள் ஜானு.

அவர்களுக்குள் பகிர்ந்து கொள்ளாத இரகசியங்கள் இல்லை. பெண்மையின் நுட்பமான மன இயல்புகளிலும்கூட அவர்களிடையே ஒளிவு மறைவு இல்லை. கொஞ்ச நாட்களாகவே ஜானகியின் பாவனைகளிலும் நடையுடைகளிலும் ஒரு புது மலர்ச்சி தெரிய ஆரம்பித்திருந்தது கலோவின் கண்களுக்கு. ஆனாலும் அவள் அதைப் பற்றிக் கேட்கவில்லை.

ஒரு நாள் மேஜை விளக்கின் வட்ட ஒளி விழும் புத்தகத்தின் நடுவே ஒரு புகைப் படத்தை வைத்துக் கவனித்துக் கொண்டிருந்தாள் ஜானகி. இரவு படுக்கப் போகுமுன் அவளுக்காகப் பால் தம்ளரைக் கொணர்ந்தவள், ஒருகணம் பின்புறமாக நின்று கவனித்தாள். அழகும் இளமையும் ததும்பும் முகம். கூரிய கண்களில் அறிவும் சிந்தனையும் அலைந்தன. தெளிந்த உள்ளம் தெரியும் புன்னகை. அந்த வாலிபனின் அழகைக் கண்களால் ஆசை

FOUR AND A HALF MILLION PEOPLE READ THE WEEKLY...

...NATURALLY!



It is Asia's finest illustrated magazine.

It gives you:

Current Topics. The Weekly helps you to keep pace with tomorrow: lively comment on topical subjects—political, social, economic, cultural.

• Communities. The Weekly helps you know your neighbours—their origins, customs, rituals, their problems and their achievements.

• General Features. The latest in books, films, music, theatre, painting, short-stories, humour and satire, a fun-filled page for children; jokes—new and stale; your Fortune from the Stars, and loads of other interesting material.

All written by experts, yet lively and readable.

All illustrated by the finest photographers, artists and cartoonists of the country.



The Illustrated Weekly of India

யாகப் பருகிக் கொண்டிருந்தாள் ஜானு. பருகப் பருகத் தாபம் அதிகரித்தது போன்ற முக பாவனை.

''யார் அது ஜானு ?''

திடுக்கிட்டு முகம் திரும்பினாள் ஜானகி. அந்தப் படத்தை மார்புடன் அணைத்துக் கொண்டாள். விழிகளில் இலேசான பயம் எட்டிப் பார்த்தது.

''நான் தெரிந்து கொள்ளக்கூடாது என்றால் வேண்டாம்.''

திரும்பி, அவள் கலாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள், குழந்தையைப் போல. கொஞ்சம் கொஞ்சமாக அந்த இதயம் திறந்தது: இதழ்கள் பிரியும் மலரைப் போல்.

சத்தியமூர்த்தி என்ற அந்த லெக்சரர் ஒரு வருடமாகவே அந்தக் கல்லூரியில் இருப்பவர்தாம். அவளிடம் பேசிப் பழகிக் கொண்டிருப்பவர்தாம். கொஞ்ச நாட்களாக அந்தப் பழக்கத்தில் ஒரு புதுச் சாயல் தென்பட்டது. மன அண்மை தெரியும் பார்வை. பேச்சில் நெகிழும் குரல்.

ஜானகி மாறவில்லை. இன்னும் குழந்தையாகத்தான் இருந்தாள். அவர்களுக்குள்ளே நடந்தவை, பேசிக் கொண்டவை, எல்லாவற்றையும் கொட்டிற்று நிறைந்து பொங்கிய உள்ளம். அவளைத் தன் வயதுப் பெண்ணாக நினைக்காமல், வழி நடத்தும் தாயைப் போல் கருதும் பாவனை.

அதன் பிறகு அதுவே அவர்களுக்குள் ஒரு பொழுதுபோக்காக, விளையாட்டாக ஆகிவிட்டது. கலாவுடன் சேர்ந்து கொண்டு, சத்யாவை மறு நாள் எப்படி ஏமாற்றுவது, என்ன பேச்சுக்கு என்ன பதில் சொல்வது என்றெல்லாம்கூடத் திட்டம் போடுவாள். சில சமயம் சுருக்கமான அழகான கடிதங்களையும்கூட அவளிடம் கேட்டு எழுதுவதுண்டு.

கலாவுக்கு இந்த அனுபவம் ஒரு புதுமையாக இருந்தது. இந்த மானசீகப் பயிற்சி விளையாட்டாக மட்டும் இல்லை. நேரில் சந்தித்திராவிட்டாலும், பார்த்திராவிட்டாலும், அவள் நெஞ்சுக்குள்ளும் அந்த நிழல் விழுவதைப் போல் உணர்ந்தாள். சத்யாவைப் பற்றி ஜானகி எது பேசினாலும் அதைக் கேட்கும் ஆர்வம் அவளுள் தனியாக எழுந்தது. அந்த உணர்ச்சிக்குச் சிறிது சிறிதாக ஒரு வடிவமும் கிடைத்து வளர்ந்து கொண்டு வந்தது. அதுவே ஒரு பயமாகவும் இருந்தது.

அன்று தனி மகிழ்ச்சியுடன் நடந்துகொண்டிருந்தாள் ஜானகி. பேச்சிலும் சிரிப்பிலும் ஒரு புதுக் கலகலப்பு. பிற்பகலில் அவளைத் தாண்டிவிட்டுப் புது தினுசாகச் சிற்றுண்டியும் தயார் செய்ய முனைந்து கொண்டிருந்தாள்.

மூன்று மணிக்குத்தான் தெரிந்தது; அவளுக்குத் திடீரென்று ஒரு வியப்பாக இருக்க வேண்டும் என்று ஜானகி திட்டம் போட்டிருந்தது. வாசலில் மணி அடித்ததும் கலாசனுவையே போய்த் திறக்கச் சொன்னாள். கதவைத் திறந்ததும் அவளுக்காகக் காத்திருந்தது அந்தச் சிறு அதிர்ச்சி —

சுடர் ஸ்தம்பித்ததுபோல் அப்படியே நின்றுவிட்டாள் கலா. 'ஹலோ' என்று ஜானுவை எதிர்பார்த்துத் தலையை அசைத்துப் புன்னகை செய்த சத்யாவுக்கும் வியப்புத்தான். அவர்களிடையே ஒரு மணம், புது மலரின் கமழ்ச்சியாக. அந்த இளமையின் சூழல், ஒரு கணம் இருவரையுமே கிறுகிறுக்க வைத்தது.

அவனுடன் பேசுவதற்குத் தயங்கி ஒதுங்கியே இருந்தாள் கலா. வலுக்கட்டாயமாக இருவரையும் சேர்த்துப் பேச வைத்தவள் ஜானகிதான். அந்தப் பழக்கத்தில் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு கவர்ச்சி அவளை அறியாது கலாவை ஈடுபடுத்திற்று. ஜானகியின் பேச்சில் ஓர் எளிமைதான் தெரியும்; அவள் பேச்சில் குறும்பு மிளிரும். ஜானுவின் செய்கைகளில் குழந்தைத்தனம் தான் இருக்கும்; அவள் செய்கைகளில் துடுக்கும் துடிப்பும் இருக்கும். அவளுக்கே புரியாமல், அந்த ஒப்பிடுதலில் தன்னிடம் ஒரு கூடுதலான கவர்ச்சியைத் தெரிய வைத்துக் கொள்வதில், அவளுக்கு ஒரு முனைப்பு இருந்தது.

சத்யா அடிக்கடி அங்கு வந்து போக ஆரம்பித்தான். ஜானுவின் நோட்டுப் புத்தகங்களில் தெரிந்த படங்களின் நயம், கடிதங்களில் ஒளிர்ந்த கற்பனை அழகு, பேச்சின் பின்னணியாகத் தெரிந்த சாதுரியம், எல்லாம் யாருடையவை என்பது அவனுக்குத் தெரிய ஆரம்பித்திருந்தது. அந்த நேரங்களில் மின்னிட்டு உடனே மறையும் மின்னலின் பளிச்சிடுதலைப் போல் அவன் குரலில் ஒரு தனி ஆவல் தொனிக்கும்.

அன்று ஜானுவின் புடவை ஒன்றை அணிந்து கொண்டிருந்தாள் கலா. வாசலில் நின்று பூச்செடிகளில் மலரப் போகும் மொட்டுக்களைத் தேடிக் கொண்டிருந்தாள். விரல்கள் அளைவது சட்டென்று நின்றது. கண்களை இரு கைகள் பொத்தியதும், கூடவே அந்தச் சிரிப்பொலி கேட்டது.

சத்யா !

பரபரப்புடன் கைகளை விலக்கிக் கொண்டு திரும்பினாள் கலாசனு. அவளை ஜானகி என்றே நினைத்து ஏமாந்திருக்கிறான் அவன். எது உருவம்? எது நிழல்? அவள் தலை குனிந்தது.

உண்மை புரிந்தபின்னும் சத்யா எட்டி ஒதுங்கவில்லை. ஜலத்துள் மூழ்கிய வயல்போல் அவர்களிடையே ஒரு மௌனம். பேச்சை விட அதன் ஒலி இன்னும் கனமாக இருந்தது. அவனுடைய மனத்தை அவளுக்குப் புரிய வைப்பது போன்ற ஆழமான பார்வை.

சட்டென்று உயரே பார்த்தாள். மேலே இருந்து ஜானகி எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தது தெரிந்தது. சரேலென்று பாய்ந்து உள்ளே ஓடிவிட்டாள்.

அன்று சத்யா அவர்களிடையே அதிக நேரம் இருக்கவில்லை. இருந்த சிறிது நேரத்திலும் மூவருமே அதிகம் பேசவில்லை. அவன் புறப்பட்டுப் போன பிறகும் ஜானகி வழக்கம்போல் முன்னால் வந்து பேசி அவளை வம்புக்கு இழுக்கவில்லை. அவளாகக் கேட்ட போதும்கூட ஓர் ஒதுக்கம்தான் தென்பட்டது.

நடுவில் ஒரு முறை அவளை நிமிர்ந்து பார்த்தாள். கண்ணில் சிரிக்கும் அந்தக் குறும்பு இல்லை. குரலில் அது வரையில் கலா கேட்டிராத ஒரு குழைவு. கெஞ்சுவது போல் இருந்தது அது.

அதற்குப் பின்பே ஞானு விடம் ஒரு மாறுதல் தெரிந்தது. அவனிடம் படம் வரைந்து கொடுக்கச் சொல்வதில்லை. சத்யாவைப் பற்றி அவனிடம் பேசுவதில்லை. அவனுடைய கடிதங்களை அவனிடம் காட்டுவதில்லை. சத்யா அங்கே வர நேர்ந்தாலும் ஏதேனும் ஒரு சாக்கில் சீக்கிரம் திருப்பி அனுப்பி விடுவதிலேயே தீவிரமாக இருந்தாள்.

அவனுடைய மனம் கலோவுக்குப் புரியாமல் இல்லை. தனக்கென்று ஒரு பொருளுக்காக அவன் இதுவரை தனியாக ஆசைப்பட்டதில்லை. விலை மீறிய நகையாய் ஞானுவை மூடி மறைத்து வைக்கும் அந்த ஆசையில் அவளுக்கு இடமில்லை. நிழலாக, பின்னணியாக இனி இருப்பதும்கூடத் தவறுதான். ஏனென்றால் அவன் பின்னணியாக இல்லை. நிழல், உருவமாக மாறிக் கொண்டிருந்தது. அதுதான் உண்மை. அவள் ஒதுங்கிக் கொள்வதுதான் நியாயம்.

யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் அந்த வீட்டிலிருந்து வந்து விட்டது — தெரிந்த நண்பர் ஒருவர் மூலம் பெங்களூருக்கு வந்து அந்த வேலையில் சேர்ந்தது — ஞானவியும் சத்யாவும் மணந்துகொண்டதைத் தினசரியின் விளம்பரத்தில் பார்த்தது — எல்லாம் இப்போது கதையில் படித்த நிகழ்ச்சிகளைப் போலத்தான் கலோவின் நினைவுக்கு வருகின்றன.

அவர்கள் தில்லிக்குப் போய்விட்டது தெரிந்த பிறகுதான் சென்னைக்குத் திரும்பினாள் கலோ. பாசி வழுக்காமல் ஜாக்கிரதையாகக் காலை ஊன்றுவதைப் போல், மனத்தில் எண்ணங்களை அமைத்துக் கொள்ளப் பழகிக் கொண்டாள். மறந்து போவதில்தான் மனத்துக்கு நிம்மதி என்பதை அவள் கற்றுக் கொண்டாள்.

ஆனாலும் அந்த இதயச் சுடர் காற்றில் நடுங்கி அணைந்து போக மனம் சம்மதிக்கவில்லை. இதயத்தில் அந்த இடத்தை இன்னொருவருக்கு அளிக்க நெஞ்சம் ஒப்புக் கொள்ளத்தான்

இல்லை. நடு நடுவே மனத்தில் அந்த ஏக்கம் வந்து போகும். நினைக்கும் போது சற்று வெறிச்சோடிப் போனது போன்ற உணர்ச்சி. ஆனால் ஊன்றி நினைத்துப் பார்த்தால்தான்.

அப்படியே பழகி வாழ்ந்தாகி விட்டது; குழந்தை மீனுவைப் பார்க்கும் வரை. கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிய வைத்துக் கொண்டாகி விட்டது. இப்போது ஒரு கலக்கம்; காலையில் 'போனி'ல் அந்தக் குரலைக் கேட்டதற்குப் பிறகு.

வகுப்பு முடிந்து மணி அடித்தது. குழந்தைகள் கலைந்து கொண்டிருந்தார்கள். அவளுடைய நினைவுகளும் கலைந்து கொண்டிருந்தன.....

மாலை நேரம்.

வெளியில் கார் நின்று கொண்டிருந்தது. கன்னென்ற வெய்யிலை அடுத்துப் பிசுபிசுவென்று தூற்றல் போட வானம் காத்திருந்தது. அள்ளிக் கொட்டினாற் போலக் கலைந்து போன பள்ளிக்கூடக் குழந்தைகள் கூட்டம்.

ஞானவியிடம் என்ன பேசுவது? இந்தப் புதிய சூழ்நிலையில் அவனை எவ்விதமாகப் பார்ப்பாள் ஞானு? அவன் ஏன் 'போனி'ல் பேசவில்லை? கண்ணை மூடிக் கொண்டாள். வண்டாய்க் கூவிக் கற்பூரமாய்த் தூங்கும் பம்பரத்தைப் போல், மனம் அசைவின்றிக் கிடக்கிறது. அதில் அந்த ஒரு முகம்தான் தெரிந்தது. அது சத்யாவின் முகம்.

கார் நின்றது. உள்ளிருந்து சத்தம் எதுவும் இல்லை. தயங்கியபடி காலடி வைத்து உள்ளே சென்றாள். ஞானுவின் குரல் கேட்கவில்லை. முன் அறை திரை ஒதுங்கி அலைந்தது. அங்கிருந்து முதுகுப்புறம் தெரியும்படி உட்கார்ந்திருந்தான் சத்யா. குனிந்த தலை. இறக்கை ஒடிந்த பறவையாய் ஒரு பாவனை. இவ்வளவு அருகில் இருந்தும் அவன் உணர்வு எட்டாத தூரம். அவள் உள்ளே நுழையும் சத்தம் கேட்டதும் திரும்பினான். அந்த முகத்தைக் கண்டதும் அவளுக்குக் கையில் தழல்

ஏந்தியதைப் போல் ஒரு தவிப்பு. அவன் முகம் மாறியதைக் கண்டு தானும் சட்டென்று சமாளித்துக்கொண்டாள். ஆனாலும்...

கன்னத்தின் இடதுபுறம் செதுக்கியது போன்ற நீண்ட வடு. இடது கண்விழி இருக்க வேண்டிய இடத்தில் நீல நிறக் கண்ணாடிக் கண். கழுத்திலும் கையிலும் விறு விறுத் தடித்து எழும்பிய தழும்புகள். ஜீவ தாதுவே அவனுள் கருகிவிட்டாற்போல் இருந்தது. அவள் சிலையாகச் சமைந்து அவனையே வெறித்த பார்வை நிலை மாறாது நின்றாள்.

"சுலோசனா !"

அவன் குரல் உடைந்தது. பேசாவிடினும் அந்தப் பார்வை அவளை அருகில் அழைத்தது. அவளை அறியாது அவனை நெருங்கி நின்றாள். குழந்தையைத் தேற்றுவதைப் போலத் தலைமயிரைக் கோதி முகத்தை அணைத்துக் கொள்ள வேணும் போல் விரல்கள் துடித்தன. தன்னை அடக்கிக் கொண்டாள்.

அவன் பேச்சு புலம்பலாக இருந்தது. "நீ ஏன் எங்களைவிட்டுப் போனாய் என்று ஜானகி என்னிடம் சொல்லவில்லை. டில்லியில் நல்ல வேலை கிடைத்தது. புறப்பட்டுப் போனேன். ஆனால் என் பார்வையில் என்னவோ நீதான் தெரிந்து கொண்டிருந்தாய். ஜானகி ஒரு நிழலாகத்தான் இருந்தாள். உன்னிடம் தான் அதன் உருவத்தைத் தேடிக் கொண்டிருந்தேன்."

காத்துக் கொண்டிருந்தவனைப் போல் மனத்தைத் திறந்து கொட்டினான் சத்யா. தன் எண்ணத்திலேயே ஓர் ஏக்கம் கட்டு விட்டதை அவள் உணர்ந்தாள். ஜானகி பயந்தது உண்மைதான். அவள் முன்னிலையில் ஜானுவுக்கு அவன் இதயத்தில் இடமில்லாமல்தான் போயிருக்கும். இப்போது அவைகளையெல்லாம் சொல்லி என்ன பயன்? அந்த நினைவுகளுக்கு வியவஸ்தை ஏது?.... வாழ்க்கையில் இப்போது ஒன்றும் மிச்சம் இல்லை.

"பொறுமையாக இருங்கள் சத்யா. ஜானுவின் காதில் விழுந்தால் வருத்தப்படுவாள்........"

"உனக்குத் தெரியாதா சுலோ?" சட்டென்று அதிர்ந்தவளைக் கேட்டான் சத்யா. அவன் சொல்லப் போவதை அவளால் ஊகிக்க முடிந்ததைப் போல் உணர்வு ஒன்று அவளை அலைத்தது. அவன் இதழ்கள் துடித்தன. கம்மித் தணிந்த குரலில் கூறினான்:

"ஜானகி போய்விட்டாள். மீனு பிறந்த பிறகு அதிக நாட்கள் அவள் உயிரோடு இல்லை. அவளை காரை ஓட்டிக் கொண்டு போன சமயம், ஒரு நாள் லாரி ஒன்றில் மோதி..... நான் காயங்களுடன் தப்பினேன். அவள் அதற்குத் தப்பவில்லை !"

இரண்டு விநாடிகள் அவளைப் பார்த்த அவன் கண்கள் தொடர்ந்து பார்க்க முடியாமல் திரும்பிக் கொண்டன. சரசரவென்று நீர் நிறைந்த விழிகள். கடந்த காலத்தின் சாம்பலை, கதையாகப் போய்விட்ட நினைவுகளை, தேடுவதைப் போல் விரல்கள் மேஜையின் கண்ணாடித் தகட்டைத் துழாவி அலைந்தன.



மனிதன் தான் ஆயுளோடு நீண்ட நாட்கள் இருக்க ஆசைப் பட்டுக் கடவுளை வேண்டிக் கொள்கிறான். ஆனால் அதே சமயம் வயோதிகத்தைக் கண்டு பயப்படுகிறான்! ஆக மனிதனைப் போன்ற முட்டாள் உண்டா?

— ஒரு சீன முதுமொழி

"குழந்தைக்குத் தாயின் முகம் தெரியாது. அவள் ஆசையோடு சொல்லிக் கேட்டது உன் பெயரைத்தான் சுலோசனா. எனக்கு ஒரு சந்தேகம். ஆனால் நேரில் வந்து பார்க்க என் மனம் துணியவில்லை.... இந்த முகம்..... பார்வை போன ஒரு கண்.... ஜானகியும் நானும் உன்னை ஒதுக்கிவிட்டுச் சொல்லாமற் போனவிதம்....." அவன் குரல் கலங்கிற்று. கைகளால் அவன் தன் முகத்தை மறைத்துக் கொண்டான்.

அவள் அருகே வந்து நின்றாள்; அவன் கையைப் பிடித்தாள்.

"நீங்கள் இப்படியே அழுங்கிப் போய்க் கொண்டிருக்கக் கூடாது. நான்.... நானும் தான் மீனுவின் தந்தை நீங்கள்தான் என்று ஊகிக்க முடிந்தும் வரவில்லை.... உங்களுக்கு மேலே வடு..... எனக்கு உள்ளே மறையாமல் விழுந்துவிட்ட வடு....." அவள் கை அவன் தலைமயிரைக் கோதிக் கொண்டிருந்தது.

அவள் பார்வையில் அந்த நாளைய முகம் தெரிந்தது. கண் மங்கியதுபோலத் தெரிந்த இரட்டையில், ஒன்றினுள் ஒன்று செருகினாற் போல் இரண்டு முகங்களும் தெரிந்தன. அன்று இருந்த அழகும் இளமையும் இன்று இல்லை. ஆனால் அன்று அவளுக்கு அந்த உரிமை இல்லை. இன்று?

"வாருங்கள் எழுந்து உள்ளே போவோம். குழந்தை தவித்துக் கொண்டிருப்பாள். நாம் போனால் அவளுக்குத் துணையாக இருக்கும்."

அவன் எழுந்து நின்றான். காணும் புது ஒளி பெற்றவனைப் போல் அவன் முகத்தில் ஒரு தெம்பு படர்ந்தது.

"துணை என்றைக்குமா சுலோ ?"

ஒரு கணம் யோசித்துவிட்டு அவள் தன் கையை அவன்புறமாக நீட்டினாள்.

"ஆமாம். என்றைக்கும்தான்."

அந்த நகர்ச் சிறையின் சீனியர் ஜெயிலர் வனமாலி சர்க்காரின் இடத்துக்கு நான் மாற்றலாகி வந்திருந்தேன். அவரிடமிருந்து வேலைப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும் படலம் மூன்று நாட்கள் தொடர்ந்தது. பொறுப்புக்கள் என்றால் ஒன்றா, இரண்டா? ஜெயில் ஸ்டோரில் உள்ள சாமான்களின் கணக்கு; ஜெயில் பண்ணையில் இருந்த மாடு, கோழிகளின் கணக்கு; எண்ணெய் மில்லின் சரக்கு ஸ்டாக் கணக்கு, இத்தியாதி, இத்தியாதி. இம்மாதிரி பொறுப்புக்களின் லிஸ்ட்டே ஒன்றரை கஜ நீளமென்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்!

பொறுப்பேற்றுக் கொள்ளும் படலம் ஒரு வழியாக முடிந்தது. 'சார்ஜ் ரிப்போர்ட்டி'ல் கையெழுத்து வாங்கிக் கொண்டு விடை பெறும் சமயத்தில் வனமாலி பாபு திடீரென்று ஏதோ நினைவுக்கு வந்தவர் போல் துள்ளிக் குதித்தார். ''அடேடே! இவ்வளவு விஷயங்களை ஒங்ககிட்டே ஒப்படைச்சவன் ஒரு முக்கியமான விஷயத்தை மறந்துட்டேனே!... ஏ ரதிகாந்தா, இங்கே வா!'' என்று உரக்கக் கூப்பிட்டார்.

ஒரு கைதி ஒரு குழந்தை...

ஜராஸந்த

பக்கத்து அறையிலிருந்து ஒரு கறுப்பு உருவம் வெளியே வந்து எங்கள் முன் நின்றது. 'கறுப்பு உருவம்' என்பதை விட 'நிழலுருவம்' என்பதே மிகப் பொருத்தமாக இருக்கும். ஒரு விசித்திரப் பிறவிதான். சந்தேகமில்லை. பிரும்மா அவனைச் சிருஷ்டிக்கும் போது எலும்புக்கும் தோலுக்குமிடையே, தசை என்ற ஒரு பொருளை வைக்க வேண்டுமென்பதை மறந்து விட்டார் போலும்! ஆனால் அந்தக் குறையைப் பூர்த்தி செய்ய அவனுடைய முதுகில் அவர் ஒரு பெரிய கூனலை வைத்து விட்டார்!

கூனல் உடம்பை இன்னும் கூனிக்கொண்டு எங்களுக்குச் சலாம் வைத்தான் ரதிகாந்தன்.

வனமாலி பாபு சொன்னார்: ''இவன் உங்களுடைய சொந்த வேலைக்காரன். உங்கள் அறையைப் பெருக்குவான், மேஜையைத் துடைப்பான், பைல்களை ஒழுங்காக அடுக்கி வைப்பான், நீங்கள் கேட்கும் பொருளை எடுத்துக் கொடுப்பான். நன்றாக வேலை செய்வான்; ஆனால் சில சமயம் தேவைக்கு அதிகமாகச் செய்து விடுவான், அதுதான் இவனிடமுள்ள ஒரு குறை.''

இப் புகழ்ச்சியைக் கேட்டு ரதிகாந்தன் முகத்தில் வெட்கம் கலந்த மகிழ்ச்சி.

''உன் பெயர் ரொம்ப நன்றாயிருக்கே!'' என்றேன்.

சந்தோஷத்தில் அவனுடைய வாய் காது வரையில் நீண்டது. — ''இந்தப் பேர் என் குருநாதர் வைச்சது. அதுக்கு முன்னால் என் பேர் பஜஹரி.''

அவனுடைய குருநாதரின் ஹாஸ்ய உணர்ச்சியை மனத்தில் பாராட்டிக் கொண்டு அவனைக் கேட்டேன்: ''அது சரி, நீ ஏன் ஜெயிலுக்கு வந்தே?''

''இ.பி.கோ. 379 தான்! வேறென்ன?'' வனமாலி பாபு பதில் சொன்னார்.

ரதிகாந்தன் தலையைக் குனிந்து கொண்டான். நான் மறுபடியும் கேட்டேன்: ''என்ன திருடினாய்?''

பதில் வந்தது: ''மாடு...''

சிறைவாசிகளிடையேயும் தனி ஜாதிப் பிரிவினை இருக்கிறது. அவனவன் செய்த குற்றத்துக்கேற்ப அவனுடைய ஜாதியும் நிர்ணயிக்கப்படுகிறது. கொலை, பணம் கையாடல், பெண் கடத்தல் இவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் உயர்ந்த ஜாதி. திருடர்கள் அதற்கு அடுத்த படி. எல்லோருக்கும் கடைசியில் மாடு திருடுபவர்கள். அவர்கள் ஜெயில் சமூகத்தின் ஹரிஜனங்கள் என்றுகூடச் சொல்ல முடியாது; அவர்கள் சமூகத்திலிருந்தே தள்ளி வைக்கப்பட்டவர்கள். அவர்கள் ஜெயில் சமூகத்துக்கே இழுக்கு. ஆகையால் மாட்டுத் திருடர்கள் மற்றத் திருடர்களிடம் தங்களைப் பற்றிச் சொல்லிக் கொள்ளக்கூடக் கூசுவார்கள்.

கைதிகளில் மற்றக் குற்றம் செய்தவர்கள் தங்கள் குற்றத்தை வெளிப்படையாக, ஏன் பெருமையாகக் கூடச் சொல்லிக் கொள்வதுண்டு. அவர்கள் மாட்டுத் திருடர்களைக் கேவலமாகக் கருதுவார்கள். ஆகையால் மாட்டுத் திருடர்களிடம் இயற்கையாகவே ஒரு தாழ்வு மனப்பான்மை உண்டு.

ரதிகாந்தன் மட்டும் இதற்கு விதிவிலக்கு. சிறைக்கு வந்த சில நாட்களிலேயே அவன் தன் பராக்கிரமச் செயலை மற்ற நண்பர்களிடம் தயங்காமல் கூறி விட்டான். அவன் சொல்லுவான்: ''நீ என்ன வேணுமின்னாலும் சொல்லு. காசு, பணம் திருடறதைவிட நாலு கால் பிராணியைத் திருடறது சுலபம். இதிலே பிடுங்கலே இல்லே. கன்னம் வைக்க வேண்டாம். பூட்டை உடைக்க வேண்டாம், ஒரு சம்சாரி வீட்டிலே நுழைஞ்சிட்டு அவன் தூக்கத்திலிருந்து எழுந்திருச்சிக்கிடுவானோ என்கிற பயம் இல்லே... ராவிலே மாட்டுக் கொட்டில்லே நுழைய வேண்டியது, கயித்தை அவுக்க வேண்டியது, மாட்டை இழுத்துக் கிட்டு நடக்க வேண்டியது. ஒரு ராத்திரி அப்படியே நடந்துட்டா அப்புறம் யாரு கண்டு பிடிக்க முடியும்?... நான் ஆப்பிட்டுக்கிட்டேனேன்னு சொல்றியா? அது தலைவிதி. எந்தத் திருடனும் ஒரு நாள் ஆப்பிட்டுக்கத் தான் ஆப்பிட்டுக்குவான். சாஸ்திரத்திலே சொல்லியிருக்குது — திருடனுக்குப் பத்து நாள் நல்ல காலம், சம்சாரிக்கு ஒரு நாள் நல்ல காலம்னு....''

இவ்வளவு வெளிப்படையான பேச்சுக்குப் பிறகு ரதிகாந்தனை யார் மதிப்பார்கள்? அவர்கள் அவனைத் தங்கள் கூட்டத்தில் சேர்த்துக் கொள்வதில்லை.....

ரதிகாந்தன் இருந்த 'செல்'லில்கூட இருந்த கைதி ஒரு நாள் வனமாலி பாபுவிடம் வந்தான். ''ஒரு விண்ணப்பம்'' என்றான்.

'' என்ன?''

''என்னே அந்த 'செல்'லிலேயிருந்து வேறே இடத்துக்கு மாத்திடுங்க !''

'' ஏன்?''

''அந்த இடம் ரொம்ப மோசங்க ; திருட்டுப் பயலுக கூட்டம்!'' என்று வெறுப்புடன் சொல்லிவிட்டு ரதிகாந்தனே ஜாடையாகப் பார்த்தான்.

''நீ என்ன திருடினாய்?'' என்று வனமாலி பாபு கேட்டார்.

பதில் வந்தது: ''என்னோட எசமான் சம்பளம் கொடுக்கலேன்னு அவர் வீட்டுக் கடிகாரத்தைத் தூக்கிக்கிட்டு வந்துட்டேன்.''

''ஓகோ, அது திருட்டு இல்லேயாக்கும்!'' வனமாலி பாபு ஏளனமாகக் கேட்டார்.

''திருட்டுத்தான். ஆனா மாடு திருட்டு இல்லியே !''

வனமாலி பாபு கடிகாரத் திருடனின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் சில நாட்களுக்குப் பிறகு ரதிகாந்தனே அவரிடம் ஒரு கோரிக்கையுடன் வந்தான். அவனே வேறு 'செல்'லுக்கு மாற்ற வேண்டுமாம்! மற்றக் கைதிகள் அவனைத் துன்புறுத்துகிறார்களாம்.

அவனுடைய நிலைமைக்கு இரங்கி வனமாலி பாபு அவனுக்கு ஆபீசில் வேலை கொடுத்து விட்டார். அவன் பகல் முழுதும் ஆபீசில் இருப்பான். படுக்கத்தான் 'செல்'லுக்குப் போவான்.

* * *

நான் புது வேலையை ஏற்றுக் கொண்டு நாலைந்து நாட்களாகியிருக்கும். ஒரு நாள் மாலை. நான் ஆபீசில் மேஜையின் முன்னே உட்கார்ந்து கொண்டு எழுதிக் கொண்டிருந்தேன். திடீரென்று 'சில்'லென்று காலில் ஏதோ படவே திடுக்கிட்டு எழுந்தேன். பாம்பு கிம்பு வந்துவிட்டதோ ?

மேஜையின் கீழிருந்து குரல் கேட்டது. ''நான்தான், எசமான், ரதிகாந்தன்.''





கொஞ்சும் சதங்கைகள்

விஸ்வப்ரியாவின் ஆதரவில் மயிலே ஃபைன் ஆர்ட்ஸ் கிளப் அரங்கத்தில் ஆடிய குமாரி பிஜு சிறுமிதான் என்றாலும் அந்த வயதுக்கு ஆடல்களும் அபிநயங்களும் சாதாரணமாக எதிர்பார்க்கக் கூடியதை விட அதிக தேர்ச்சி யடைந்திருந்தன. லய உணர்ச்சி உயர்ந்திருந்தது. அடவுகளில் தாளக்கட்டும், நிர்மான சுத்தமும் தெளிவாகக் காணப்பட்டன. அபிநயப் பகுதி கூட அதிசயிக்கத் தக்க அளவுக்கு ரம்யமாக இருந்தது. பிறக்கும்போதே சதங்கை கட்டிக் கொண்டு பிறந்தார்களோ என்ற வர்க்கத்தில் சேரா விட்டாலும், ஆசிரியப் பயிற்சியினால் பெறப்பட்ட முழுமையான கலை உணர்ச்சி குமாரி பிஜு-வின் நடனங்களில் காணப்பட்டது. மாலதி சீனிவாசனின் நட்டுவாங்கம் திருப்திகரமாக அமைந்தது.

'' அங்கே என்னடா செய்யறே ?'' என்று அதட்டினேன்.

'' ஒண்ணுமில்லே.... உங்க காலேக் கொஞ்சம் பிடிச்சுவிடலாமின்னு..... பழைய எசமானுக்குக் கால் பிடிச்சு விடற பழக்கம்.....''

''இந்த எசமானுக்கு அதெல்லாம் வேண்டாம் ! எழுந்திருந்து வா !''

ரதிகாந்தனுக்கு ரொம்ப ஆச்சரியம். சேவகன் கால் பிடித்து விடுவதை விரும்பாத எஜமானும் உண்டா !

பல காலமாக அமுலில் இருந்து வரும் இம்மாதிரி 'மாமூல்'களே ஏற்றுக் கொள்ளாத என் போக்கைக் குறித்து என் சக அதிகாரிகள் கேலியாகப் பேசிக் கொள்வது உண்டு: ''மலயபாபுவா, அவர் அலாதிப் பிறவின்னு! நம்ம மாதிரியா!'' நான் அவர்கள் கேலியைப் பொருட்படுத்துவதில்லே.

* * *

ரதிகாந்தனின் தண்டனைக் காலத்தில் பாதி முடிந்து விட்டது. ஒரு நாள் அவன் தன் சீட்டுடன் என் முன்னே வந்து நின்றான்.

சிறையில் ஒவ்வொரு கைதிக்கும் ஒரு சீட்டு உண்டு. அதில் அவனேப் பற்றிய எல்லா விவரங்களும் குறிக்கப்பட்டிருக்கும்.

'' என்ன வேண்டும் ?'' என்று கேட்டேன்.

தலேயைச் சொறிந்தவாறே பதில் சொன்னான். ''டெபுடி பாபுவைக் கேட்டேன். நான் இப்போ 'மேட்' ஆகலாமின்னு சொன்னார்.''

'மேட்' ஆக நியமிக்கப்படுவது கைதிகளுக்குக் கிடைக்கும் பதவி உயர்வு. தங்கள் தண்டனைக் காலத்தில் பாதியைக் கழித்தவர்களுக்கு இந்தத் தகுதி கிடைக்கும்.

'' 'மேட்' ஆக ஆசைப்படறியா ?''

பதில் இல்லே. ஆனால் உற்சாகமும் ஆவலும் அவன் முகத்தில் பிரதிபலித்தன.

எனக்குச் சற்று யோசனேதான். 'மேட்' ஆனால் மற்றக் கைதிகளே அடக்கி நடத்த வேண்டும், அவர்களிடம் வேலே வாங்கத் தெரிய வேண்டும். ரதிகாந்தனால் முடியுமா ?

ரதிகாந்தனேயே கேட்டேன்: ''மற்றக் கைதிகள் உனக்குக் கட்டுப்படுவார்களா ?''

'' ஏன் கட்டுப்படமாட்டாங்க ? அயோக்கிய ராஸ்......!'' என் மீது மரியாதை காரணமாக வாயில் வந்த வசவை முழுதும் உச்சரிக்காமல் நிறுத்திக் கொண்டான் ரதிகாந்தன்.

அவனுக்குப் பிரமோஷன் கிடைத்தது.....

ஒரு நாள் டெபுடி ஜெயிலர் என்னிடம் சிரித்துக் கொண்டே சொன்னார்: ''ரதிகாந்தனுக்குக் கூனல் குணமாயிட்டது, சார் !''

'' அதெப்படி ?''

'' பாருங்களேன், 'மேட்' ஆனப்புறம் எப்படி நிமிர்ந்து நடை போடறான்னு !''

அவனுடைய நடையுடை பாவனேகளில் ஏற்பட்டிருந்த மாற்றத்தை நானுந்தான் கவனித்தேன். அவனுடைய நோஞ்சான் உடம்பில் பெல்ட் நிற்பதில்லே. ஆகையால் அவன் இடுப்பைச் சுற்றி ஒரு துண்டைக் கட்டிக் கொண்டு அதற்குமேல் பெல்ட்டும் அணிந்து கொண்டான் ! அவனுடைய டவாலே வில்லே தினந்தோறும் பாலிஷ் போடப்பட்டுத் தங்கம் மாதிரி பளபளத்தது.

சிறைக்கு வெளியே வேலே செய்யச் செல்லும் கைதிகளின் ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு 'மேட்' வேண்டும். ஆனால் அவ்வாறு வெளியே செல்லும் உரிமை எல்லா 'மேட்'களுக்கும் கிடையாது. பாக்கித் தண்டனேக் காலம் ஓர் ஆண்டுக்கும் குறைவாக இருப்பவர்களுக்குத்தான் இவ்வுரிமை உண்டு.

ஒரு சமயம் என் வீட்டுத் தோட்டத்தில் வேலே செய்யும் கைதிகளுக்கு ஒரு 'மேட்'


வாய் நாற்றம் உங்களை
விலகி நிற்கச்செய்கிறது
COLGATE
DENTAL CREAM
DC.G.48 TH
கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம்
வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்...
நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள் !
தூய்மையான இனிய மூச்சுடனே,
வெண்மையான பற்களையும் பெற்றிடவே...
உலகிலேயே அதிக மக்கள்
மற்றெந்த பற்பசையையும்விட,
கால்கேட் பற்பசையையே
வாங்குகிறார்கள்!

தேவைப்பட்டது. 'மேட்'களின் சீட்டுக்களை எடுத்துப் பார்த்ததில் ரதிகாந்தனுக்கே அவ்வுரிமை இருப்பது தெரிய வந்தது.

ரதிகாந்தனைத் திரும்பிப் பார்த்தேன். அவன் ஆபீஸ் அறையின் மூலையில் உட்கார்ந்து கொண்டு மௌனமாக என் பெல்ட்டுக்குப் பாலிஷ் போட்டுக் கொண்டிருந்தான்.

''என்ன, உன்னால் முடியுமா?'' என்று அவனைக் கேட்டேன்.

''முடியாமே என்ன! எல்லாம் உங்கள் தயவு...... !''

ரதிகாந்தனைப் பார்த்ததும் என் மனைவிக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ''இந்தக் கூனனால் கைதிகளைக் கட்டி மேய்க்க முடியுமா ? அவர்கள் தப்பி ஓடிப் போயிடுவாங்க '' என்றாள்.

எங்கள் தோட்டத்தைப் பராமரிப்பது ரதிகாந்தனின் பொறுப்பாயிற்று. அவன் மற்றக் கைதிகளிடம் வேலை வாங்குவதோடு நிற்பதில்லை. தானே மண்வெட்டி, களைக்கொட்டு எல்லாம் எடுத்துக் கொண்டு வேலை செய்யத் தொடங்கினான். அவன் மண்ணை வெட்டும் அழகைப் பார்க்கத் தோட்டத்துக்கு வெளியே கூட்டம் கூட ஆரம்பித்தது. சிப்பாயால் அந்தக் கூட்டத்தைச் சமாளிக்க முடியவில்லை. சந்தடிச் சாக்கில் யாராவது கைதி ஓடிப்போய்விடுவாரோ என்ற கவலை சிப்பாய்க்கு.....

கடைசியில் ரதிகாந்தனுக்குத் தோட்டத்து வேலையிலிருந்து விடுதலை அளிக்க வேண்டியதாயிற்று. என் மனைவியிடம் சொன்னேன்: ''அவன் தோட்ட வேலை பார்த்தது போதும். வீட்டுக்குள்ளேயே ஏதாவது வேலை கொடு.''

''ஆமா, இவன் வேலை பார்த்துக் கிழிச்சான்! சும்மா வராந்தாவிலே உட்கார்ந்துக்கிட்டு ரஸ்தாவிலே போறவங்களை எண்ணிக்கிட்டு இருக்கட்டும் !''

ரதிகாந்தன் வராந்தாவில் உட்கார்ந்தான். ஆனால் அவனுக்கு வேலை இல்லாமல் போகவில்லை. என் ஏழு வயதுப் பெண் மஞ்சு அவனைப் பிடித்துக் கொண்டாள். தாயாருக்கு அவனால் உபயோகமில்லாவிட்டாலும் பெண் அவனிடம் நிறைய வேலை வாங்கினாள். அவனுக்கு மூச்சுவிடக்கூட நேரமில்லை.

ஓரிரண்டு மாதங்களுக்குப் பிறகு தகுதி வாய்ந்த 'மேட்' ஒருவன் கிடைத்துவிடவே ரதிகாந்தன் ஆபீஸ் வேலைக்குத் திருப்பி அனுப்பப்பட்டான். ஆனால் இப்போது அவனுக்கு வேலையில் முன்பிருந்த அக்கறையில்லை. ஏதோ ஒன்றைப் பறி கொடுத்தவனைப் போல் உற்சாகம் இழந்தவனாகத் தோற்றம் அளித்தான் அவன். அவனுடைய வேலையில் குற்றங்கள் ஏற்பட்டன — மேஜையைச் சரியாகத் துடைப்பதில்லை; பானையில் தண்ணீர் கொண்டு வந்து வைக்க மறந்துவிடுவான் ; ஒழுங்காக மாலை வேளைகளில் அறையில் சாம்பிராணி போடுவதில்லை.....

ஒரு நாள் என்னிடம் சொன்னான்: '' உடம்பு சரியில்லே, எசமான் ! என்னை ஆசுபத்திரிக்கு அனுப்புங்க !''

அப்படியே செய்தேன்.

இரண்டு நாட்களில் திரும்பிவந்துவிட்டான். அங்கும் இருக்கப் பிடிக்கவில்லையாம்!



''ஏண்டா இவ்வளவு லேட்டா வந்தே?''

''நீ கொடுத்த விலாசத்தின் வீடு எண் ஞாபகமில்லே. அதனாலே இந்தத் தெருவில் ஒவ்வொரு வீடா நுழைந்து நீ வந்திருக்கிறாயா என்பதைப் பார்த்துண்டு வந்தேன்!''

டாக்டரிடம் சொல்லி அவனுக்குத் தினம் பால் கொடுக்க ஏற்பாடு செய்தேன். சில நாட்கள் அதைக்கூட வாங்கி வர மறந்துவிட்டான் அவன் !

ஒரு நாள் என்னிடம் ஒரு கோரிக்கையுடன் வந்தான் — தன் பெண்ணைப் பற்றிய செய்தி வெகு நாட்களாகக் கிடைக்கவில்லையாம். கடிதம் எழுதிப் போட அவனுக்கு அனுமதி வேண்டுமாம்.

கேட்க வியப்பாக இருந்தது எனக்கு. அவனுக்குக் குடும்பம் என்று ஒன்றுமே இல்லை என்றுதான் நான் அதுவரை நினைத்திருந்தேன். அவனுக்கு ஒரு பெண் இருக்கிறாள் என்பது அன்றுதான் தெரியவந்தது. எட்டு வயதாம். தன் மாமாக்களுடன் இருக்கிறாளாம். ஆனால் ரதிகாந்தனுக்கு இதுவரை ஒரு கடிதமும் வந்ததில்லை; அவனும் இதுவரை ஒரு கடிதமும் எழுதியதில்லை. காரணம் எனக்குப் புரியவில்லை.

கடிதம் எழுத அனுமதி அளித்தேன்.....

ஆறு மாதத்துக்கு மேற்பட்ட தண்டனை பெற்ற கைதிகளுக்கு அவர்களுடைய நடத்தையைப் பொறுத்துத் தண்டனையில் கழிவு கொடுக்கப்படுவதுண்டு. கைதிகள் எப்போதும் அதிகபட்சக் கழிவைப் பெற முயற்சி செய்வார்கள்.

ரதிகாந்தன் ஜெயிலரான என்னுடைய ஆபீசில் வேலை பார்ப்பவன். என்னுடன் நெருங்கிப் பழகுபவன். ஆகையால் மற்றக் கைதிகளைவிட அதிகமாகக் கழிவுபெறும் வாய்ப்பு அவனுக்கு உண்டு. இருந்தாலும் அவன் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டதில்லை. ஒரு நாளும் இல்லாத திருநாளாய் ஒரு நாளை என்னிடம் வந்து தன் சீட்டைக் காட்டி, ''எனக்கு எவ்வளவு பக்ஷீஸ் கொடுப்பீங்க?'' என்று கேட்டான்.

வியப்புடன் அவனை நிமிர்ந்து பார்த்தேன்.

'' பொண்ணைப் பார்க்கணுமின்னு கொஞ்ச நாளா மனசு துடிக்குதுங்க..''

அதிகபட்ச கழிவு சாங்ஷன் செய்தேன். இன்னும் இரண்டு வாரங்களில் அவன் விடுதலை பெற்றுவிடலாம்.......

ஒரு நாள் ஆபீசிலிருந்து வீடு திரும்பிய போது வீட்டில் ஒரே ரகளை. மஞ்சுவின் துரைசாணிப் பொம்மையைக் காணோமாம்! மஞ்சு உரக்கக் கத்தி ஊரைக் கூட்டுகிறாள். என் மனைவி முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க இங்குமங்கும் நடை பழகுகிறாள்...

பொம்மை கெட்டுப்போய்விட்டது என்று கேட்க எனக்கு வருத்தமாகத்தான் இருந்தது. ரொம்ப அழகான பொம்மை அது. ஸ்பிரிங் வைத்த ஒரு நாற்காலியில் ஒரு சீமாட்டி உட்கார்ந்திருப்பாள். சாவி கொடுத்தால் சீமாட்டி நாற்காலியோடு சேர்ந்து ஆடுவாள். இவள் ஆட ஆட, அதைப் பார்க்கும் குழந்தைகளின் உள்ளங்களும் துள்ளி ஆடும்...

பொம்மை காணமற் போனதில் எனக்கே இவ்வளவு வருத்தமாயிருந்தால் குழந்தை மஞ்சுவுக்கு எப்படி இருக்கும்!

வீட்டிலோ எவ்வளவோ கைதிகளின் நடமாட்டம். இயற்கையாகவே அவர்கள் மேல் சந்தேகம் விழுந்தது. தலைமை ஜமேதார் முறைப்படி அவர்கள் எல்லாருக்குமே 'பரிசு' கொடுத்து அவர்களை விசாரித்தான். முயற்சி வீண்தான். பொம்மை கிடைக்கவில்லை.

என் மனைவி சொன்னாள்: "இது நிச்சயம் அந்தக் கூனனோட வேலைதான்!"

"சீ, அப்படியெல்லாம் சொல்லாதே! அவன் எவ்வளவு நாட்கள் முன்னாலேயே ஆபீஸ் வேலைக்குத் திரும்பிப் போயிட்டான்!"

"அதனாலென்ன? அவன் இங்கே இருந்த போதே பொம்மையைக் கிளப்பிக்கொண்டு போயிருக்கான். பொம்மை காணாமல் போனதை மஞ்சு இவ்வளவு நாள் கவனிக்கவில்லை. இன்னிக்குத்தான் கவனிச்சுட்டுக் கூப்பாடு போடறா!.... ஏ மஞ்சு! இதோ பார்! கத்தினியோ, மொத்து மொத்துன்னு மொத்திடுவேன், ஆமா!" என்று மஞ்சுவை அதட்டினாள் என் மனைவி.

அதட்டலின் விளைவு மஞ்சுவின் அழுகையின் சுரம் உயர்ந்ததுதான்! அந்த அழுகைக் கிடையில் அவள் சொன்னாள்: "கூனல் மாமா நல்ல மாமா! அவர் நிச்சயம் பொம்மையை எடுத்திருக்கமாட்டார், ஆமா!"

குறிப்பிட்ட நாளில் ரதிகாந்தனுக்கு விடுதலை கிடைத்தது. அவனுக்கு ஒரு நாள் சாப்பாட்டுக்கான பணம், போக வேண்டிய இடத்துக்கான ரயில்வே பாஸ், சிறையில் ஒழுங்காக நடந்து கொண்டதற்காக இரண்டு ரூபாய் பக்ஷீஸ் முதலியவை கொடுக்கப் பட்டன. அவன் என்னைக் கும்பிட்டுவிட்டுக் கையில் ஒரு சிறு துணி மூட்டையுடன் வெளியே புறப்பட்டான்......

காலை மணி ஒன்பது இருக்கும். ஆபீஸ் வேலை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது.

சிறை வாசல் பக்கம் ஏதோ சத்தம் கேட்டது. ஒரு வார்டர் ஓடி வந்து சொன்னான்: "ரதிகாந்தனைப் பிடிச்சுக்கிட்டு வராங்க!"

"ஏன்?" என்று கேட்டேன்.

"அவனிடம் ஏதோ திருட்டுச் சாமான் கிடைச்சுதாம்."

ஆபீசிலிருந்து வெளியே வந்தேன். சிறை வாயிலில் பெரிய கூட்டம். அதன் நடுவில் ரதிகாந்தன். ஒரு சிப்பாய் அவனுடைய கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தான். ரதிகாந்தனைச் சிப்பாய்கள் ஏற்கனவே கவனித்துக் கொண்டுவிட்டார்கள் போலும்! அவனுடைய நெற்றியில் பெரிய வீக்கம்; கன்னத்தில் கரு ரத்தம் கட்டியிருந்தது. பக்கத்தில் ஜமேதார் நின்று கொண்டிருந்தான். அவனுடைய வலது கையில் தடி. இடது கையில் ஒரு பொம்மை— மஞ்சுவின் துரைசாணிப் பொம்மை!

ஜமேதார் என்னிடம் சொன்னான்: "பொம்மை இந்தாங்க சார்! அவனோட துணி மூட்டையிலே இருந்தது."

நடந்தது இதுதான்:

சிறையிலிருந்து வெளியே வந்ததும் ரதிகாந்தன் நேரே ரஸ்தாவை நோக்கிச் செல்லாமல் என் வீட்டுத் தோட்டத்துப் பக்கம் வந்திருக்கிறான். அதைக் கவனித்த சிப்பாய் அவனைப் பின்தொடர்ந்திருக்கிறான். ரதிகாந்தன் எங்கள் தோட்டத்தில் மண்ணைத் தோண்டி அங்கிருந்து இந்தப் பொம்மையை எடுத்துத் தன் துணி மூட்டையில் வைத்துக் கொள்ளும்போது பிடிபட்டிருக்கிறான்......

என்னுடைய டெபுடி சொன்னார்: "நான் தான் அப்பவே சொன்னேனே. அந்தக் கூனல்லே திருட்டுத்தனம் மூட்டையாச் சேர்ந்திருக்குன்னு! களவாணிப் பயலை நன்னா உதைச்சு வெளுக்கணும்!"

அங்கு கூடியிருந்தவர்களில் யாருக்கும் இவ் விஷயத்தில் அபிப்பிராய பேதம் இருந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் எல்லோரும் என் உத்தரவுக்குத்தான் காத்திருந்தார்கள்.

திடீரென்று கூட்டத்தில் ஒரு சலசலப்பு ஏற்பட்டது. கூடியிருந்த ஜனங்களை இடித்துத் தள்ளிக் கொண்டு வந்தாள் மஞ்சு. கண்களை விரித்து நாற்புறமும் பார்த்தாள். பிறகு ஓடிப் போய் ஜமேதாரின் கையிலிருந்த பொம்மையைப் பிடுங்கினாள். அதை ரதிகாந்தன் கையில் திணித்துவிட்டுச் சொன்னாள்: "ஓம் பொண்ணு நீலிக்கு இதைக் கொடுத்துடு! மஞ்சு கொடுத்தா — அப்படின்னு சொல்லு! உம்?"

ரதிகாந்தனின் பதிலை எதிர்பாராமல் மஞ்சு கூட்டத்துக்குள் ஓடி மறைந்துவிட்டாள்.

சிப்பாய்களால் பிடிக்கப்பட்டு அவர்களிடம் அடிபட்டபோதும் ரதிகாந்தன் முகத்தில் எவ்வித சலனமும் இல்லை; கண்களில் ஒரு சொட்டு நீர் இல்லை. ஆனால் இப்போது அந்த அவலட்சணமான முகம் உணர்ச்சிப் பெருக்கில் சிலிர்த்துத் துடித்தது. அவனுடைய ஒட்டிய கன்னங்களின் வழியே கண்ணீர் பெருகி ஓடியது.

வங்காளியிலிருந்து தமிழாக்கம்:
க. கிருஷ்ணமூர்த்தி



13. புஷ்பசுகந்தி

அந்தக் கன்னிகா மடத்தின் எங்கோ ஓர் இடத்தில், 'ஆவே மரியா' என்னும் இலத்தின் பாடலைப் பயிற்சிக்காகப் பியானோவில் வாசிப்பது இலேசாகக் கேட்டுக் கொண்டிருந்தது. அவ்வினிய இசையைச் செவிமடுத்தவராய் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்த வேதமூர்த்தி மாடிப் படிகளில் இருவர் இறங்கி வரும் பாதரட்சை ஓசை கேட்டு மெல்ல எழுந்து நின்றார். சற்றைக்கெல்லாம் இரு கன்னிகா ஸ்திரீகள் அவ்வரவேற்பு அறையினுள் பிரவேசித்தனர்.

அவர்களில் ஒருத்திக்கு — அவள்தான் அந்த மடத்தின் தலைவி — வயது நாபத்தைந்து இருக்கும். ஒல்லியும் உயரமுமான உடல்வாகு. மாநிறம் தான். பாதி நெற்றியையும், இரு செவிப் புறங்களையும், கழுத்தையும் மூடி மறைக்கும் படியான ஒருவித வெண்ணிறத் துணிச் சுற்றலுக்கு மேலே தலையில் 'ஸ்கார்ப்' போல் முக்கோணமாக மடித்து முன் நெற்றியிலும் செவியோரங்களிலும் 'பின்' செய்யப்பெற்றுப் பின்னால் நீண்டு தொங்கும் கறுப்பு முக்காடு; நிறைய 'பிரில்' வைத்துத் தைக்கப்பெற்ற நீண்ட தொள தொளப்பான — பொடி வண்ண—மேலங்கி; அவ்வங்கியின் மேல் அதே நிறத்தில் தோளிலிருந்து முன்னும் பின்னுமாக முட்டிக்கால் வரையில் நீண்டு தொங்கும் 'ஏப்ரன்'; அதற்கும் மேலே கழுத்திலிருந்து மார்பு வரை அரைவட்டவடிவிலான வெண்ணிற 'பிப்'; அதன் மீது கறுப்புப் பட்டுக் கயிற்றில் தொங்கும் ஒரு வெள்ளிச் சிலுவை — என்று இந்தக் கோலத்தில் விளங்கினாள் அவள்.

அவளுக்குத் துணையாக அவளோடு வந்த இன்னொரு கன்னிகா ஸ்திரீயும் இதே ஆடை அணிகளுடன்தான் இருந்தாள். ஆயின், மடத்துத் தலைவி தன் வலக்கை விரலில் அணிந்திருந்த சாதாரண வெள்ளி மோதிரம் போல் இவள் அணிந்திருக்கவில்லை. இது ஒன்றுதான் அவ்விருவரிடையே காணப்பட்ட வித்தியாசம். அவளைவிட இவள் வயதிலும் கொஞ்சம் இளையவளாய் இருந்தாள்.

மடத்துத் தலைவியின் முகத்தில், ஐம்புலன்களையும் வென்று அடக்கி, மேலே உயர்ந்துவிட்டதால் ஏற்படக்கூடிய ஒரு கம்பீரமும், அதனை மென்மைப் படுத்தும் வகையில் நிரந்தரத் தன்மை கொண்டது போல் நிலவிய ஒரு சாந்தப் புன்னகையும் இழைந்து பொலிந்தன. அவள் வரும்போது அங்கு நின்றிருந்த வேதமூர்த்தியின் உருவத்தைத் தான் பார்த்தாளே தவிர, அவருடைய முகத்தைப் பார்க்கவில்லை. அந்த அறையின் சுவர் மாடம் ஒன்றில் ஸ்தாபிக்கப் பெற்றிருந்த புனித இரேஸம்மாளின் சிலையருகில் போய் அவ்விருவரும் நின்று கொண்டனர்.

''குட்மார்னிங் சிஸ்டர்!'' என்றார் வேதமூர்த்தி.

''வணக்கம் ஐயா!'' என்று தமிழில் சொல்லிக் கரம் குவித்தாள் மடத்துத் தலைவி. ''உட்காருங்கள்'' என்றாள் மரியாதையுடன். அவள் தமிழ்ப் பெண்மணிதான் என்பது அவளுடைய பேச்சுக் குரலில் வீசிய 'திருநெல்வேலி வாடை'யிலிருந்து தெரிந்தது.

அவளைவிட வேதமூர்த்தி ஐந்தாறு வயது மூத்தவராயினும் அந்தத் துறவி நின்று கொண்டிருக்கும் போது தாம் உட்கார மனம் வராதவராய், நாற்காலியின் முதுகுச் சட்டத்தைப் பிடித்துக் கொண்டு நின்றார்.

''ஐயா! பேச வந்த விஷயம் என்ன?'' என்று உடனே பேச்சை ஆரம்பித்தாள் மடத்துத் தலைவி. அவளுடைய பார்வை சன்னலுக்கு வெளியே — பூந்தோட்டத்தின் நடுவில் — வட்ட வடிவமான ஒரு பீடத்தின் மேல் நிறுத்தப் பெற்றிருந்த புனித கன்னி மரியாயின் சிலையின்மீது லயித்திருந்தது.

''இந்தக் கான்வென்டில் சுகந்தி என்றொரு பெண் இருக்கிறாள் அல்லவா?'' என்று தயக்கப் புன்னகை புரிந்தவாறு கேட்டார் வேதமூர்த்தி.

''சுகந்தியா?.... எந்தச் சுகந்தி?...'' என்று இழுத்தாற்போல் வினவிய மடத்துத் தலைவி தன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த இளைய கன்னிகா ஸ்திரீயைத் திரும்பி நோக்கினாள். பிறகு அவளுக்கே நினைவு வந்து விட்டாற்போல், ''ஓ.... அந்தச் சுகந்தியா?...அவளுடைய முழுப் பெயர் புஷ்ப சுகந்தி!'' என்றாள்.

''ஆமாம் சிஸ்டர்! அந்தப் பெண்ணைத்தான் கேட்கிறேன்.''

''இருக்கிறாள்.''

''அவளை நான் என் வீட்டுக்கு அழைத்துப் போகலாம் என்றுதான் வந்தேன்!''

இதைக் கேட்டு மடத்துத் தலைவி உள்ளூறத் துணுக்குற்றிருக்க வேண்டும். அதன் பிரதிபலிப்பாக அவளது புருவங்கள் இலேசாக உயர்ந்து தாழ்ந்தன. ஏற்கனவே வெளுத்துக் காணப்பட்ட முகம் இப்போது மேலும் வெளிறியது. ஆயினும் மறு கணமே தன் முகத்தில் பழைய அமைதியையும் புன்னகையையும் வருவித்துக் கொண்டு, ''அப்படியா?.... நீங்கள் யார்?'' என்று நிதானமாகக் கேட்டாள்.

இந்தக் கேள்விக்கு உடனே பதில் சொல்லத் தோன்றாதவர்போல் சற்றே தயங்கிய வேதமூர்த்தி, ''நான்.... நான்....'' என்று குழறி இழுத்தார்.

''அதாவது, அந்தப் பெண்ணுக்கு நீங்கள் என்ன உறவு என்று கேட்கிறேன் ஐயா!'' என்றாள் மடத்துத் தலைவி, தான் முதலில் கேட்ட கேள்வியில் தொனித்த சொரசொரப்பை மென்மைப்படுத்தும் தோரணையில்.

''நான் அவளுக்குக் கார்டியன், சிஸ்டர்!''

''கார்டியன் என்றால்?.... சட்டப்படியா?...அல்லது...''

''அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை. ஒரு தார்மீக நோக்கில் நானே இந்தப் பொறுப்பை வலிந்து ஏற்றுக் கொண்டேன்'' என்றார் வேதமூர்த்தி.

தன் பார்வையைத் திருப்பாமலே சில விநாடி நேரம் மௌனமாயிருந்த மடத்துத் தலைவி, ''அம்மாதிரி ஏற்க வேண்டிய அவசியம் உங்களுக்கு ஏன் ஏற்பட்டது என்று நான் கேட்கலாம்; எங்களுக்கு அது தேவையில்லாத விவரம் என்பதால் அதைக் கேட்காமல் விட்டு விட்டு, நீங்கள் சொல்வதை முற்றிலும் நம்புகிறேன்'' என்று கொஞ்சம் கூடப் பதற்றமில்லாமல் கூறி, ''ஆனால்.......'' என்று இழுத்து நிறுத்தினாள்.



''என்ன சிஸ்டர்?'' என்று அவசரமாக வினவினார் வேதமூர்த்தி.

''சரி; அதைப் பிறகு சொல்கிறேன். அதற்கு முன்னால் நான் இன்னொரு விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்!''

வேதமூர்த்தி அவளது முகத்தை ஏறிட்டுநோக்கினார்.

''நீங்கள் ஏன் அந்தப் பெண்ணை இங்கிருந்து அழைத்துச் செல்ல விரும்புகிறீர்கள்?''

''அவளுக்கு இப்போது வயது பதினெட்டு அல்லது பத்தொன்பது இருக்கும் இல்லையா, சிஸ்டர்?''

''இருக்கலாம்'' என்றாள் மடத்துத் தலைவி ஏதோ யோசனையுடன். அவளுடைய பார்வை மட்டும் அவர் பக்கம் திரும்பவே யில்லை. அது அந்தப் பூந்தோட்டத்தில் இருந்த புனித மாதா சிலையின் மீதே இலயித்திருந்தது. அவள் அருகில் நின்றிருந்த இளைய கன்னிகா ஸ்திரீயும் அவ்வாறே வேறெங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள். எந்த ஆண்மகனின் முகத்தையும் — குறிப்பாகக் கண்களை — நேரிட்டு நோக்கக் கூடாது என்ற ஒரு கட்டுப்பாட்டில் நன்கு பயிற்சி பெற்றுத் தேறியதாலேயே அவர்களால் இப்படி இருக்க முடிந்ததென்பது தெள்ளத் தெளிவாயிற்று.

''இந்த வயதாவதும் அந்தப் பெண்ணை என் பொறுப்பில் வைத்துக் கொண்டு அவளுக்கென்று ஒரு நல்வாழ்வைத் தேடி அமைக்கும் கருவுகாக நான் ஒருவருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காகத் தான் அவளை இங்கிருந்து அழைத்துப் போக விரும்புகிறேன், சிஸ்டர்!'' என்றார் வேதமூர்த்தி சற்றே உணர்ச்சி வயப்பட்ட குரலில்.



"மெத்த மகிழ்ச்சி!" என்று புன்முறுவலுடன் சொன்ன மடத்துத் தலைவி, "ஆனால் உங்களின் இந்த நல்ல நோக்கத்துக்கு நான் உதவ முடியாத வகையில் ஒரு தடங்கல் இருக்கிறதே என்பதற்காக வருந்துகிறேன்" என்றாள் அமைதியாக.

"தடங்கலா?... என்ன அது சிஸ்டர்?" என்று துடிப்பான குரலில் வினவினார் வேதமூர்த்தி.

"ஆம், ஐயா! உங்களை நான் இதற்கு முன் பார்த்ததில்லை. நீங்களும் இங்கே வந்ததில்லை என்றே நினைக்கிறேன்!"

"வாஸ்தவம்."

"அந்தப் பெண்ணை இந்தக் கான்வென்டில் கொண்டு வந்து சேர்த்தவள் அவளுடைய தாயார். ஆகவே, அவளைத் தவிர வேறு எவருடைய பொறுப்பிலும் இப்பெண்ணை எங்களால் ஒப்படைக்க முடியாது. இது இம்மடத்தின் கண்டிப்பான விதி."

வேதமூர்த்தி இதைக் கேட்டுக் கொஞ்சமும் வியப்போ பரபரப்போ அடையவில்லை. மாறாக, இளநகை பூத்தவாறு, "ஆமாம் சிஸ்டர்! நீங்கள் சொல்வது சரிதான். நானும் அதை அறிவேன். அறிந்துதான் இங்கு வந்தேன். இதோ இந்தக் கடிதத்தைத் தயவுசெய்து படித்துப் பாருங்கள்" என்று கூறிக் கொண்டே தம் கோட்டுப் பையிலிருந்து ஓர் இன்லாண்ட் லெட்டரை எடுத்து நீட்டினார்.

மடத்துத் தலைவி அந்தக் கடிதத்தை வாங்கிப் படித்தாள். அவள் முகத்தில் எவ்விதச் சலனமும் ஏற்படவில்லை. சில விநாடி யோசனைக்குப் பிறகு தன் பக்கத்தில் நின்ற இளைய கன்னிகா ஸ்திரீயைத் திரும்பிப் பார்த்தாள். அவளது அப் பார்வையிலிருந்து உடனே எதையோ புரிந்து கொண்ட இளைய கன்னிகா ஸ்திரீ மெல்ல நடந்து போய்ப் பக்கத்து அறையிலிருந்த ஓர் அலமாரியைத் திறந்து பெரிய லெட்ஜர் போல் காணப்பட்ட பழைய பதிவேட்டுப் புத்தகம் ஒன்றைத் தூக்கிக் கொண்டு வந்து மேசையின் மேல் வைத்தாள். அதன் பக்கங்களைப் புரட்டிப் பார்த்து விட்டுத் தன் தலைவியை நோக்கிச் 'சரிதான்' என்பது மாதிரி தலையசைத்தாள்.

மடத்துத் தலைவியும் தனக்குத் தானே தலையாட்டிக் கொண்டு மறுபடியும் சற்றுச் சிந்தனை வயப்பட்டவளாய் இருந்தாள். பிறகு, "இந்த அம்மணி இப்போது எங்கே, எந்த ஊரில் இருக்கிறாள் ஐயா?" என்று இதமான குரலில் வினவினாள்.

''அது அந்தக் கடிதத்தின் தலைப் பிலேயே குறிப்பிட்டிருக்கிறது, பாருங்கள் சிஸ்டர்!'' என்றார் வேத மூர்த்தி.

''ஒருகால் அவள் இங்கே உங்கள் வீட்டில் வந்து இருக்கிறளோ என் பதற்காகக் கேட்டேன்.''

''இல்லை; இந்தக் கடிதம் நேற்றுத் தான் எனக்கு வந்தது.''

''அப்படியா?'' என்றவாறு மீண் டும் சிறுபொழுது மௌனமாயிருந்த மடத்துத் தலைவி, ''ஆனாலும் இதை வைத்துக் கொண்டு மட்டும் நாங்கள் ஏதும் செய்ய முடியாது என்றே நினைக்கிறேன்'' என்றாள்.

''என் சிஸ்டர்? இது அந்தப் பெண் ணின் தாயே தன் கைப்பட எழுதிய கடிதம்தானே?''

''நான் அதை மறுக்கவில்லை.''

''தன் மகளை என்னோடு அனுப்பி வைக்கும்படியும் இந்தக் கடிதத்திலே அவள் உங்களுக்கு எழுதியிருக்கிறாள் சிஸ்டர்!''

''தெரிகிறது. ஆனால் நான் சொல் வது வேறு.''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''பதினேழு வருஷங்களுக்கு முன்னால் ஒன்றரை வயதான தன் குழந்தையை அந்த அம்மணி எங்களிடம் கொண்டு வந்து ஒப்படைத்தாள் ..''

''ஆமாம், சிஸ்டர்! அது எனக்கும் தெரியும்.''

''அப்படி ஒப்படைத்தபோது அவள் என்ன சொன்னாள் தெரியுமா? எங் களுக்கே அந்தக் குழந்தையை முழுச் சொந்தமாக்கி விட்டதாக சொன்னாள்.''

''அவ்வாறே எழுதியும் கொடுத் திருக்கிறாளா சிஸ்டர்?''

''ஆமாம்; இதோ இந்தப் பதி வேட்டில் அதற்கான ஆதாரம் இருக் கிறது.''

''பின்னே எனக்கு அவள் இந்தக் கடிதத்தை எழுதக் காரணம்?''

மென்னகை பூத்த மடத்துத் தலைவி நிதானம் குலையாத குரலில் கூறினாள்: ''ஒருவேளை, எங்களிடம் தன் குழந்

வாங்கினார் குத்து, கொடுத்தார் அறை!



திருச்சி பொருட்காட்சியில் சென்னை யூனிட்டி க்ளப் குழுவினரின் 'மாயா பஜார்' நாடகம் நடந்து கொண்டிருந்தது.

நாடகத்தின் கதாநாயகன் ஒரு புரொபசர். அவர் தீவிர ஆராய்ச்சி செய்து முடிவில் இளமை தரும் மருந்து ஒன்றைக் கண்டு பிடித்துவிடுவார். புரொபச ராக வி. கோபாலகிருஷ்ணனும் புரொபசரின் உதவி யாளராக நகைச்சுவை நடிகர் மூர்த்தியும் நடித் தனர்.

மருந்து கண்டுபிடித்த புரொபஸர், அதைத் தாமே சாப்பிட்டுப் பார்ப்பார். இளமை திரும்பியதும் மனைவியுடன் 'டூயட்' பாடுவார்; உதவியாளரிடம் குஸ்திச் சண்டை போடுவார்!

அன்று காலையிலிருந்தே நடிகர் மூர்த்திக்கு மூச்சுப் பிடிப்பு. முதுகிலும் வலி, கழுத்தையும் திருப்ப முடியவில்லை. ''ஐயா புரொபசரே! இன்று சாயந்திரம் நாடகத்தில் என்மீது கைவைக்காதீர்; மூச்சுப் பிடிப்பு!'' என்று கேட்டுக் கொண்டார் மூர்த்தி.

ஆனால் கோபாலகிருஷ்ணன் அதை அடியோடு மறந்துவிட்டார். குறிப்பிட்ட காட்சியில் ''என்னே என்ன நினைக்கிறே? வா, பாக்சிங் போடலாம்! கம் ஆன்......!'' என்று சொல்லி நாலு குத்தும் விட்டு விட்டார்.

குத்து வாங்கிய மூர்த்தி உள்ளே வந்து அழுது விட்டார்! மற்றவர்கள் சமாதானப்படுத்தி அடுத்த காட்சிக்கு மேடைக்கு அனுப்பி வைத்தார்கள்.

நாடகத்துக்குள் ஒரு நாடகம்

உடனே மூர்த்தி நேரே புரொபசரிடம் சென்று அவர் கன்னத்தில் பளார் பளார் என்று அறைந்து விட்டார்! அதற்கு அனுசரணையாக, ''நீங்கள் கண்டு பிடித்த மருந்தைச் சாப்பிட்டால் உங்களுக்கு இளமை திரும்பும், பாக்சிங் பண்ணச் சொல்லும். ஆனால் எனக்கு மருந்து சாப்பிடவே வேண்டாம். எனக்கே வாலிப வயதுதான்!'' என்றொரு டயலாக்கையும் சொல்லிக் கோபத்தைத் தீர்த்துக்கொண்டார்!


புரொபசர் புரிந்து கொண்டார்! அதை நாடகச் சம்பவமாக ரசிகர்கள் எண்ணினார்கள்.

''நாடகம் முடிந்ததும் நாங்கள் இருவரும் எல்லா வற்றையும் மறந்து சிரித்தோம்....'' என்றார் (வெண்ணிற ஆடை) மூர்த்தி.

-சிவபாலன்

எமது கடாவ் வாயில் வாடிக்கையாளருக்கு
கடாவ் வாயில்ஸ் அளிக்கும் முக்கியமான செய்தி

இந்தச் சின்னம் உன்னதமான தரத்தின் பரம்பரையையும், உத்தரவாதத்தையும் குறிக்கிறது.



உங்களுக்கு உன்னதமான தயாரிப்பை வழங்குவதற்கென எங்களால் தெரிந்தெடுத்த இறக்குமதியான பருத்தியிலிருந்தும் இதர உயர்ந்த ரக பொருள்களிலிருந்தும் தயாரிக்கப்படும் துணிகளின் ஒவ்வொரு மீட்டரிலும் 'கடாவ் வாயில்ஸ்' முத்திரை இருக்கும். உங்கள் சொந்த நலனைக் கருதி இந்த முத்திரை இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

எமது தயாரிப்புகளைப் போலவே தோற்றமளிக்கும் மட்டரகமான மற்றும் மலிவான போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

[illegible]

எமது மதிப்புமிக்க வாடிக்கையாளரின் நலனைக் கருதி வெளியிடப்பட்டது.

தி கடாவ் மாகன்ஜீ ஸ்பின்னிங் அண்ட் வீவிங் கோ. லிட்
தலைமை அலுவலகம்: லக்ஷ்மி பில்டிங்,பல்லார்ட் எஸ்டேட்,பம்பாய்
மில்: தேஹின்ஸ் ரோடு, பைகுல்லா பம்பாய்-400027
மொத்த விற்பனைக்கடை: மூல்ஜீ ஜேதா மார்க்கெட், பம்பாய்-2

KMS–28/PREM ASSOCIATES/TAM

தையை ஒப்படைத்தபிறகு உங்களிடம் அந்த அம்மாள் இவ்வாறு கூறியிருக்கலாம். அதாவது, குழந்தை வளர்ந்து பெரிதானதும் அதன் எதிர்கால வாழ்க்கையை நீங்கள் அமைத்துத் தர வேண்டும் என்று உங்களிடம் அவள் வேண்டியிருக்கலாம். அப்படி வேண்டும்படியான சந்தர்ப்பச் சூழ்நிலையோ, வாய்ப்போ, நம்பிக்கையோ, துணிவோ அப்போது அவளுக்கு ஏற்பட்டிருக்கலாம். அதனால் எங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை மறந்து, அல்லது மறுத்து, உங்களிடம் தெரிவித்த வேண்டுகோளை மட்டுமே நினைவில் கொண்டு இப்போது உங்களுக்கு இந்தக் கடிதத்தை அவள் எழுதியிருக்கலாம்.''

இனி என்ன சொல்வது, என்ன கேட்பது என்று தோன்றாமல் திக்குமுக்காடிப் போன வேதமூர்த்தி சற்றுப் பொறுத்து, ''அப்படியானால் தங்கள் முடிவான பதில்தான் என்ன சிஸ்டர்?'' என்று கவலை செறிந்த குரலில் வினவினார்.

''உங்கள் வேண்டுகோளை எங்களால் ஏற்க இயலாததற்கு வருந்துகிறேன், ஐயா!''

இதைக் கேட்டு வேதமூர்த்தி இலேசாக மனம் கனன்றார். அவரது முகம் இறுகி, உதடுகள் துடித்தன. ''நீங்கள் இப்படிச் சொல்வது எனக்குச் சரியாகப் படவில்லை சிஸ்டர்! தாய் இருந்தும் அநாதையான ஒரு பெண் குழந்தையைத் தக்க தருணத்தில் ஆதரவு காட்டி வாங்கி வளர்த்து ஆளாக்கினீர்கள் என்ற மகத்தானதோர் உண்மையை நான் மறுக்கவில்லை. இந்தப் புனிதமான சேவையைச் செய்த உங்களைப் போற்றுகிறேன். ஆனால் இதற்கும் மேலே அந்த அபலைப் பெண் பிள்ளையின் எதிர்காலத்தைப் பற்றி நீங்கள் சிந்திக்காமலும், கவலைப்படாமலும் இருப்பதுதான் எனக்கு வேதனையைத் தருகிறது. அந்த அநாதைப் பெண்ணைத் தாயினும் மேலாகக் காத்துப் பேணி வளர்த்து விட்ட ஒன்றுக்காகவே அவள் உங்களிடம் கடைசிவரையில் அநாதையாகக் கிடந்துவிட வேண்டியதுதானா? அவளுக்கு என்று ஒரு வாழ்க்கையை அமைத்துத் தர ஒருவர் எவ்வித பலாபலனையும் எதிர்பார்க்காமல் முன்வருவதைக் கூட நீங்கள் ஏற்க மறுப்பது நியாயமாகுமா?'' என்று உணர்ச்சி மிகுதியால் கரகரத்த குரலில் கேட்டார் அவர்.

ஆடாது அசையாது சிலைபோல் நின்றிருந்த மடத்துத் தலைவியின் முகத்தில் இப்போதும் எள்ளத்தனை சலனமும் ஏற்படக் காணோம். அவள் முன்போலவே இதமான புன்னகையுடன், ''நாங்கள் அந்தப் பெண்ணின் எதிர்கால வாழ்க்கையைப் பற்றி ஏதும் கவலைப்படவில்லை என்று நீங்கள் எதைக் கொண்டு சொல்கிறீர்கள் ஐயா?'' என்று திருப்பிக் கேட்டாள்.

''அப்படி நீங்கள் அவளுக்காக என்னதான் செய்யப் போகிறீர்கள் சிஸ்டர்?''

''நீங்கள் அவளுக்குச் செய்ய விரும்புவதைவிட ஆயிரம் மடங்கு உயர்வானதொரு நல்வாழ்வை நாங்கள் அவளுக்காகத் தேடித் தரத்தான் போகிறோம்.''

''இல்லை சிஸ்டர்! இம்மாதிரி மடங்களில் வாழும் அநாதைச் சிறுமிகள், பெரியவர்களானதும் இங்கே எப்படி நடத்தப்படுகிறார்கள், எத்தகைய வாழ்க்கையை மேற்கொள்கிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் எனக்கும் கொஞ்சம் தெரியும். பலர் வாயிலாகக் கேள்விப்பட்டும் இருக்கிறேன்.''

''உங்களுக்குத் தெரிந்ததையும் நீங்கள் கேள்விப்பட்டதையும் தாராளமாகச் சொல்லலாமே!''

''மடத்துக்குச் சொந்தமான மாடுகளை மேய்க்க, மாட்டுக் கொட்டிலைத் துப்புரவு பண்ண, கோழிப் பண்ணையைப் பாதுகாக்க, தோட்ட வேலை செய்ய, கோயில், பள்ளிக்கூடம் முதலானவற்றைப் பெருக்கிச் சுத்தப்படுத்த, சமையல் செய்ய, துணி துவைக்க — இப்படி இன்னும் பல காரியங்களைக் காலமெல்லாம் செய்து செய்தே அவர்கள் காலத்தைக் கழிக்கிறார்கள்; கொஞ்சம் படிக்க வைத்து விட்டால் வேலையையோ, டீச்சர் தொழிலையோ மேற்கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்; மொத்தத்தில் ஒரு குறிப்பிட்ட வயதைக் கடந்தபின் கிட்டத்தட்ட சிறைக் கைதிகளைப் போலவே அவர்கள் நடத்தப்படுகிறார்கள். மூன்று வேளைச் சோறு, மாற்றிக் கட்ட இரண்டு சட்டை, சேலைகள், படுக்க இடம்—இவற்றுக்காக இந்த அநாதைப் பெண்கள் இங்கே தம் வாழ்நாள் முழுக்க உழைத்து உருக்குலைந்து விதி வந்தால் சாகிறார்கள்.''

இதைக் கேட்டு முதல் முறையாக அந்த மடத்துத் தலைவி வாய் விட்டுச் சிரித்தாள். சிரித்துக்கொண்டே ''நல்ல கதை! சுவையான கற்பனைகள்!'' என்று சொல்லி மீண்டும் நகைத்தாள். ''சரி; நீங்கள் நினைப்பது போலவே, இங்கு வந்து சேரும் பெண்களெல்லாம் சிறை வாழ்க்கை வாழ்கிறார்கள் என்றே வைத்துக் கொள்வோம். இதே பெண்கள் இம்மடத்தை விட்டு



''டாக்டர் சார்! என் கணவருக்கு நல்ல டானிக் எழுதிக் கொடுங்கள். எனக்காகச் செக்கில் கையெழுத்துப் போடும்போதெல்லாம் அவர் கை ரொம்ப நடுங்குகிறது.''

வெளியே போனால் — அல்லது இங்கு வராமலே வெளியே இருந்திருந்தால்— எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்வார்கள், வாழ்ந்திருப்பார்கள் என்பதையும் நீங்களே கொஞ்சம் சொல்லுங்கள் ஐயா!'' என்று கேட்டுவிட்டு மீண்டும் அவள் தொடர்ந்தாள்: ''அவ்வளவு தூரம் கூடப் போக வேண்டாம்; இதோ இந்தக் கடிதத்தை எழுதியிருக்கும் பெண்மணியைப் பற்றி நீங்கள் ஓரளவாவது அறிந்திருக்கலாம் இல்லையா? இவளின் வாழ்க்கையையே உதாரணமாக வைத்துப் பார்த்து என் கேள்விக்குப் பதில் சொல்லுங்களேன்!'' என்றாள்.

குட்டுக்கோலால் தம் முதுகில் யாரோ சுரீலென்று ஓர் இழுப்பு இழுத்தாற்போல் விதிர்ப்படைந்து போன வேதமூர்த்தி அங்குமிங்கும் திருதிருவெனப் பார்த்து விழித்தார்.

மடத்துத் தலைவி பார்வையைத் திருப்பாமலேயே தன் கையிலிருந்த கடிதத்தை அவரிடம் கொடுத்து விட்டு அமைதியாகச் சொன்னாள்: ''இது போன்ற மடங்களில் அநாதையாக வந்து சேரும் குழந்தைகளை வளர்த்து ஆளாக்கிய பின் அவர்கள் எல்லோரையுமே நாங்கள் இங்கு காலமெல்லாம் அடைத்துப் போட்டு வைத்துக்கொண்டு விடுவதில்லை என்பதையும், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு நல்வாழ்வைத் தேடித் தந்து நாங்களே அவர்களை வெளியே அனுப்பி வைக்கிறோம் என்பதையும், அதெல்லாம் எப்படி, என்னென்ன விதி முறைகளோடு நடைபெறுகின்றன என்பதையும் இப்போது உங்களுக்கு விளக்கிச் சொல்லிக்கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. ஓய்விருந்து இன்னொரு தினம் வருவீர்களானால் அவ்விவரங்களை நீங்களே தெரிந்து கொண்டு போகலாம். இப்போதைக்கு நான் சொல்வது என்னவென்றால், நீங்கள் இங்கிருந்து அழைத்துப் போக விரும்பும் அந்தப் புஷ்ப சுகந்தி என்ற பெண்ணை உங்களோடு அனுப்ப இயலாத நிலையில் இருக்கிறேன், அவ்வளவே.''

சில்லிட்டு உறைந்தாற் போன்ற விறைப்புடன் சற்று நேரம் மௌனமாயிருந்தார் வேதமூர்த்தி, பிறகு மெல்ல நிமிர்ந்து, ''என்னோடுதான் அந்தப் பெண்ணை அனுப்ப மாட்டேன் என்கிறீர்கள், சரி! அவளுடைய தாயார் வந்து கேட்டால் அவளுடனாவது அவளை அனுப்புவீர்கள் அல்லவா?'' என்று தயவான குரலில் வினவினார்.

''அதுவும் முடியாது ஐயா!''

''ஏன் சிஸ்டர்?''

''நான்தான் முன்பே உங்களிடம் சொன்னேனே! அதாவது நீங்கள் அவளுக்குத் தேடித் தர விரும்பும் நல்வாழ்வைவிட உயர்ந்ததொரு வாழ்க்கையை நாங்களே நிச்சயித்து விட்டிருக்கிறோம்.''

''நீங்கள் சொல்வதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை...''

''ஆம், ஐயா! அந்தப் பெண்ணை அழைத்துப் போக ஒரு மாதத்துக்கு முன் நீங்கள் இங்கு வந்திருந்தால் அது சாத்தியமாகியிருக்கலாம். நாங்களும் அவளை மகிழ்ச்சியோடு அனுப்பி வைத்திருப்போம். ஆனால் இப்போது முடியாது. காரணம், அவள் இன்னும் சில தினங்களிலே எங்களில் ஒருத்தியாகத் தீட்சை பெற இருக்கிறாள்.''

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்து வெலவெலத்துவிட்ட வேதமூர்த்தி மேற்கொண்டு ஏதும் கேட்கவோ சொல்லவோ தோன்றாமல், அப்படியே திகைத்து நின்று விட்டார்.

அந்தக் கன்னிகா மடத்தின் எங்கோ ஓரிடத்தில் 'சாந்தும் எர்கோ' என்ற இலத்தீன் பாடல் பியானோவில் இசைக்கப்படுவது இலேசாகக் கேட்டது.

''அப்படியானால் சரி, சிஸ்டர்! ஆனால் ஒரு சிறு வேண்டுகோள்....'' என்று தொய்ந்து துவளும் குரலில் இழுத்தார் வேதமூர்த்தி.

''சொல்லுங்கள், ஐயா!''

''அந்தப் பெண்ணை, நான் கொஞ்ச நேரமாவது பார்க்க முடியுமா? அவளிடம் ஓரிரு வார்த்தைகளாவது பேச என்னை அனுமதிப்பீர்களா?''

''மன்னிக்க வேண்டும் ஐயா! இப்போதைக்கு அதுவும் முடியாது. ஏனென்றால் அவள் கன்னிகா ஸ்திரீ

யாகத் தீட்சை பெறுமுன் அநுசரிக்க வேண்டிய ஏழு நாள் 'ரிட்ரீட்'டில்—தியான ஒடுக்கத்தில் — இப்போது இருக்கிறாள். இந்நிலையில் அவளை எவரும் சந்திக்க அநுமதிப்பதற்கில்லை.''

சில நிமிடங்கள் வரை அந்த அறையில் ஆழ்ந்த அமைதி நிலவியது.

தம்மை ஒருவாறு தேற்றிக் கொண்டு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர் போல் அவலப் புன்னகை பூத்தார் வேதமூர்த்தி.

''ஆகட்டும் ஸிஸ்டர்! நான் விடை பெற்றுக் கொள்கிறேன். வி வில் டு அவர் பெஸ்ட்; காட் வில் டு த ரெஸ்ட்!'' என்றவாறு அங்கிருந்து வெளியே நடந்தார்.

இன்னமும் பியானோவில் வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்த அந்த இலத்தீன் பாடல் தொலை தூரத்திலிருந்து மதுர ஓசையாகக் காற்றில் மிதந்து வந்துகொண்டேயிருந்தது. (தொடரும்)

சதி

சிறுகதை தான்; ஆனால் கற்பனைக் காட்சிகள் பெருங் கதை யாக்கிக் காட் டுகின்றன. புது மை இல்லாக் கதைக் கரு என் றாலும் எடுத்த முறை புதுமை.

கோவிந்தன் நாயர் உழைப்பால் உயர்ந்து, தொழி லாளியாயிருந்து முதலாளியான வன். தொழிலாளிக் குப் பரிந்து வரும் தொழிற் சங்கத் தலை வர்களை அண்ட விடாது சாடித் தொழி லாளிகளிடம் தனக் குள்ள அக்கறையை நிலைநாட்ட முயல்பவன்.

ஸதியை மணந்து அவன் இன்பத் தேனிலவு கொண்டாடுவதை—அதில் அவன் காட்டும் ஆர் வத்தைக் கலை நுணுக்கத் தோடு சித்திரித்து ரசிகர் களுக்குக் கிளுகிளுப்பை வழங்கும் கட்டம் 'ஏ'தான்.

ஒரு குழந்தைக்குத் தந்தையாகப் போகிறோம் என்ற மகிழ்ச்சி நிலையிலே, அவன் தன் மனைவியோடு மாமனார் வீட்டுக்கு வருகிறான். வந்த இடத்திலே ஒரு புகைப்படத்தைக் காண்கிறான். 'ஸதிக்கு அன்புடன், கருமாரன் நாயர்' என்று அதில் எழுதியிருப்பதையும்தான். ஐயப் பேய் அவனுள் புகுந்துகொள்ளுகிறது. பலன், கணவன் மனைவியின் உறவிலே அபகாரம் தட்டுகிறது. நிலைகுலைந்த மனத்துடன் தன் வீடு திரும்பியவன் கண்ட காட்சி, அவனுடைய கார் டிரைவர் ஒரு பெண்ணுடன் உறவாடும் காட்சி! அது அவன் மனத்தில் இல்லாத கற்பனையைப் புகுத்தி விடுகிறது. அவர்கள் இருவரும் காதலிப்பதாகவும் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகவும் கூறியும் அவன் மனம் ஏற்கவில்லை; சினந்து சீறி அவளை வேலையை விட்டே நீக்குகிறான், வாழ்க்கையில் அவன் ஒழுக்கத்தை எப்படிக் கடைப்பிடிக்க விரும்புகிறான் என்பதற்கு அத்தாட்சியாக. அதைத் தொடர்ந்து அவன் கண் முன்னே ஒரு காட்சி விரிகிறது: 'கருமாரனும் ஸதியும் கூட இப்படித்தானே....?' அவன் மனத்திரையிலே எழுந்த காட்சியை அப்படியே ரசிகர்களின் கண்களுக்கு விருந்தாகச் சித்திரித்து 'ஏ' முத்திரை பெறுகிறது படம். தனது பிரமையை மெய்யெனக் கருதிக் களவைக் கையோடு கண்டு பிடித்துவிடலாம் என்று அவன் வீட்டுக்கு வந்து தேடி அலையும்பொழுது, தன் மனைவியின் மீது சந்தேகம் கொண்ட அவன் எப்படி மனம் பேதலித்துவிட்டான் என்பதைக்காண முடிகிறது.

ஸதியும் கருமாரனும் பழகிய முறையை 'பிளாஷ்பாக்' உத்தி கவினயத்தோடு சித்திரிப்பதோடு செவிக்கினிய கீதத்தையும் வழங்கி மெய்சிலிர்க்க வைக்கிறது. உச்சகட்டம் நாடகப் பாங்கு மிளிர ஸதியின் தூய்மையை நிலைநாட்டுகிறது. தன் குற்றம் அறியாது பிறர் குற்றம் காணும் கணவன், பெற்ற தந்தை, கருமாரன் ஆகியவர்களைச் சாடும்பொழுது ஸதி ஒரு கண்ணகிதான்; பூஜை அறையிலே அவள் உயிர்விட்ட பொழுது ஒரு 'ஸதி'தான்!

ஸதியாக வரும் ஜயபாரதியின் நடிப்பு கட்டத்துக்குக் கட்டம் மெருகேறி மிளிர்கிறது. கோவிந்தன் நாயராக வரும் மது அவருக்கு இணையாக நடித்து மன உளைச்சலை முகத்தில் தேக்கித் தாம் ஏற்ற பாத்திரத்துக்கு உயிர் ஊட்டுகிறார். கருமாரன் நாயராக வரும் வின்சென்டின் நடிப்பு அவரது காதலைப் போலவே அளவோடு நிற்கிறது. ஆனால் பாஸியின் நடிப்பு நாடக மேடையை நினைவுபடுத்துகிறது!

இசையில் சிறந்து, கற்பனை வளம் கூட்டும் மதுவின் டைரக்ஷனால் பொலிவுறும் இத்திரைப்படம், 'ஏ' சான்றிதழுடன் 'ஏ—ஒன்' சான்றிதழும் பெறுகிறது.

- அக்ஷயம்



பாவம், ராஜு!

பரீந்தர் சிப்யா

"நாளைக்குக் கண்டிப்பா வாங்கிட்டு வர்றேன் சார்!" தற்காப்புக்காகத் தன்னுடைய தலையின் மேல் இரு கைகளையும் போட்டு விரல்களை விரித்து வைத்துக் கொண்ட ராஜு கூவினான்.

வடிவேலு மாமாவின் தோப்பிலிருந்து பறித்துக்கொண்டு வந்த மேடும் பள்ளமுமாக இருக்கும் மூங்கிலை வைத்துக் கொண்டிருக்கும் வாத்தியாரின் கை தாழ்ந்தது. அவனுடைய உடையும் ஒட்டிய வயிறும் அவலக் குரலும் அவரை அப்படிச் செய்யத் தூண்டியிருக்க வேண்டும்.

"நாளைக்கு ஜியாமெட்ரி பாக்ஸோட நீ ஸ்கூலுக்கு வரல்லே, உன்னை நெஜமாகவே பிச்சு எடுத்துடுவேன்; ஜாக்கிரதை!" என்று எச்சரித்துவிட்டு, அழுக்குப் படிந்த மேஜையின் மீது தூசி பறக்கும்படி குச்சியால் தட்டிவிட்டு அன்றைய பாடங்களைக் கவனிக்க ஆரம்பித்தார் வாத்தியார். ராஜு நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.


"ராஜு! வர்றியாடா, போகலாம்!"— அம்முவின் குரல் அவனை மீண்டும் இந்த உலகத்துக்கு இழுத்து வந்தது. புத்தகப் பையை எடுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

"எம் மேலே கோபமாடா உனக்கு?"

"ஒம்மேலேயா... எதுக்கு?"

"நான் சிரிச்சதுக்காக!"

"நீ சிரிக்கிறதைப் பார்க்க நான் கொடுத்து வைச்சிருக்கணுமே! நான் ஏன் கோபப்படணும்?" பொத்தான்கள் பிய்ந்து போயிருந்த டிராயரைத் தூக்கி இடுப்பில் செருகிக் கொண்டபடி ராஜு சொன்னான். அவள் சடாரென்று திரும்பிப் பார்த்தாள். இருவரும் பேசாமல் நடந்தார்கள். கால்வாயைத் தாண்டியவுடன் அவன் சொன்னான்:



''நீ வரவர ரொம்ப ஜாஸ்தியாப் பேசறே!''
அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

''நான் ஏதாவது தப்பாப் பேசிட்டேனா அம்மு?'' என்று அனுதாபத்துடன் கேட்டான் அவன். அவன் பதில் சொல்லவில்லை. அவனுக்கு என்னமோ போலிருந்தது. எனக்கு இருப்பவனே இவன் ஒருத்திதான்! இவனும் கோபித்துக்கொண்டு விட்டால்...?

பாதி மேட்டுநிலத்தைத் தாண்டிய பிறகு அவன் கேட்டான்.

''ராஜு! நாளைக்கு ஜியாமெட்ரி பாக்ஸ் கொண்டு வராதவங்களை நிச்சயம் வாத்தியார் உள்ளே விடமாட்டார். இல்லையா?''

அவனுக்குத் தன்னிடம் கோபமில்லை என்ற நிம்மதியுடன் அவன் சொன்னான்: ''நிச்சயமா விட மாட்டார்! இன்னைக்கே நாம் தப்பிச்சது அதிசயந்தான்.''

''உனக்கு நாளைக்குள்ளார காசு கெடைக்குமா?'' — கண்களில் ஆவல் பொங்கக் கேட்டான் அவன்.

''நிச்சயம் கெடைக்காது! ரெண்டு நாளா சாராயத்துக்கே காசு இல்லாமல் சித்தப்பா

மார்பை அவனுக்குக் காட்டினான் ராஜு. அவனை ஆதரவாக அணைத்தபடி நடந்தான் அம்மு. தன்னால் அவனுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லையே என்ற ஏக்கம் அவனது கண்களில் தெரிந்தது.

''பின்னே நாளைக்குக் கொண்டு வர்றேன்னு வாத்தியார்கிட்டச் சொன்னியே?''

''பொய் சொன்னேன்!''


''ஏன் பொய் சொன்னே?''

''இல்லாட்டா அவர் அடிப்பாரே...!''

''நாளைக்கு உங்க சித்தப்பாவைக் கேட்டா அடிப்பாரே! அதுக்கு என்ன செய்யப் போறே?''

''அப்பப் பாத்துக்கலாம். அதுவரையில் சந்தோஷமா இருக்கலாம் இல்லையா?''

அவன் தன் துயரத்தைக் கண்ணீராய் வெளிப்படுத்தினான். அவன் நாளைக்குச் சித்தப்பாவிடம் பணம் கேட்கப் போகிறான்.. அவர் அடிக்கப் போகிறார்... காலிப் புட்டியால் மார்பில் அடிக்கப் போகிறார்....வாத்தியார் அடிக்கப் போகிறார் மூங்கில் பிரம்பால்..



கோவமா யிருக்கார்! எவக்கு எங்கேயிருந்து பணம் தரப் போறார்?''

''ஒனக்கு அவர் கோவமா இருக்கார்னு எப்படித் தெரியும்?''

''காலி புட்டியாலே காத்தாலே என் மார்புலே படார் படார்னு அடிச்சாரே...! சாதாரணமா அவர் கோபமா யிருந்தா அப்படித்தான் செய்வார்!'' — அழுக்கேறி அங்கும் இங்குமாகத் தொங்கிக் கொண்டிருந்த தன் சட்டையைத் தூக்கிப் பெருமையுடன் தன்

நாளைக்குச் சாயங்காலம் வீட்டுக்குத் திரும்பும்போது தன் காயங்களை அவன் அவளிடம் பெருமையுடன் காட்டப் போகிறான்... அவனுடைய தொண்டையை எதுவோ அடைத்துக்கொண்டது மாதிரி இருந்தது. நிமிர்ந்து ராஜுவைப் பார்த்தான். அவன் [illegible]. தன் உடம்புக்கு வரப் போகிற ஆபத்தைக் கொஞ்சம்கூட உணராதவனாய் மேட்டில் கிடந்த ஒரு கல்லை எடுத்து அதைப் பலம் கொண்ட மட்டும் வீசி எறிந்துவிட்டு அது

எவ்வளவு தூரம் போகிறது என்று ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

தன் வீடு நெருங்குவதை உணர்ந்த அவன் ஒரு முடிவுடன் சொன்னான்:

''ராஜு! நீ நாளைக்கு ஒங்க சித்தப்பா கிட்ட ஜியாமெட்ரி பாக்ஸ் கேக்காதே! நான் எப்படியாவது எங்கம்மா கிட்டே சண்டை புடிச்சு ஒரு பாக்ஸ் வாங்கிடறேன்.''

''சரி! அப்புறம்?''

''ஆத்துலே விழுந்து செத்துப் போனாளே எங்க அக்கா ராதா? அவளோட காலி பாக்ஸும் எங்க வீட்டுல எங்கேயோ இருக்கு. அதைத் தேடி எடுத்து உனக்குத் தரேன். கொஞ்சம் நசுங்கிப் போயிருக்கும்! பரவாயில்லே வைச்சுக்கோ! அப்புறம் என்னோட ரப்பர்லே பாதியைப் பிச்சு ஒனக்குத் தரேன். புது பாக்ஸ்லேந்து ஒரு செட் ஸ்கொயர் தரேன். அப்புறம்.... எங்கிட்ட முன்னே இருந்தது இல்லே, நீலமும் செப்பும் கலந்த ஒரு புழுக்கைப் பென்சில்? அது ரெண்டு நாளைக்கு முன்னாலே நான் ஓடி வர்றப்போ தகர டப்பாக்களுக்குப் பக்கத்துல எங்கயோ விழுந்திருக்கு! அதையும் தேடி எடுத்து வைக்கறேன் ஒனக்காக! அப்புறம்...'' என்று அவசரம் அவசரமாக இழுத்தவன் கொஞ்சம் யோசித்துவிட்டு, ''இவ்வளவுதான்டா! போறுமா?'' என்றான். ராஜு தலையைத் தூக்கி அவனை நன்றியுடன் பார்த்தான். அம்முவுக்குச் சந்தோஷமாய் இருந்தது. தன்னுடைய உயிர்த் தோழனை ஆபத்திலிருந்து காப்பாற்றிவிட்டானே! இருக்காதா?

மறுநாள் திட்டமிட்டபடியே செய்தான் அம்மு. இரண்டு பேருமே சந்தோஷத்துடன் பள்ளிக்குச் சென்றனர். ஆனால் இது ரொம்ப நேரம் நீடிக்கவில்லை. எல்லாப் பசங்களும் ஜியாமெட்ரி பாக்ஸ் கொண்டு வந்திருக்கிறார்களா என்று பார்த்து, கொண்டு வராதவர்களை மூங்கிலால் அடித்துத் துரத்திவிட்டுப் பாடங்களைக் கவனிக்க ஆரம்பித்த வாத்தியார் அம்முவிடம் ஒரு கேள்வி கேட்டார். அவனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. இரண்டு மூன்று கேள்விகள் தொடர்ந்து கேட்டார். அம்மு விழித்தபடி இருந்தான். முந்தைய நாள் நடத்திய பாடத்திலிருந்து கேள்விகள் கேட்டார். அவனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. அவ்வளவுதான்! கோபம் வந்து விட்டது வாத்தியாருக்கு! ''மூணு வருஷமா இதே கிளாஸ்லே படிக்கறே, ஒரு கேள்விக்கும் பதில் சொல்லத் தெரியலேயே! கல்யாணம் பண்ற வயசாச்சு! படிப்பு ஏறலேன்னாக் கல்யாணம் பண்ணிக்கிட்டு எங்கேயாவது போய்த் தொலையறதுதானே... இங்கே வந்து என் உயிரை ஏன் வாங்கறே?'' என்று கத்தியபடியே 'சுரீர் சுரீர்' என்று அம்முவை மூங்கிலால் அடித்தார். ராஜு துடித்துப் போய்விட்டான்.

சாயங்காலம் இருவரும் திரும்பி வந்து கொண்டிருக்கையில் அம்மு சொன்னான்:

''அவர் அடிச்சதுகூட என்னை ஒன்னும் பண்ணலே. அவர் திட்டினதும் பெரிசாப் படலே. அவர் நம்மைவிடப் பெரியவர்; நமக்கு வாத்தியார். பசங்கயெல்லாம் ஒண்ணாச் சேர்ந்து என்னைக் கேலி பண்றாங்கடா! அதுதான் எனக்குக் கஷ்டமாயிருக்கு!'' அவன் குரல் தணிந்து கொண்டே வந்தது.

''பசங்களா?''

''ஆமாண்டா!''

''நான் பார்க்கவே யில்லையே!''

''நீ காம்போஸிஷன் நோட்டுப் புஸ்தகங்களைத் தூக்கிக் கொண்டு வாத்தியார் பின்னாலே போயிட்டேல்லே — அந்தச் சமயமாப் பார்த்து!''

ஒருவித வெறியுடன் ராஜு பற்களைக் கடித்தான்! பொட்டைப் பசங்கள்! நான் இல்லாத சமயமாகப் பார்த்து இவனைக் கேலி பண்ணியிருக்கிறார்கள்.

''யாரு, யாரு உன்னைக்கேலி பண்ணினது?''

''ஏன் கேக்கறே?'' — எங்கே அவர்களை அடித்து இவன் மாட்டிக் கொண்டுவிடுவானோ என்ற பயத்துடன் கேட்டான் அம்மு.

''சும்மாதான் கேட்டேன்!''

''தும்முன்னு டிரஸ் பண்ணிண்டு ரெண்டாம் பெஞ்சுலே இருப்பானே ஒரு பணக்காரப் பையன். பேரு கூட....''

''மோகனா?''

''ஆங்... அவன்தான். அவனும் அவன்கூட இருக்கிற பசங்களும் என்னைச் சுத்திச் சுத்தி வந்து கலாட்டாப் பண்றாங்க!''

ராஜுவுக்குப் பொறுக்க முடியவில்லை. பொறுக்கிப் பையன்! அவன் இவனைவிட மக்கு! இந்த அழகில் கலாட்டா வேறேயா?

''இந்தா அம்மு, பென்சிலைக் கிளாஸிலேயே விட்டுட்டு வந்துட்டேன். நீ போயிண்டே இரு! இதோ வந்துடறேன்!'' என்றபடி அவனிடம் தன் புத்தகங்களைத் திணித்துவிட்டு வந்த திசையில் திரும்ப ஓடினான்.

இன்றைக்குக் காரில் வரவில்லை மோகன். அதனால் நிச்சயம் கால்வாய்ப் பக்கமாகத் தான் வருவான். பார்க்கலாம் ஒரு கை!

அவன் நம்பிக்கை வீண் போகவில்லை. தூரத்தில் மோகன் தன் நண்பர்களுடன் வந்து கொண்டிருந்தான். ஒரே மூச்சில் அவர்களைப் பிடித்தான் ராஜு.

''எலேய்! நில்லுடா!''

''பணக்காரப் பையன்னா என்ன வேணு மின்னாலும் பேசலாம்னு நெனைச்சயா? இனி பேசுவியா அப்படி?... பேசுவியா? பேச மாட்டேன்னு சொல்லு... சொல்லுடா கழுதை!'' அவன் ஓயவே யில்லை, அடித்துக்கொண்டே யிருந்தான்.

''இனிமே அவனைக் கிண்டல்பண்ணுவியா?''

'ஓ....ஓ...' வென்று அழுதபடியே 'மாட்டேன்!' என்று தலையசைத்தான் மோகன்.

ராஜுவின் ஆத்திரம் ஒரு வழியாகத் தணிந்தது. 'பொறுக்கிப் பயலே!' என்று உறுமியபடி அவனை விட்டான். மீதியிருந்த பையன்கள் அவனுக்கு வழிவிட்டு மரியாதையுடன் நின்றார்கள். ராஜு திரும்பவும் ஓடயத்தனித்தவன் திரும்ப வந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பையன் ஒருவனின் சைக்கிளைத் தன் பக்கமாக இழுத்துக் கொண்டான்.

''எ...எங்க..மாமா வாங்கிக் கொடுத்தது. எரநூறு ரூவா! சைக்கிள் எங்கடான்னு அடிப்பார்! ரொ... ரொம்பப் புதுசு!'' — பையன் அழுதே விட்டான்!

''சீ கழுதை! ஒன் சைக்கிள் யாருக்கு வேணும்? நீ பின்னாலே ஒக்காந்துக்கோ! டபிள்ஸ் அடிக்கறேன்! இல்லேன்னா என்னால அம்முவைப் பிடிக்க முடியாது!''

'இதோடு விட்டானே!' என்ற நிம்மதியுடன் பையன் கேரியரோடு ஒட்டிக் கொண்டான்.

அவன் அவ்வளவு வேகமாகத் திரும்பி வந்த போதும் ரொம்ப தூரம் வந்து விட்டாள் அம்மு!

''பென்சில் கிடைச்சுதாடா?''

''பென்சிலா?...'' — கேரியரிலிருந்து குரல் கொடுத்த பையனைக் கண்ணாலேயே அடக்கினான் ராஜு.

''ஓ! கெடைச்சுதே! இவன் பொஞ்சுக்குக் கீழே இருந்தது!''

''இன்னிக்கும் பாண்டியாட வர்றியா?''

''நான்தான் தினம் உங்க வீட்டுக்கு வர்றேன்! நீ எங்க வீட்டுக்கு வந்து ரொம்ப நாளாச்சு! வர்றியா?''

அம்மு கொஞ்ச நேரம் யோசித்தாள். அதற்குள் சைக்கிள் பையன் சைக்கிளோடு பறந்தே விட்டான்.

''சரி! நான் வரேன் வா! போகலாம்'' என்றபடி முன்னால் நடக்க ஆரம்பித்தாள்.

''ஒங்கம்மாகிட்ட சொல்லிட்டு வந்துவிடேன்!''

''சீ,சீ! உள்ள போனா என்னால திரும்பி வர முடியாது! போயிட்டு வந்தப்புறம் சொல்லிக்கிறேன்!''

இருவரும் பேசியபடியே நடந்தார்கள். வழியில் வடிவேலு மாமா தோப்பில் புளியங்காய் பறித்து அம்முவுக்குக் கொடுத்துத் தானும் எடுத்துக் கொண்டான் ராஜு.

''என்னடா பயலே! இப்பத்தான் வர்றியா?'' என்று வழியிலேயே அவனை மடக்கினார் வடிவேலு மாமா.

''ஆமாம் மாமா! மாமா! ரெண்டு பேருக்கும் ஒரே பசி. மாங்காய் பறிச்சுக்கட்டுமா?''

''நீ பறிக்காதே! கீழே விழுந்து தொலைக்கப் போறே! எழுமலைகிட்ட நான் சொன்னேன்னு சொல்லி வாங்கிக்கோ!''

குடையை விரித்துத் தலைக்கு மேலே பிடித்தபடி அவர் போய்விட்டார்! சாயங்காலவேளை வெய்யில்கூடத் தாங்காது அவருக்கு. தலைவலி வந்துவிடும்!

எழுமலை கொடுத்த மாங்காய் நேரம் போவதே தெரியாமல் இரண்டு பேரும் விளையாட உதவியது. 'மணி எட்டிருக்கு



வித்வான் சிஷ்யனிடம்: ரேடியோவில் பாடுபவனுக்கு முக்கியமா கற்பனை அதிகமாக வேண்டும். நம்ப சங்கீதத்தை லட்சோப லட்சம் ஜனங்கள் கேட்டுண்டிருக்கா என்கிற கற்பனைதான்!

மேலிருக்கும் போலிருக்குதே!' என்று ஒரு கூலிக்காரன் முனகிக்கொண்டே ஓடுவதைக் கண்ட அம்மு பயந்து விட்டாள். ''அய்யய்யோ! எட்டு மணியா? அம்மா கத்துவாளே! ரெண்டு பர்லாங் வேறே நடக்கணும்! ராஜு கொஞ்சம் தண்ணி கொடுடா. நான் போறேன்!'' என்று கூவிக்கொண்டே கையில் கிடைத்த புத்தகங்களை வாரிக் கொண்டு, ராஜுவின் வீட்டை நோக்கி ஓடினாள். அவனும் பின்தொடர்ந்தான்.

ராஜு வீட்டில் அம்முவின் அம்மாவே இருப்பதைக் கண்டார்கள் இருவரும்.

''அம்மா... நேரம் போனதே தெரியல்லே. அப்பவே வரணும்னு நெனச்சேன்...'' என்று அசடுவழியச் சிரித்துக்கொண்டே இளித்தவள், ''நீ சாப்பிட்டாச்சா அம்மா?'' என்றும் கேட்டு வைத்தாள். உச்சி குளிர்ந்து விட்டது அம்மாவுக்கு!

''என்டா, இப்படியா நேரம் போறதே தெரியாம விளையாடறது!'' என்று ராஜுவை மிரட்டினார் சித்தப்பா. இரண்டு பேரும் போன பிறகு தனக்கு என்ன தண்டனை கிடைக்கும் என்ற யோசனையில் ஆழ்ந்தான் ராஜு.

''சரி! போகிறேன்! சிறிசுதானே, விடுங்கள்'' என்று அவருக்குச் சமாதானம் சொல்லிவிட்டு ''அப்ப நான் வரட்டுமா?'' என்றாள் அம்முவின் அம்மா.

''அய்யய்யோ!'' — திடீரென்று கூவினாள் அம்மு. ''கணக்கு நோட்டை அங்கேயே விட்டுட்டேனே!''

''அவ்வளவுதானே? இரு நான் போய் எடுத்து வரேன்!'' என்றாஓட ஆரம்பித்தான் ராஜு.

''இருடா, நானும் துணைக்கு வர்றேன்'' என்றபடி அம்முவும் ஓடினாள்.

''இந்தாடி அம்மு! கணக்குப் போட்டதைக் கத்தை எடுத்துண்டு சீக்கிரமா நேரே வீட்

டுக்கு வந்து சேரு! நான் இவரோட கொஞ்ச நாழி பேசிட்டுப் பொறப்படறேன்!'' என்று அம்முவின் அம்மா கூவினாள்.

பழையதைப் பிழிந்து மோரையும் ஊற்றி அம்மு சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது அவள் அம்மா கேட்டாள்:

''ஏண்டீ! அந்தப் பையனுக்கு அம்மா கிடையாதா?''

''கிடையாது! அப்பாவும் கிடையாது! இருக்கிறதெல்லாம் சித்தப்பாதான்!''

''ஓஹோ...'' என்று முனகிவிட்டுப் பெருமூச்செறிந்தாள் அம்மா.

''ஏண்டி! அவருக்குக் குடி, சிகரெட்டு எல்லாம் உண்டு போலிருக்கே!''

''குடிக்காட்டித் தூக்கமே வராது அவருக்கு!''

''பரவாயில்லே! ஆம்பிளைதானே!'' என்றாள் அம்மா. இந்தச் சமாதானம் யாருக்கு என்று புரியவில்லை அம்முவுக்கு.

''அவருக்குக் கல்யாணம் ஆச்சா?''

''ஓ! ரெண்டு வருஷங்களுக்கு முன்னால் தான் பெண்டாட்டி செத்துப் போனாளாம்!''

அம்மா மேலே எதுவும் கேட்கவில்லை. மேல் கூரையையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தவள் தூங்கிப் போய்விட்டாள்.

ராஜுவுக்கு ஆச்சரியமாகப் போய் விட்டது. சித்தப்பா அவனை இப்போதெல்லாம் அடிப்பதே கிடையாது. புது டிராயர், புதுச் செருப்பு, புதுப் பை எல்லாம் வாங்கிக் கொடுத்தார். தம் கையாலேயே சாதம் பிசைந்து அவனுக்கு ஊட்டி மகிழ்ந்தார். வீட்டுக் கணக்கை யெல்லாம் போட்டுக் கொடுத்தார். பள்ளிக்கூடம் போகும்போது அவன் கையில் ஏதாவது கொடுத்து அனுப்பி வைத்தார்.

அவன் திக்கு முக்காடிப் போய்விட்டான். ஏதேது! செத்துப்போன அம்மாவை மிஞ்சி விடுவார் போலிருக்கிறதே! அவர் தோற்றத்திலும் மாறுதல் இருந்தது. அழுக்கு வேட்டிகளையும் கிழிந்த வேட்டிகளையும் தூக்கி எறிந்து விட்டு நல்ல கைலியாகக் கட்டிக் கொண்டார். வாய் நிறைய வெற்றிலை போட்டுக் கொண்டார். தலையை அழகாகச் சீவி விட்டுக்கொண்டார்.

''ஏலேய்! ராஜு! இங்கே கொஞ்சம் வாயேன்!'' பள்ளிக்கூடம் புறப்பட எத்தனித்தவனைச் சித்தப்பாவின் குரல் தடுத்து அழைத்தது.

அவன் எதிரில் போய் நின்றான்.

''திரும்பி வரும்போது அம்மு வீட்டு வழியாகத்தானே வருவே?''

''ஆமா!''

''அம்மு அம்மாவைப் பார்ப்பேயில்லே?''

''பார்ப்பேன்! 'இன்னிக்கும் ஒங்களைச் சித்தப்பா வரச்சொன்னார்'னு சொல்லட்டா?''

''கோயில்லே திருவிழா நடக்குதாம். பார்க்கவே முடியலேன்னு சொன்னா! இங்கே வரச் சொல்லு. நான் கூட்டிக்கிட்டுப் போறேன்னு சொல்லு. சொல்லுவியா?''

''சொல்றேன் சித்தப்பா!'' என்று கூவிய படியே குதித்து ஓடினான் ராஜு. அவன் மனமும் குதித்துக் கொண்டிருந்தது. 'இன்னைக்கும் சித்தப்பாவும் அம்மு அம்மாவும் வெளியே எங்கேயாவது போயிடுவாங்க! நானும் அம்முவும் ஜாலியா விளையாடலாம்! இன்னைக்கும் கண்ணாமூச்சி ஆடலாமா? சீ,சீ! வேணாம். நேத்தி விளையாடிட்டமே! இன்னைக்கும் வாணாம். பாண்டி ஆடலாம். பல்லாங்குழி ஆடலாம். நாளைக்கு வேணும்னா கண்ணாமூச்சி ஆடலாம்.'

இரவு ஏழு மணி இருக்கும். இருவரும் பல்லாங்குழி ஆடிக் கொண்டிருந்தார்கள்.

''ஏண்டா உங்க சித்தப்பா திடீர்னு மாறி விட்டார்?'' — அவள் கேட்டாள்.

''நெலத்தை வித்த பணம் கைக்கு வந்தாச்சாம். ரெண்டு நாளைக்கு முன்னாலே நான் கேட்டப்பச் சொன்னார். இனிமேல் கஷ்டப் பட வேணாம்னு சொன்னார்!''

''பணம் கைக்கு வந்ததுதான் காரணமா?''

''பின்னே என்னவாம்?''

அவள் பதில் பேசவில்லை. சுவாரசியமின்றிக் கொஞ்ச நேரம் விளையாடிக்கொண்டிருந்தவள் அவனிடம் விடைபெற்றுச் சென்றுவிட்டாள்.

இரவு பத்து மணி. எங்கேயோ போய் விட்டு வீட்டுக்குச் சோர்வுடன் வந்தாள் அம்முவின் அம்மா.

''அம்மா! ஏது அது?''

''எதுடீ?''

''அதான். நீ கட்டிண்டிருக்கியே அந்தப் புதுப் புடவை?''

''ராஜுவின் சித்தப்பா வாங்கித் தந்தார்டீ! பாவம், நாம கஷ்டப்படறதைப் பார்க்க அவருக்குச் சகிக்கலே! நல்லா இருக்கா?'' என்று ஆவலுடன் கேட்டாள் அம்மா.

''அது கெடக்கட்டும்! இதோ கதவு மேலே இருக்கே... இது? இந்தப் பொடவை?''

''மாத்துப் பொடவைடீ! அதுவும் அவர் வாங்கித் தந்ததுதான்!''

''காத்தாலே பெருங்காய டப்பிலே அம்பது ரூவா பார்த்தேனே! ஏது அவ்வளவு பணம்?''

''அதுவும் அவர்தான்டி தந்தார். ஒனக்கும் ஏதாவது வேணும்னா சொல்லு! அவர் கிட்டே சொல்லி வாங்கித் தரச்சொல்றேன்.''

''எல்லாம் அவர்... அவர்...அவர்தானா?'' வெடித்தாள் மகள்.

நான்கைந்து நாட்களாக அம்மு பள்ளிக்கூடத்துக்கு வரவேயில்லை! ராஜுவும் 'இதோ வருவாள்! வந்து விடுவாள்! கண்டிப்பாக வந்துவிடுவாள்' என்று காத்திருந்து அலுத்து விட்டான். வழக்கப்படி வாத்தியார் சொன்ன எதுவுமே அவன் மண்டையில் ஏறவில்லை. பரீட்சை வேறு நெருங்கிக் கொண்டிருந்தது. அவன் அப்பொழுதுதான் முதல் முறையாகப் பரீட்சைக்காகப் படித்துக் கொண்டிருந்தான். அதனால் விளையாட்டை யெல்லாம் மறக்க வேண்டியிருந்தது. அம்மு வீட்டுக்குப் போக நேரமில்லை.

கடைசியில் பொறுக்காதவனாய் வாத்தியாரிடம், 'தலைவலி' என்று சொல்லி மத்தி

யானமே புறப்பட்டு விட்டான். நேரே அம்முவின் வீட்டுக்கு ஓடினுன். அம்...அம்மு! அதோ அம்மு! என்ன இது? ஏன் இவள் இப்படி மாறிவிட்டாள்? முகம் ஏன் இவ்வளவு வாட்டமாய் இருக்கிறது? கண்ணிலே குழி விழுந்து அழுக்குச் சட்டையும் பாவாடையுமாய்... என்ன வந்து விட்டது அவளுக்கு?

அவனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

''அம்.... அம்மு.... அம்மு!....'' விம்மினுன் அவன்.

''ராஜு! நான் இனிமேல் ஸ்கூலுக்கு வர மாட்டேன்!''

''ஏன்?''

''நானும் அம்மாவும் ஊரை விட்டே போகப் போறோம்.'' — எங்கோ பார்த்தபடி சொன்னுள் அவள்.

''என்னை விட்டுட்டா போறே?'' — தேம்பினுன் அவன்.

''நான் எங்கே போனுலும் உன்னைமட்டும் மறக்கவே மாட்டேன்!''

அத்தனை சோகத்துக்கிடையிலும் அவள் அவ்வாறு சொன்னது அவனுக்குக் கொஞ்சம் ஆறுதலாய் இருந்தது.

''ஏன்டீ திடீர்னு?''

''நான்தான் போகவே ஏற்பாடு பண்ணினேன்.''

''நீயா? ஏன்டீ?''

''எங்கம்மாவோட போக்கு எனக்குப் பிடிக்கலே. அரக்கோணத்திலே இருக்கார்னு சொல்லியிருக்கேனே எங்க அம்மாவோட தம்பி... அதான்டா நட்டு மாமா. அவருக்குக் கடுதாசி எழுதினேன். ரெண்டு நாளைக்கு முன்னுலே வந்து எங்கம்மாவைக் கன்னு பின்னுன்னு திட்டினுர். ரெண்டு பேருக்கும் ரயில் சார்ஜ் கொடுத்து வரச் சொல்லிட்டுப் போயிட்டார். நாளைக்குப் போறதா யிருக்கோம். இன்னிக்கு ராத்திரி உங்கிட்ட வந்து சொல்லலாம்னு இருந்தேன். அதுக்குள்ளே நீயே வந்துட்டே.''

''ஒங்கம்மா புதுப் புடவையும் ரவிக்கையுமா நல்லாத்தானே இருக்கா? என்னைக்கூட வந்து கொஞ்சுவாளே! ஒனக்கு ஏன்டி அவளைப் பிடிக்கலே?''

காட்டுப் பூவைப் பிடுங்கி அவன் டிராயர் பையில் திணித்தபடி சொன்னுள் அவள்:

''அதெல்லாம் ஒனக்கு இப்ப சொன்னுலும் புரியாது!''

ராஜுவுக்குக் கோபம் கோபமாக வந்தது. பெரிய மனுஷி மாதிரி பேசுகிறுளே நம்ம அம்முகூட! ஆனுல் அம்முவை நிரந்தரமாகப் பிரியப் போகிறோம் என்ற நினைவு வந்தவுடன் அவன் வயிற்றை ஏதோ கலக்கியது.

''திரும்பி வரவே மாட்டியாடீ?'' — கண்களில் ஏக்கத்துடன் கேட்டான் அவன்.

''எப்படிடா வர முடியும்? ஆனுல் அங்கேயிருந்தே கடுதாசி எழுதறேன். நீயும் எழுது!''

''நான் பெரியவனுகிப் பணம் சேர்த்தப்புறம் உன்னை வந்து பார்க்கட்டுமா? உன்னை என்னேட கூட்டி வந்துடட்டுமா?''

அம்மு சோகமாய்ச் சிரித்தபடி அவன் கன்னத்தைக் கிள்ளினுள். அவனுக்குத் தின்பண்டங்கள் வாங்கித் தந்ததோடு கையில் ஒரு ஐந்து ரூபாயைத் திணித்து ''ஒங்க சித்தப்பா எதுவும் தராமல் இருக்கும்போது ஏதாவது வாங்கிக்கோ; பட்டினி கிடக்காதே!'' என்று சொன்னுள். ''முடிஞ்சா நாளைக்கு வர்றேன். இல்லேன்னு போயி கடிதாக எழுதறேன். என்னை மறக்காம இரு! நானும் உன்னை மறக்க மாட்டேன்!'' என்று கண்ணீரைத் துடைத்தபடி கூறி வழியனுப்பி வைத்தாள். இரண்டு பேருக்கும் தாங்க முடியாத அளவுக்குத் துக்கம். மனத்துக்குள் அழுதபடியே இருவரும் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு வெவ்வேறு திசையில் சென்றனர்.

சித்தப்பாவுக்கு எப்படியோ விஷயம் தெரிந்து விட்டது. ராஜு சொல்லவே யில்லை. எப்படித் தெரிந்தது என்றும் புரியவில்லை. 'ஓடிவிட்டானே பாவி! பணத்தைக் கொட்டினேனே! ஏமாற்றி விட்டானே பாவி!' என்று ஓயாது புலம்பிக் கொண்டிருந்தார். நிலம் விற்று வந்த பணத்தை அவளுடன் சேர்ந்து செலவழித்து விட்டார் என்ற விஷயம் கொஞ்சம் கொஞ்சமாய்த் தெரிந்தது. கடைசியில் மறுபடியும் பாட்டில்! ராஜுவுக்கு மறுபடியும் காலி பாட்டில் அடி! வாத்தியாரின் மூங்கில் அடி! பணக்காரப் பையனை அடித்ததற்காகத் தலைமை ஆசிரியரிடமிருந்து அடி! மறுபடியும் ஒட்டிய வயிறு! மறுபடியும் பசி!

எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ள முடிந்தது அந்தப் பிஞ்சு உள்ளத்தால் — ஒன்றைத் தவிர! வாத்தியார் அடித்தால் ஆறுதல் சொல்ல அம்மு இல்லையே!

ரேகா அனந்த் பாய் — ராம் வாயீர்கர்





சமுதாய விரோதிகள்!

சேவலம் மூட்டைப் பூச்சிதானே என்று அலட்சியம் செய்துவிட முடிகிறதா? இரத்தத்தை உறிஞ்சுவதோடு இரவு முழுவதும் கண் மூடவொட்டாமல், 'சிவராத்திரி' ஆக்கி விடுகிறதே? கடைகளில் விற்கும் மருந்துகளைப் பயன்படுத்தி இவைகளை ஓரளவு ஒழித்துக் கட்டிவிடலாம். ஆனால் எங்கேயாவது ஒரு மூலையில் ஒன்றிரண்டு மூட்டையார் தங்கி விட்டாலோ? ஒவ்வொன்றும் 200, 300 முட்டைகள் இடும் வல்லமை படைத்தவை! இரண்டு அல்லது மூன்று வாரங்களில் முட்டைகள் குஞ்சு பொரித்துவிடும். உணவே இல்லாமல் ஓராண்டு உயிரோடு இருக்கக்கூடும், மூட்டைப் பூச்சி! ஆகவே இவை பல்கிப் பெருகிப் பிராணனை வாங்குவதில் வியப்பென்ன?

கரப்பான்களும் இரவில் சஞ்சரிப்பவையே. பிளாட்டாலா ஜெர்மானிகா என்ற வகை, உருவத்தில் சிறியது. குளிர்பதனப் பெட்டிக்குள்ளேகூட நுழைந்துவிடும். ஓரியண்டலிஸ், அமெரிக்கானா என்ற பல்வேறு வகைப்பட்ட இக்கரப்பான் இனம் இருபது கோடி ஆண்டுகளுக்கு முன்பே மிருதியாக இருந்ததாகக் கூறப்படுகிறது! பகல் முழுவதும் சாக்கடைகளிலும், 'மான்ஹோல்' போன்ற மறைவிடங்களிலும் பதுங்கி வாழும் இவை இரவில் வெளிப்பட்டு நம் உணவை அசுத்தப்படுத்தும். மஞ்சள்காமாலை, சீதபேதி, டைபாய்டு போன்ற நோய்கள் பரவ இவை காரணமாகின்றன.

உணவு அமைச்சரின் முதல் எதிரி எலிதான் என்றால் மிகையாகாது. ஆறு எலிகள் ஒரு மனிதனின் உணவைப் புசித்துவிடும். நாட்டில் உற்பத்தியாகும் உணவில் சராசரி 20



சதவிகிதம் எலிகளுக்குப் பலியாகி விடுவதாகக் கூறப்படுகிறது. ஏன் ஆகாது? ஒரு ஜோடி எலிகள் ஆண்டுக்குச் சுமார் 800 முதல் 900 எலிக் குஞ்சுகள் வரை உற்பத்தி செய்கின்றனவே! சுண்டெலிகள் வீட்டிலிருந்து சுமார் இருபது கெஜ தூரத்திலேயே பதுங்கி வாழ்பவை. ஆனால் சாதாரண எலிகள் சுமார் ஒரு மைல் தொலைவிலிருந்து தினமும் நம் வீடு தேடி வரும். ஒரு வீட்டில் இரவு நேரங்களில் மட்டும் எலிகள் தென்பட்டால் அங்கு சுமார் 100 எலிகள் உள்ளதாகக் கருதலாம். பகல் நேரத்திலும் எலிகள் ஓடி விளையாடினால் அங்கு 500 முதல் 1000 எலிகள் வரை உள்ளன என்று தீர்மானிக்கலாம். நீர்க் குழாய்களில் 40 அடி உயரம் வரை ஏறிச் செல்லும் ஆற்றல் படைத்தவை எலிகள். விதம் விதமான 130 வியாதிகள் எலிகளால் பரவுவதாகக் கூறப்படுகிறது. எலிகளை விஷம் வைத்துக் கொன்றுவிடுவது எளிதன்று. உணவில் விஷம் ஒளித்து வைக்கப்பட்டுள்ளது என்று எலிக்குத் தெரிந்து

தண்டவாளத்தினைக் கழற்றி ரயில் கவிழ ஏற்பாடு செய்பவன், தெரு விளக்கில் உள்ள டியூப் லைட்டுகளைக் கழற்றிக் கொண்டு போய் விற்பவன் போன்றவர்கள் மட்டுமல்ல சமுதாய விரோதிகள்! மனித இனத்தைச் சேராத சமுதாய விரோதிகளும் உண்டு!



விட்டால் அது அந்த உணவைத் தின்னாது. அதுமட்டுமல்ல; அந்த வட்டாரத்திலுள்ள எல்லா எலிகளையும் எச்சரித்துவிடும்!

மழை காலத்தில் விளக்கருகில் ஈசல்கள் கூட்டம் கூட்டமாகப் பறப்பதைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? பல்லிகளுக்கு வேட்டைதான்! சில கஜ தூரம் ஈசல்கள் பறந்த பின் அவற்றின் இறக்கைகள் உதிர்ந்து விடும். நிலைப்படி, சாளரம், மரங்கள் இவைகளில் நுழைந்துவிடும். இவையே கரையான். கடுகளவு உள்ளதுதான் கரையான். ஆனால் மரங்களையும் மரச் சாமான்களையும் எவ்வளவு விரைவில் நாசம் செய்துவிடுகின்றன! 'ராணி' கரையான் இருக்கிறதே — அது கட்டை விரல் அளவு பெரிதாக இருக்கும்! நிமிடத்துக்கு ஒன்றுவீதம் முட்டையிடும் 'ராணி', சுமார் ஐம்பது ஆண்டுகள் வரை உயிரோடு இருக்குமாம்! இனப் பெருக்கத்தின் அளவினை இதிலிருந்து ஒருவாறு உணரலாம்.

டிரான்ஸெண்ட் பெஸ்ட் கண்ட்ரோல் நிறுவனத்தினர் கூறக் கேட்டு எழுதியவர்: ரா. பா.



பாத்திரம்

ரம்யா

அன்று வந்திருந்த ''ஈவ்ஸ் வீக்லி''யை நிதானமாகப் புரட்டினாள் விசாலம். அவள் ஆவலுடன் படிக்கும் சமையல் குறிப்புப் பகுதியைத் தேடினாள். அங்கே அவளுக்கு ஓர் இனிய அதிர்ச்சி காத்திருந்தது!

''அட, நம் மிருணாளினியா?'' என்று முணுமுணுத்தாள். வாசல் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. முழுவதும் படிக்க முடியாதபடி செய்யும் இந்தத் தொந்தரவினால் சலித்துக்கொண்டே அவள் எழுந்து போனாள்.

அங்கேயும் ஓர் எதிர்பாராத மகிழ்ச்சி! மிருணாளினிதான் கையில் அதே பத்திரிகையோடு வந்திருந்தாள்.

''வா மிருணாளினி. உனக்கு ஆயுசு நூறு. இப்பொழுதுதான் உன் புகைப்படத்தைப் பத்திரிகையில் பார்த்தேன். கன்கிராட்ஸ்!'' என்று இதமாகக் கைகளைக் குலுக்கினாள் விசாலம்.

''ரொம்ப நன்றி. நான்கூட எதிர்பார்க்கவே யில்லே, பரிசு கிடைக்கும்னு. கொத்தமல்லி பஜ்ஜியைப் பற்றி நான் எழுதியதைப் படித்தாயா?'' என ஆவலாகக் கேட்டாள் மிருணாளினி.

''இன்னும் படிக்கவில்லை. போன வாரம் கூட ஏதோ...''

''ஆமாம் விசாலம்! என் கடிதம் ஒன்று வெளிவந்திருக்கிறது. வேலைக்காரிகள் கிடைப்பது எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது என்பதைப் பற்றி எழுதியிருந்தேன்'' என்றாள் மிருணாளினி.

''ஆமாம். வேலைக்காரி என்றதும் ஞாபகம் வந்துவிட்டது. கொஞ்சம் இரு. என் வீட்டு வேலைக்காரியை அனுப்பிவிட்டு வருகிறேன்'' என்றவள், ''மீனாட்சி, மீனாட்சி!'' என்று குரல் கொடுத்தாள்.

''இதோ வந்துவிட்டேன்'' என்று ஓடோடியும் வந்தாள் மீனாட்சி.

''இந்த 'ஸ்டவ்'வை எடுத்துக் கொண்டு போய்ப் பாரதி தெருவிலே இருக்கிற ரிப்பேர்க்காரனிடம் கொடு. இது ரொம்பத் தொந்தரவு கொடுக்கிறது. சாயங்காலம் நான் காசு கொடுக்கிறேன் என்று சொல்.''

ஸ்டவ்வைப் பெற்றுக் கொண்டு நகர்ந்தாள் மீனாட்சி. பாத்திரங்களைத் தேய்ப்பதும் இரண்டு தொட்டிகளுக்கு நீர் நிரப்புவதும் தான் அவளுடைய வேலைகள்.

விருந்தாளி வந்திருக்கும்போது இது மாதிரிச் சில்லறை வேலைகளுக்குப் போக மாட்டேன் என்று சண்டை பிடிப்பது சரியல்ல என்பதனால் பேசாமல் போனாள் மீனாட்சி.

''உன்னைக் காத்திருக்க வைத்ததற்கு மன்னிச்சுக்கோடி'' என்று தோழியின் அருகில் வந்து அமர்ந்தாள் விசாலம். ''இந்த வேலைக்காரி விஷயத்தில் நான் கொடுத்து வைச்சவள் தான். இந்த மீனாட்சி அதிர்ந்து ஒரு வார்த்தை பேச மாட்டாள்'' என்றாள்.

''அப்படியா?''

''அதுமட்டுமல்ல. எதையுமே எதிர்த்துக் கேட்க மாட்டாள். பாத்திரம் தேய்ப்பதற்குச் சீயக்காய்ப் பொடி, புளிகூட நான் தர மாட்டேன். அவளாகவே சாம்பல் எடுத்து வந்து சுத்தம் செய்து தருவாள்.''

''பரவாயில்லையே!'' என்று வியந்தாள் மிருணாளினி.

கொத்தமல்லி பஜ்ஜியைப் பற்றி விவாதம் நடத்திவிட்டு 'நீயும் இப்படி ஏதாவது எழுதேன்' என்று ஊக்கம் தந்துவிட்டுக் கிளம்பினாள் அவள்.

அவள் போவதற்கும் மீனாட்சி உள்ளே நுழைவதற்கும் சரியாக இருந்தது.

''இந்தாங்கம்மா ஸ்டவ். ஒரு ரூபாய் கொடுக்க வேண்டும் என்கிறான்'' என்று கூறி ஸ்டவ்வை நீட்டினாள் எஜமானியிடம்.

''அடப் பாவி! பத்து நிமிஷ வேலைக்கு ஒரு ரூபாயா?'' என்று அங்கலாய்த்தாள் விசாலம்.

மீனாட்சிக்கு அதைச் சொல்லவே மனம் வரவில்லை. கொஞ்சம் யோசித்தாள்.

''சரி, ஏன் நின்று கொண்டிருக்கிறாய்? போய் உன் வேலையைப் பார்!''

''நீரெல்லாம் நிரப்பியாச்சு. பாத்திரங்களை யெல்லாம் தேய்த்து விட்டுப் போறதுன்னா நேரமாயிடும். அதற்குத்தான்...'' என இழுத்தாள் மீனாட்சி.

''என்ன விஷயம் சொல்லு.''

''எங்க வீட்டுக்காரர் சீக்கிரம் வந்துடுவாரு இன்னிக்கு. கூடவே அவருடைய சிநேகிதர் ஒருத்தரும் வரப் போகிறாராம். ஆக்கி வைக்கணும். நம் வீட்டுப் பாத்திரத்தை எல்லாம் எடுத்துக்கிட்டுப் போறேன். அங்கேயே கழுவிவிட்டுக் காலையில் கொண்டு வந்து தருகிறேன்'' என்றாள் மீனாட்சி.

விசாலத்துக்கு அரை மனசுதான். இருந்தாலும் மீனாட்சியின் வேண்டுகோளுக்கு இணங்கி விட்டாள். ''ஜாக்கிரதை! காலையில் ஒழுங்காகக் கொண்டு வந்து சேர்க்கணும்'' என எச்சரித்தாள் விசாலம்.

''இந்தாங்க, உங்களைத்தானே! பக்கத்துத் தெரு மட்டும் போய் வர வேண்டும். துணைக்குக் கூட வாருங்கள். இருட்டாக இருக்கு. தனியாகப் போக பயமாயிருக்கு.''

''எதற்கு?''

''மீனாட்சி நம் வீட்டுப் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு போயிருக்கிறாள். அப்போது அவளிடம் கொடுத்து விட்டேனே தவிர மனசில் பயமா யிருக்கிறது. எதையாவது விற்றுவிட்டால், அல்லது அடமானம் வைத்து விட்டால் என்ன செய்வது?'' என்றாள்.

''உன் தோழி மிருணாளினி வந்து உன் மனத்தை வேலைக்காரி விஷயத்தில் சரியாகக் குழப்பிவிட்டிருக்கிறாள். சரி கிளம்பு. ராத்திரி

உன்னால் நிம்மதியாகத் தூங்க முடியாது'' என்று எழுந்திருந்தான் ராமன்.

"இந்தா புள்ளே, இந்த டம்ளர்லே மோர் கொடு'' என மீனாட்சியைக் கூப்பிட்டான் தங்கவேலு.

''ஐயையோ! அந்த டம்ளரை அப்பாலே வை. அந்தப் பாத்திரமெல்லாம் என் எஜமானி வீட்டுச் சாமான். நம் குவளை எங்கே போச்சு?'' என்றாள் மீனாட்சி.

''அவங்க வீட்டுச் சாமானை நம் குடிசைக்கு ஏன் எடுத்து வந்தாய்? ஏதாச்சும் காணாமல் போயிடுத்துன்னு வம்பாச்சே?''

'' அது ஒரு கதை மச்சான். கேளு. நீ வேலை செய்யற இடத்திலேயிருந்து ஒரு பவுடர் கொண்டு வந்தாயே, ஞாபகம் இருக்கா?''

''ஆமாம். எங்க ஆராய்ச்சி டிபார்ட்மெண்டிலே, ஃபேக்டரி கழிவுப் பொருளிலிருந்து செய்தது. கிறஸ் விமாமே, பிசுக்கெல்லாம் எடுக்கும்னு சொன்னேனே அதுவா?''

'' அதேதான். அந்தப் பவுடராலே எஜமானி வீட்டுப் பாத்திரங்களைச் சீக்கிரம் கழுவிவிட்டு வந்துடலாம்னு நினைச்சுண்டிருந்தேன். பவுடரையும் எடுத்துப் போனேன்.''

'' உங்க எஜமானி பவுடரை வேண்டாம்னு தள்ளிவிட்டாங்களா?''

''அப்படி ஏன் அவங்க சொல்லப்போறாங்க? அவங்களா காசு கொடுத்து வாங்கித் தந்தாங்க? விஷயமே வேறே. மோர் கொண்டு வந்தப்புறம் சொல்றேன்'' என்று உள்ளே போய்விட்டாள் மீனாட்சி.

"என்ன விசாலம், இப்படி இந்தக் குடிசை வாசலிலேயே நின்று கொண்டிருந்தால் மீனாட்சி ஒரு 'ஸஸ்பென்ஸ்' வைத்து விட்டுப் போய்விட்டாளே!'' என்றான் ராமன்.

'' அதுதானே எனக்கும் மர்மமாயிருக்கு. கொஞ்சம் பொறுங்கள். அதையும் கேட்டு விட்டுக் கதவைத் தட்டலாம்'' என்றாள் விசாலம்.

மோரைக் குடித்துவிட்டுத் தங்கவேலு, '' என்னமோ விஷயம்னியே சொல்லு!'' என்றான்.

'' அந்த அம்மாள் ஒரு ஸ்டவ்வை ரிப்பேர் பார்க்கக் கொடுத்து அனுப்பிச்சாங்க. இவங்க, இவங்க புருஷன் எல்லாரும் எத்தனையோ முயற்சி பண்ணிப் பார்த்து ஒன்றும் முடியாமல் போய் அப்புறம்தான் கொடுத்தாங்க. கடைக்காரன் சரி செய்து கொடுத்ததும், இந்த அம்மாள் சொல்றாங்க: 'பத்து நிமிஷ வேலைக்கு ஒரு ரூபாயா? அக்கிரமம்'னு. ஏன் மச்சான், நீயே சொல்லு. மிஸ்டேக் எங்கே இருக்குன்னு அவன் கண்டு பிடிச்சானே, அதற்கு எவ்வளவு அனுபவம் வேணும்?

'' அதெல்லாம் சரி புள்ளே. அதுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?''

''அட என் செல்ல மச்சானே, புரியவில்லையா? நீ கொடுத்த பவுடரைக் கொண்டு நான் சீக்கிரம் வேலையை முடிச்சப்புறம், அந்த எஜமானி என்ன நினைப்பாங்க? 'இவ்வளவு ஜல்தியில் செய்யக்கூடிய வேலைக்கு அவ்வளவு கூலி மீனாட்சிக்குக் கொடுக்கணுமா மிச்ச நேரத்துக்கு வேறு எதினாச்சியும் இதர வேலை கொடுத்தால் என்ன?' இப்படி நினைப்பாங்களா, மாட்டாங்களா?''

''ஆமாம், மீனாட்சி, அதனால்தான் இங்கே கொண்டு வந்து நேரத்தை மிச்சப்படுத்திட்டியா?'' என்றான் தங்கவேலு.

"என்ன விசாலம்! கதவைத் தட்டாமலே வீட்டுக்குத் திரும்பிவிட்டாய்? பாத்திரங்களை வாங்கிக் கொண்டு போகத்தான் வந்திருக்கிறோம் என்பதே உனக்கு மறந்துவிட்டதா?'' என்றான் ராமன்.

''வேண்டாம். என்னை மீனாட்சி புரிந்து கொண்டுள்ள அளவுக்கு நான் அவளைப் புரிந்து கொள்ளவில்லை. இன்னொருத்தர் சொத்துக்கு ஆசைப்படாமல், விருந்தாளியின் முன் எதிர்த்துப் பேசாமல், அனுபவம், உழைப்பு, நேரத்துக்கு மதிப்பு கொடுக்கத் தெரிந்துள்ள இந்த மீனாட்சியே ஒரு நல்ல பாத்திரம். அவளுக்குமுன் நம்முடையதெல்லாம் எம்மாத்திரம்? காலையில் அவளே கொண்டு வந்து தரட்டும்'' என்றாள் விசாலம் குரல் நெகிழ.



தமிழா தூங்கு!



எல். சுந்தரம்

தூக்கம் ஒரு 'டானிக்'. இது எல்லோருக்கும் அத்தியாவசியத் தேவைதான். ஆனால் தூக்கம் வருவதன் காரணம் என்ன? எதற்காக அது தேவைப்படுகிறது என்பதை இன்னும் யாரும் கண்டுபிடிக்கவில்லை. ஆராய்ச்சியில் உங்களுக்கு ஆர்வம் உண்டானால் இதில் இறங்கிப் பாருங்கள். யார் கண்டது, நோபல் பரிசு உங்களுக்காகக் காத்திருக்கிறதோ என்னமோ?

தூக்கம் என்பது என்ன? உடம்பு தளர்ந்து, அசைவற்று, உணர்வற்று இருப்பதுதான். ஆயினும் தூக்கத்தின்போதுகூட மூளையின் சின்னஞ் சிறிய மின் அலைகள் அடங்குவதில்லை. தூங்கும்போது தசைகள் தளர்வுறுகின்றன. ஆனால் அவை மென்மையாகவோ, பலவீனமாகவோ ஆகிவிடுவதில்லை. கை விரல்கள் குளிர்கின்றன. கால்களின் விரல்கள் உஷ்ணமடைகின்றன.

பகல் போதைவிடத் தூக்கத்தின்போது உடம்பின் உஷ்ணம் அரை டிகிரி குறைகிறது. இரத்த அழுத்தமும் குறைகிறது. கொஞ்ச நேரத்துக்கு இதயத் துடிப்பின் வேகம் கம்மியானாலும் பிறகு பழைய நிலையையே அடைந்து விடுகிறது. மூச்சு விடுவது ஒரே சீராக இருக்கிறது. மூச்சிலும் இரத்தத்திலும் பிராண வாயுவின் அளவு குறைகிறது. கரியமில வாயுவின் அளவு அதிகரிக்கிறது.

எவ்வளவு நேரம் தூங்குவது?

எவ்வளவு நேரம் தூங்குவது? மனிதனுக்கு மனிதன் பதில் வேறுபடும். ஆரோக்கியமான மனிதனுக்குக் குறைந்தபட்சம் ஆறு மணி நேரத் தூக்கம் தேவை. பெரும்பாலான மக்களுக்கு இதற்கு அதிகமாகவே தேவைப்படும்.

பிறந்த குழந்தை பதினெட்டு மணி நேரம் தூங்கும். ஐந்து வயதுக் குழந்தை பன்னிரண்டு மணி நேரமும் டீன்ஏஜ்ஜில் எட்டு முதல் ஒன்பது மணி நேரமும் தூங்க வேண்டும். மனிதனுக்கு மனிதன் மட்டுமின்றி நாட்டுக்கு நாடு தூக்கத்தின் அளவு வேறுபடும். உஷ்ணப் பிரதேச மக்கள் அதிக நேரம் தூங்குவார்கள்.

இரவு வேளையில் ஒரே தடவையில் ஒரு நாளைக்குத் தேவைப்படும் தூக்கத்தை முழுமையாகப் பெறுவதே பெரியவர்களுக்குச் சிறந்தது. ஆனால் குழந்தைகள் ஒரு நாளைக்கு இரண்டு மூன்று தடவைகூடத் தூங்கலாம். பெரும்பாலான மிருகங்களும் பறவைகளும் பல தடவை தூங்குவனவே. இதற்கு விதிவிலக்கு பாம்புகளும் கேனரி எனப்படும் ஒருவகை பாடும் பறவையும்.

ஒருவன் எட்டு மணி நேரம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாலும் கூட அந்த ஆழத்தின் அளவு மாறுபடும். முதல் சில மணி நேரத்தில் அதிகமாக ஓய்வு கிடைப்பதாய்ச் சொல்ல முடியாது. தூங்கத் தொடங்கி ஐந்தாவது அல்லது ஆறாவது மணி நேரத்தில்தான் மிக ஆழ்ந்த உறக்கம் கிட்டும். இதயத் துடிப்பு ஆராய்ச்சி இதை உணர்த்துகிறது. திருடர்களும் இதை உணர்ந்துதானே இருக்கிறார்கள்!


தூக்கமின்மைத் துயர்

போதிய அளவு தூக்கம் கிடைக்கவில்லையானால்...? காலைச் சிற்றுண்டி அருந்தும்போது கணவன் மனைவியிடம் வள்ளென்று விழுவான். மனைவி அயர்ந்து தூங்கியிருந்தாளானால் இந்தத் தாக்குதலைச் சமாளிப்பாள். ஒருவேளை அவள் உறக்கமும் கணவனின் குறட்டையால் பாதிக்கப்பட்டிருந்ததோ, தொலைந்தது! அவளும் பொறுமை இழந்து படபடப்பாள். பிறகு கேட்க வேண்டுமா? ஒரே ரகளைதான். சாதாரணமாகச் சந்தோஷமாகவே இருப்பவன் தூக்கம் கெட்டால் சோர்வுற்றுப் போய்ச் சதா சீறிக் கொண்டிருப்பான்.

ஹிட்லர் ஆட்சியில்...

தூக்கமின்மையால் தொடர்ந்து தவிப்பவர்களின் மூளை ரொம்பவும் பாதிக்கப்படும். ஞாபக சக்தி குறையும். உணர்ந்து அறியும் ஆற்றல் குன்றும். ஹிட்லர் ஆட்சியின்போது அரசியல் கைதிகளின் மூளையைக் குழப்ப இந்தத் தந்திரத்தைத்தான் கையாண்டார்கள். அவர்களைத் தூங்க விடாமல் காவலர்கள் கவனித்துக் கொண்டார்கள்.


தூக்கமின்மையால் பாதிக்கப்பட்டவர்களின் நடத்தை மயக்க மருந்து அல்லது மது அருந்தியவர்களின் நடத்தையைப் போலிருக்கும். பார்ப்பனவற்றைச் சட்டென்று இனம் கண்டு கொள்ளும் ஆற்றல் பழுதுபடும். உட



வின் தானியங்கு தன்மைகள் மங்கித் தாமதப்படும். உயர்ந்தது தாழ்ந்தது; நல்லது கெட்டது போன்றவற்றைத் தீர்மானிக்கும் சக்தி பாதிக்கப்படும். இதனாலெல்லாம் மனக் குழப்பமும், உடல் சிரமமும் ஏற்படும். போதிய அளவு தூக்கம் பெறாத கலைஞனின் கற்பனை வளம் மங்கும்.

பரீட்சை சமயத்தில்...

பரீட்சை எழுதுவதற்கு முன் பல மாணவர்கள் இரவு நீண்ட நேரம் படிக்கிறார்கள். இரண்டு மணி நேரம் தூக்கம் குறைந்தால் அது சராசரியில் செலவாகும் சக்தியைப்போல் மூன்று மடங்கு சக்தியை உறிஞ்சிவிடுகிறது. உருப்போடுகிறவர்கள் ரொம்ப நேரம் கண் விழித்துப் படித்தால் பரீட்சையில் ஜமாய்த்து விடலாம் என்று எண்ணுகிறார்கள். பார்ப்பதற்கு என்னவோ அவர்கள் ரொம்ப ரொம்பப் படிக்கிறார்கள்தான். ஆனால் அவர்கள் மனத்தில் நிலைப்பது கொஞ்சம்தான். மேலும் பரீட்சை எழுதும்போது அவர்களுடைய செயல் திறன் குறைகிறது. நிகர விளைவு—பரீட்சையில் நன்றாக எழுதுவதற்குப் பதில் அதற்கு நேர்மாறான பலனே கிட்டுகிறது.



எனவே ஆண்டு முழுதுமே கொஞ்சம் கொஞ்சமாகப் படித்து மனத்தில் பதிய வைத்துக் கொள்ளவும் பரீட்சைக்கு முன் நன்றாகத் தூங்கவும் வேண்டும். ஆனால் இப்படி எங்கே நடக்கிறது? சினிமா பார்க்கவே நேரம் போதவில்லையே!

தூக்கத்தின் கால அளவும் ஆழ்ந்த தன்மையும் மட்டுப்பட்டால் அது இன்ஸோம்னியா என்ற வியாதி. இதற்குப் பல காரணங்கள் உண்டு. அதி தீவிரச் சுறுசுறுப்புடன் இயங்கும் மனம் அல்லது மிக அதிகமாய்த் தூண்டிவிடப்பட்ட மத்திய நரம்பு மண்டலம் இவை மட்டுமின்றி, கவலை, விசாரம் ஆகியவையும் தூக்கமின்மைக்குக் காரணங்கள். இந்நோயினால் உயிராபத்து ஏதுமில்லை என்றாலும் உடலையும் மனத்தையும் இது பலவீனப்படுத்திவிடும்.

கவலைகளை ஒதுக்க வழி

தூங்கப் போகும்போது கவலைகளை ஒதுக்கிவிடவேண்டும். இதைச் சொல்வது எளிது. செயல்படுத்துவது சிரமம். கவலை, விசாரம் இல்லாவிட்டால் தூக்கம் வரும். ஆனால் விசாரப்படாமல் இருப்பது எப்படி? விடா முயற்சியாலும் பழக்கத்தாலும்தான் இதைச் சாதிக்க வேண்டும். கவலை கவ்வும் சொந்த விவகாரங்களையோ அல்லது காரியாலய அலுவல்களையோ பற்றி எண்ணாமல் நல்ல பாட்டைக் கேட்பதோ அல்லது சுவாரசியமான புத்தகத்தைப் படிப்பதோ பலன் தரும். செய்யவேண்டிப் பாக்கி இருக்கும் காரியங்களை டைரியில் குறித்து வைத்துவிட்டால் மறக்க மாட்டோம் என்ற அளவில் ஓரளவு நிம்மதி பிறக்கும். எப்படியாவது முயன்று உடலையும் உள்ளத்தையும் தளர்த்தி இலேசாக்குவதே நோக்கமாக இருக்க வேண்டும். இறைவனைத் துதிக்கும் வடமொழி சுலோகங்களையோ தமிழ்ப் பாடல்களையோ மனத்துக்குள் கூறி இஷ்ட தெய்வத்தினிடம் கருத்தைச் செலுத்தலாம்.

சூழ்நிலை மாற்றங்கள் சிலரது தூக்கத்தைக் கெடுக்கும். ஜமக்காளத்தை விரித்து உறங்கியவர்களுக்கு மெத்தையில் படுத்தால் தூக்கம் வராது. ஊர் அல்லது இடம் மாறினால் கூடச் சிலருக்கு உறக்கம் பிடிக்காது.

தூக்கமின்மை ஒரு வியாதி என்றால் அதிகமாகத் தூங்குவதும் ஒரு வியாதிதான். இதற்கு ஹைபர்ஸோம்னியா என்று பெயர். அதிக காலம் தூங்குவதோ அல்லது மிக ஆழ்ந்த நித்திரையில் இருப்பதோ அல்லது அடிக்கடி தூங்குவதோ இந்த வியாதியில் சேர்ந்ததுதான். சுரப்பிகள் சில சரியாக இயங்காததால் இந்த நிலை ஏற்படக் கூடும்.

தூக்க வியாதி

இந்த வியாதி ஒட்டுவாரொட்டியாகப் பரவவும் வழியுண்டு. வைரஸ் எனப்படும் நுண் கிருமிகளில் ஒருவகை நரம்பு மண்டலத்தைத் தாக்கும்போது இவ்வியாதி தோன்றிப் பரவும். 1926ல் உலகின் பல பகுதிகளில் தூக்க வியாதி பரவியது. இது இன்று பெரும்பாலும் அடக்கி ஆளப்பட்டு விட்டது என்றாலும் ஆப்பிரிக்காவில் இன்னமும் இருக்கிறது. ஸெட்ஸி எனப்படும் ஒரு வகை ஈ மூலம் இந்த வியாதியைத் தோற்றுவிக்கும் வைரஸ் கிருமி பரவுகிறது. உலக சுகாதாரக் கழகம் இதனைக் கட்டுப்படுத்த முயன்று வெற்றி பெற்று வருகிறது.

தூக்க மாத்திரைகளைச் சாப்பிடுவது சற்றும் நல்லதல்ல. வேறு வழியே இல்லை என்ற நிலையில்தான் அதனை அணுக வேண்டும்.

இந்தப் பழக்கத்துக்குப் பலர் அடிமைகளாகி விடுவர். போதைப் பொருள்களை அருந்துவதை விட இப்பழக்கம் கொடியது.

இதே போல் தூக்கம் வராமல் தடுக்கவும் சில மருந்துகள் உண்டு. இவை மத்திய நரம்பு மண்டலத்தை ஊக்குவிக்கும் மருந்துகள். இதனால் உடம்பு ரொம்ப சுறுசுறுப்பாய் இருப்பது போலவும் நிறைய வேலை செய்யும் ஆற்றலைப் பெற்றுவிட்டது போலவும் தன்னம்பிக்கை பிறப்பது போலவும் தோன்றும். ஆனால் அதிகமாக உள்ளே "உள்ளே இம்

மருந்துகள் உடலையும் உள்ளத்தையும் சின்னா பின்னப்படுத்திவிடும்.

பெண்கள் பாக்கியசாலிகள்

எங்கு தூங்குவது, எப்படித் தூங்குவது, எந்தத் திக்கில் தலை வைத்துப் படுப்பது, எந்தப் பக்கம் ஒருக்களித்துப் படுப்பது என்றெல்லாம் எழுப்பப்படும் கேள்விகளும் சரி, அவற்றுக்கான பதில்களும் சரி அநாவசியமானவை. காற்றோட்டமான இடத்தில் போர்வையால் முகத்தை மூடிக்கொள்ளாமல் தூங்க வேண்டும் என்பது தவிர வேறு நிபந்தனை ஏதும் இல்லை, விஞ்ஞானபூர்வமாக.

ஆண்களை விடப் பெண்கள் அதிகம் தூங்குகிறார்கள் என்பது சுவையான ஓர் உண்மை. ஒருவேளை ஒப்புநோக்குகையில் பெண்களுக்குக் கவலைகள் குறைவாக இருக்கலாம்.

சீக்கிரம் படுக்கப் போவது ஆண்மைக்கு அழகல்ல என்று சிலர் எண்ணுகிறார்கள். அன்றையத் தினம் அவர்கள் போதிய அளவு உழைக்காது போனால், 'இதைக் கவனித்து விடலாமே, அதைச் செய்து முடித்து விடலாமே' என்று குற்ற உணர்ச்சியுடன் எண்ணுவர். இவர்கள் தங்கள் உடலுக்குத் தேவையான தூக்கத்தைத் தருவார்களேயானால் பகலில் அவர்கள் செயலாற்றல் மிகுந்து வாழ்க்கை இன்பமாய் விளங்கும். தூக்கம், நாம் இழந்த சக்தியை மீண்டும் சேகரித்துத் தரும் இனிய நண்பன்; கவலை, விசாரம் ஆகியவற்றுக்கு அருமருந்து.

தூங்குகிற நேரம் நல்ல நேரம்; வீணான நேரம் அல்ல. தமிழாக்கம்: **குட்டிகிருஷ்ணன்**



யார் அவர்?

அது 1944ம் வருடம். அந்தப் பத்திரிகை ஆசிரியர் தம் பத்திரிகைக்காகக் கடன் வாங்குவதற்கு ஒரு பாங்குக்குப் போனார். பாங்க் மானேஜரிடம் பத்திரிகையின் நிலைமையையும், தமக்குள்ள கடன்களின் கணக்கையும் விளக்கினார், பொய் சொல்ல விரும்பாத அந்த ஆசிரியர். உடனே பாங்க் மானேஜர் "தமது உண்மையான கடன்களைக் கூறிப் பணம் கேட்ட ஒரே நபர் நீங்கள்தான். மற்றவர்களெல்லாம் ஜம்பத்துக்காகத் தம் வருமானத்தைப் பற்றி மட்டும் கூறுவார்களே தவிர, செலவினத்தைக் காட்ட மாட்டார்கள். அதனால் உங்களது நேர்மையும், சத்தியமும் எனக்குப் பிடித்திருக்கின்றன. உங்களுக்கின்றி வேறு யாருக்கு உதவுவது?" என்றார்.

பணத்தைத் திருப்பிக் கட்டுவதிலும் கறாராக விளங்கினார் அந்த ஆசிரியர்! யார் தெரியுமா அவர்? அதோ ஹெலிகாப்டரில் அமர்ந்து பறக்கத் தயாராயிருக்கிறாரே அந்தக் காசா கப்பா ராவ்தான்!

- சம்பத் குமாரி ஆதாரம்: 'ஜெர்க் லேட்'

கம்ப்யூட்டர் வைத்தியர்!

எந்தக் கோளாறு காரணமாக வயிற்று வலி ஏற்பட்டுள்ளது என்பதை ஒரு கைதேர்ந்த வைத்தியரை விடக் கம்ப்யூட்டர் எளிதாகக் கண்டறிந்து விடுகிறது. லீட்ஸ் சர்வ கலாசாலை ஆராய்ச்சிக் கோஷ்டியினர் இந்தக் கம்ப்யூட்டர் வைத்தியர் மிகவும் நம்பத்தகுந்தவர் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். ஆயின் அதே சமயத்தில் டாக்டர்களுக்கு உதவுவதற்காகவே இந்தக் கம்ப்யூட்டர் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் டாக்டர்கள் பணியை அப்படியே மேற்கொண்டு விடுவதற்காக அல்ல என்றும் விளக்கியுள்ளனர்.

கம்ப்யூட்டரின் நினைவுக்கு அதனுள் நூற்றுக்கணக்கான நோயாளிகளைப் பற்றிய சரித்திரங்கள் புள்ளி விவரங்களாகச் செலுத்தி வைக்கப்படுகின்றன. இந்த ஆதாரங்களின் பேரில்தான் கம்ப்யூட்டர் புதிய கேஸ்களைப் பற்றிய தன் முடிவைக் கூறுகிறது.

ஒரு நோயாளியை டாக்டர் பரிசோதித்துக் கேள்வி கேட்கும்போது, ஆராய்ச்சிக் குழுவினர் நோயாளியின் பதில்களைக் கம்ப்யூட்டருக்குள் செலுத்துகின்றனர். நோயாளிக்கு என்ன வியாதி என்பதைக் கம்ப்யூட்டர் நிர்மானித்துச் சொல்கிறது.

இந்த மாதிரிக் கம்ப்யூட்டர் தீர்ப்புகளில் 91.5 சதவிகித கேஸ்கள் சரியான விடைகளைக் காண்கின்றன. வைத்தியரின் முடிவுகளோ 81 சதவிகிதம்தான் சரியாக அமைகின்றன. கம்ப்யூட்டர் வைத்தியரால் ஆஸ்பத்திரிகளுக்குச் செலவுகள் குறையும் என்று ஆராய்ச்சித் தலைவர் கூறுகிறார். - பி.எஸ்.எம்.

-பிரிட்டிஷ் தகவல் நிலையம்



'ஜிவ்'வென்று வளரும் ஜப்பான்

ஜப்பானிய ரயில் ஒன்றில் ஓர் இந்தியர் பயணம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு எதிரே இருந்த ஒரு ஜப்பானியர், ரயிலில் உள்ள கிழிந்த ஆசனத்தை ஊசியால் தைத்துக் கொண்டிருந்தார். இதைக் கண்ட இந்தியர், "என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்க, ஜப்பானியர் சொன்னார்: "ரயில்கள் மக்களின் சொத்து. எனவே என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன்!"

-சம்பத் குமாரி

ஆதாரம்: தம்மத


Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam



உடம்பு வலியைப் போக்குகிறது 'ஒரே ஒரு

ஸாரிடான்

'ரோஷ்'



உடல் வலியால் பாதிக்கப்படும்போது ஒரு ஸாரிடான் சாப்பிடுங்கள். ஸாரிடானில் மட்டுமே உடம்பு வலியை விரைவில் குணப் படுத்தும் சக்தி அடங்கியுள்ளது. அது உங்களை உற்சாகப்படுத்தியவாறே வலியுடன் இணைந்த சோர்வையும் அயர்ச்சியையும் முறியடிக்கிறது. அதுவே ரோஷின் சர்வதேச ஆராய்ச்சியின் விளைவான ஸாரிடானின் விசேஷ ஃபார்முலாவின் தனிச் சிறப்பாகும். தவிர, ஸாரிடான் தலைவலி, பல்வலி மற்றும் அயர்ச்சியினால் ஏற்படும் வலிகளிலிருந்து நிவாரண மளிக்கிறது. ஒன்றே ஒன்று சாப்பிட்டால் போதுமானது.

ஸாரிடான் மட்டுமே நிவாரணமளிக்கிறது. சோர்வை நீக்குகிறது. புத்துயிரூட்டுகிறது.

தரமான ஒரு ரோஷ் தயாரிப்பு

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

ஸ்ரீலங்காவில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)